# வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## TNPSC
## நடப்பு நிகழ்வுகள்

(A book for TNSPSC Examination)

**ஜனவரி – 2023**

An ISO 9001: 2015 Institution | Providing Excellence Since 2011


**Head Office**

Old No. 52, New No. 1, 9th Street,
F Block, 1st Avenue Main Road, (Near Istha Siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600 102.
Phone: 044-2626 5326 | 98844 21666 | 98844 32666

Branches

**SALEM**
No. 189/1, Meyanoor Road,
Near ARRS Multiplex, (Near Salem
New Bus Stand), Opp. Venkateshwara
Complex, Salem - 636 004.
**Ph: 0427-2330307 | 95001 22022**

**KOVAI**
No. 347, D.S. Complex
(3rd floor), Nehru Street,
Near Gandhipuram Central Bus
Stand, Ramnagar, Kovai - 641 009.
**Ph: 75021 65390**

**MADURAI**
No. 199, Dharshini Tower,
1st Floor, Vaigai Colony,
Anna Nagar,
Madurai - 625 020.
**Ph: 91500 21999 | 91500 21998**


**TIRUNELVELI**
No. 58, IVY Towers, 3rd Floor, Palayam-
kottai, Near Palai Bus Stand, (Next to
Muthamil Hospital),
Tirunelveli - 627 002. **Ph: 91500 10079**

**THANJAVUR**
Muthu Complex, (Pantaloons Show-
room Basement) No. 243, Cauvery
Nagar, Opp. New Housing Unit,
Thanjavur - 613 005.
**Ph: 78711 69099 | 78715 71819**

**KOVILPATTI**
No. 15, Kathiresan Kovil Road,
Behind Kaliamman Temple,
Kovilpatti – 628 501.
**Ph: 90037 90335 | 81222 80685**

www. vetriias. com

# முகவுரை



**மு.சண்முகம்**
நிறுவனர்
வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## இயக்குநர் வாழ்த்து மடல்

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.**

பொருள்:
ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்த படியே செயல்புரிவதில் உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய வெற்றி ஆட்சிப்பணிகள் பயிற்சி நிறுவனம் சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுப்படுத்தும் வகையில் நடத்தப்படும் அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

மு.சண்முகம்
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ் பயிற்சி நிறுவனம்

வெளியீட்டாளர்

வெற்றி சண்முகம் பப்ளிகேஷன்

எஃப்–பிளாக், புதிய எண். 1, 3–வது மாடி, 9–வது தெரு, 1–வது அவன்யூ, பிராதான சாலை,
சிந்தாமணி, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை–600 102.
தொலைபேசி: 044–26265326

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்

வரலாறு 01



19 அரசியல் அறிவியல்
புவியியல் 21



24 பொருளாதாரம்
அறிவியல் 29



தினசரி
தேசிய நிகழ்வு 31



54 சர்வதேச நிகழ்வு

தமிழ்நாடு 57




# 1. வரலாறு





## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஜனவரி 01 | பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் உருவாக்க தினம் | ▪ "பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது" அதன் 64வது உருவாக்கத் தினத்தினைக் கொண்டாடியது.<br>▪ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது 1958 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.<br>▪ இந்திய ஆயுதத் தொழிற்சாலைகளின் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி இயக்குனரகத் தொழில்நுட்ப மேம்பாட்டு ஸ்தாபனம் ஆகியவற்றினைப் பாதுகாப்பு அறிவியல் அமைப்புடன் இணைத்ததையடுத்து இந்த அமைப்பானது உருவாக்கப்பட்டது. |
| ஜனவரி 04 | உலக பிரெய்லி தினம் | ▪ பார்வையற்றோருக்கான மனித உரிமைகளை உணர்ந்து கொள்வதில் தகவல் தொடர்பு சாதனமாக விளங்கும் பிரெய்லி எழுத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது,<br>▪ ஜனவரி 04 ஆம் தேதியானது, பிரெய்லி எழுத்து முறையைக் கண்டுபிடித்த லூயிஸ் பிரெய்லி அவர்களின் பிறந்த நாளாகும்.<br>▪ பிரெய்லி அவர்கள் 1809 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் தேதியன்று பிரான்சு நாட்டில் பிறந்தார்.<br>▪ பார்வையற்ற நபர்கள் படிப்பதற்கும் எழுதுவதற்குமான ஒரு வாய்ப்பினை அளித்து, அவர்கள் பிறரை சார்ந்து இருக்கும் நிலையை தவிர்த்துச் சுதந்திரமாக செயல்படும் நிலையை அதிகரித்து, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை அணுகச் செய்வதற்கான வாய்ப்பினை வழங்கும் ஒரு முறையினை அவர் உருவாக்கினார். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஜனவரி 09 | பிரவாசி பாரதிய திவாஸ் | ▪ இது வெளிநாடு வாழ் இந்தியர் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.<br>▪ இது இந்தியாவின் மேம்பாட்டிற்கு வெளிநாடுகளில் வாழும் இந்தியச் சமூகத்தினரின் பங்களிப்பு மற்றும் சாதனைகளைக் குறிக்கும் வகையில் ஜனவரி 09 ஆம் தேதியன்று கொண்டாடப் படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.<br>▪ 1915 ஆம் ஆண்டில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்திய நாட்டிற்குத் திரும்பிய நிகழ்வினையும் இந்தத் தினம் நினைவு கூர்கிறது.<br>▪ இத்தினமானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.<br>▪ இந்த நாளில் பிரவாசி பாரதிய சம்மான் விருதுகள் வழங்கப்படுகின்றன.<br>▪ இந்த விருதுகள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன – அவையாவன பிரவாசி பாரதிய சம்மான், பிரவாசி பாரதிய சம்மான் தங்கம், மற்றும் பிரவாசி பாரதிய சம்மான் வாழ்நாள் சாதனை ஆகியனவாகும். |
| ஜனவரி 12 | தேசிய இளைஞர் தினம் | ▪ இந்தியாவின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான சுவாமி விவேகானந்தர் அவர்களின் பிறந்தநாளை நினைவு கூரும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.<br>▪ அவர் எப்போதும் நாட்டின் இளைஞர்களை ஊக்குவித்து, நாட்டின் மேம்பாட்டில் இளைஞர்களைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தினை முன்வைத்தார்.<br>▪ அவர் ஒரு தத்துவவாதி, சமூக சீர்திருத்தவாதி மற்றும் சிந்தனையாளர் ஆவார்.<br>▪ சுவாமி விவேகானந்தர் அவர்கள்தான் கடைப்பிடித்து வாழ்ந்த தத்துவம் மற்றும் இலட்சியங்களைப் பரப்புவதே இந்தக் கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய குறிக்கோள் ஆகும்.<br>▪ இந்திய அரசாங்கமானது 1984 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் தினத்தை அறிவித்தது. |



| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஜனவரி 15 | 75வது இந்திய இராணுவ தினம் | ▪ இது இந்திய இராணுவத்தின் முதல் இந்தியப் படைத் தளபதியான ஜெனரல் (ஃபீல்டு மார்ஷல்) K.M.கரியப்பா அவர்களின் சாதனைகளை நினைவு கூருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.<br>▪ 1949 ஆம் ஆண்டில் இந்நாளில் தான், கடைசி பிரிட்டிஷ் தலைமைப் படைத் தளபதியான ஜெனரல் சர் FRR புச்சரிடமிருந்து இந்திய இராணுவத்தின் தலைமைப் பொறுப்பை கரியப்பா ஏற்றார்.<br>▪ இவர் சுதந்திர இந்தியாவின் முதல் இந்தியத் தளபதி ஆனார்.<br>▪ கரியப்பா மற்றும் பாதுகாப்புப் படைகளைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இராணுவ தினம் கொண்டாடப்படுகிறது. |
| ஜனவரி 16 | தேசிய புத்தொழில் நிறுவனங்கள் தினம் | ▪ 2021 ஆம் ஆண்டில் ஜனவரி 16 ஆம் தேதியை தேசியப் புத்தொழில் நிறுவன தினமாக பிரதமர் அறிவித்தார்.<br>▪ இந்தியப் புத்தொழில் நிறுவனங்களின் சூழலமைவினைப் புகழுறச் செய்திட வேண்டுவதற்காகவும், அதனை மேம்படுத்தச் செய்வதற்காகவும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன.<br>▪ புத்தொழில் இந்தியா திட்டமானது 2016 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.<br>▪ இது தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறையின் ஒரு முன்னெடுப்பாகும்.<br>▪ புத்தொழில் இந்தியா புத்தாக்க வாரம் ஆனது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 10 முதல் 16 ஆம் தேதி வரை அனுசரிக்கப்பட்டது. |
| ஜனவரி 24 | தேசிய பெண் குழந்தைகள் தினம் (NGCD) | ▪ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் 2008 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 அன்று அனுசரிக்கப்படுகிறது<br>▪ குறிக்கோள்: பாலினப் பிரிவினையைக் குறைக்க பெண் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தல் மற்றும் பெண் கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்<br>குறிப்பு:<br>▪ தேசிய பெண் குழந்தைகள் தினம் 2023 நிகழ்வானது பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, கல்வி அமைச்சகம் (MoE) மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜனவரி 24** | **சர்வதேச கல்வி தினம்** | ▪ ஐக்கிய நாடுகள் சபையால் ஆண்டுதோறும் ஜனவரி 24 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது<br>▪ குறிக்கோள்: அமைதி மற்றும் வளர்ச்சியில் கல்வியின் பங்கைக் கொண்டாடுவது<br>▪ கருப்பொருள்: "மக்களிடம் முதலீடு செய்ய, கல்விக்கு முன்னுரிமை கொடுங்கள்"<br>குறிப்பு:<br>▪ ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) 3 டிசம்பர் 2018 அன்று தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது மற்றும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 ஐ சர்வதேச கல்வி தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.<br>▪ 2019 ஜனவரி 24 அன்று 1வது சர்வதேச கல்வி தினம் அனுசரிக்கப்பட்டது<br>ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) பற்றி<br>▪ உருவான ஆண்டு – 1945<br>▪ இது ஐக்கிய நாடுகளின் தலைமை கொள்கை உருவாக்கம் மற்றும் பிரதிநிதித்துவ அமைப்பாகும்<br>▪ தலைமையகம் – நியூயார்க் நகரம், அமெரிக்கா |
| **ஜனவரி 24** | **சர்வதேச கல்வி தினம், 2023** | ▪ இது உலகம் முழுவதும் ஆண்டுதோறும் ஐக்கிய நாடுகள் சபையால் ஜனவரி 24 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ குறிக்கோள்: அமைதி மற்றும் வளர்ச்சியில் கல்வியின் பங்கைக் கொண்டாடுவது.<br>▪ கருப்பொருள் : "மக்களிடம் முதலீடு செய்ய, கல்விக்கு முன்னுரிமை கொடுங்கள்".<br>குறிப்பு:<br>▪ ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA)<br>▪ 3 டிசம்பர் 2018 அன்று தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 ஆம் தேதியை சர்வதேச கல்வி தினமாக அனுசரிக்கிறது.<br>▪ முதலாவது சர்வதேச கல்வி தினம் ஜனவரி 24 2019 அன்று அனுசரிக்கப்பட்டது.<br>ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) பற்றி:<br>▪ உருவான ஆண்டு – 1945<br>▪ இது ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை கொள்கை உருவாக்கம் மற்றும் பிரதிநிதித்துவ அமைப்பாகும்.<br>▪ தலைமையகம் – நியூயார்க் (அமெரிக்கா) |



| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜனவரி 24** | **தேசிய பெண் குழந்தைகள் தினம் (NGCD)** | ▪ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் 2008 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ குறிக்கோள்: பாலினப் பிளவைக் கட்டுப்படுத்தி பெண் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தல்.<br>▪ பெண் கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.<br>குறிப்பு:<br>▪ தேசிய பெண் குழந்தைகள் தினம் 2023 நிகழ்வானது கல்வி அமைச்சகத்தின் (MoE) பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவு துறையால் ஒருங்கிணைக்கப்படுகிறது. |
| **ஜனவரி 28** | **தரவு தனியுரிமை தினம்** | ▪ தரவு தனியுரிமை தினம் அல்லது தரவு பாதுகாப்பு தினம் ஆண்டுதோறும் ஜனவரி 28 அன்று அனுசரிக்கப்படும் ஒரு சர்வதேச முயற்சியாகும்<br>**குறிக்கோள்:**<br>▪ தனிநபர்களை உணர்த்துதல் மற்றும் தனியுரிமை நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை பரப்புதல் தனியுரிமை கலாச்சாரத்தை உருவாக்க ஒவ்வொருவரும் தங்கள் தனியுரிமை பொறுப்புகளை சொந்தமாக வைத்திருக்க ஊக்குவிக்கிறது.<br>▪ இந்தியாவில் இந்திய தரவு பாதுகாப்பு கவுன்சில் (DSCI) ஆல் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. கருப்பொருள் : "தனியுரிமையை முதலில் சிந்தியுங்கள்".<br>DSIC பற்றி<br>▪ தொடக்கம் – 2008.<br>▪ இது ஒரு இலாப நோக்கற்ற, இந்தியாவில் தரவுப் பாதுகாப்பிற்கான தொழில்துறை அமைப்பாகும், இது தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் சங்கத்தால் (NASSCOM) அமைக்கப்பட்டது.<br>▪ குறிக்கோள்: சிறந்த நடைமுறைகள், தரநிலைகளை நிறுவுவதன் மூலம் மின்வெளியை பாதுகாப்பானதாகவும் மற்றும் நம்பகமானதாகவும் மாற்றுதல் மற்றும் சைபர் பாதுகாப்பு மற்றும் தனியுரிமைக்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| | **உலக தொழுநோய் தினம்** | ▪ இது ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தின் கடைசி ஞாயிறு அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது<br>குறிக்கோள்:<br>▪ நோயினால் ஏற்படும் களங்கத்திற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்<br>▪ இது ஒரு வகை பாக்டீரியாவால் பரவும் நோய் என்பதையும் இதனை எளிதில் குணப்படுத்த முடியும் என்பதை பொது சமூகத்திற்கு உணர்த்துவது<br>▪ தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களை கொண்டாடுவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது<br>▪ கருப்பொருள் : "இப்போதே செயல்படுங்கள்: தொழுநோய்க்கு முடிவு கட்டுங்கள்"<br>குறிப்பு:<br>▪ ஐக்கிய நாடுகள் சபையானது நிலையான வளர்ச்சியை அடைவதன் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் தொழுநோயை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது |
| **ஜனவரி 30** | **உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம்** | ▪ இது உலக சுகாதார நிறுவனத்தால் (WHO) ஆண்டுதோறும் உலகம் முழுவதும் ஜனவரி 30 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>குறிக்கோள்:<br>• உலகெங்கிலும் உள்ள ஏழை மக்கள் மீது புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்களின் (NTDs) பேரழிவு தாக்கம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது<br>• மக்கள் அனைவரையும் இந்த வகையான நோய்களைக்கட்டுப்படுத்த, அவற்றை ஒழிக்க மற்றும் நிர்மூலமாக்க அழைப்பது.<br>▪ கருப்பொருள்: "இப்போது செயல்படுங்கள், ஒன்றாகச் செயல்படுங்கள், புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களில் கவனம் செலுத்துங்கள்"<br>WHO பற்றி<br>▪ 1948 இல் நிறுவப்பட்டது<br>▪ தலைமையகம்: ஜெனிவா, சுவிட்சர்லாந்து<br>▪ இயக்குநர் ஜெனரல்: டாக்டர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ்<br>▪ உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பை விரிவுப்படுத்துவதற்கான உலகளாவிய முயற்சிகளை வழிநடத்துகிறது. |



# 1.2 பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### எல்லை சவால்களை இந்தியா வெற்றிகரமாக எதிர்கொள்ளும்

- எல்லையில் ஏற்படக்கூடிய சவால்களை சமாளித்து நாட்டைக் காக்கும் திறன் இந்தியாவிடம் உள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.
- எல்லையில் ரூ.724 கோடி மதிப்பில் 22 பாலங்கள் உள்பட 28 உள் கட்டமைப்புகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் லடாக்கில் எட்டு, அருணாசல பிரதேசத்தில் ஐந்து, ஜம்மு–காஷ்மீரில் நான்கு, சிக்கிம், பஞ்சாப், உத்தரகண்டில் தலா தலா மூன்று, ராஜஸ்தானில் இரண்டு திட்டங்கள் அடங்கும்.
- கடந்த 2021இல் எல்லைச் சாலைகள் அமைப்பு 102 உள்கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றியது. தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள 28 திட்டங்களுடன் சேர்த்து 2022இல் 103 உள்ட்டமைப்புத் திட்டங்களை எல்லைச் சாலைகள் அமைப்பு நிறைவேற்றியது.

### ஜஎன்எஸ் பாஸ் கடற்படை விமானதளம்

- அந்தமான் நிக்கோபாருக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாதுகாப்புத் துறை அமைச்சர் கிரேட் நிக்கோபார் தீவில் உள்ள 'ஜஎன்எஸ் பாஸ்' கடற்படை விமானத்தளத்தை பார்வையிட்டார்.
- முப்படைகளும் ஒருங்கிணைந்து செயலாற்றும் இந்தியாவின் முதலாவது கூட்டுப் படைப்பிரிவு அந்தமான் நிக்கோபாரில் அமைந்துள்ளது. போர் உள்ளிட்ட சூழல்களை எதிர்கொள்வதற்கான இதன் தயார்நிலை குறித்து ஆராயும் வகையில் இருநாள்கள் பயணமாக மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் அந்தமான் நிக்கோபாருக்குச் சென்றார்.
- கிரேட்டர் நிக்கோபார் தீவின் கேம்ப்பெல்பேவில் உள்ள ஜஎன்எஸ் பாஸ் கடற்படை விமான தளத்துக்கு சென்று பார்வையிட்டார்.
- மலாக்கா நீரிணை உள்பட கிரேட் நிக்கோபார் மற்றும் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவு வரையிலுமான கடற்பகுதியை இந்த கடற்படை விமானதளம் கண்காணித்து வருகிறது. மலாக்கா நீரிணை உலகின் மிக முக்கியமான கடல் வணிகப் பாதையாகும்.
- இந்திய பெருங்கடல் மற்றும் பசிபிக் பெருங்கடலுக்கு இடையே உள்ள இந்த குறுகிய நீரிணை, உலகின் மிகப் பெரும் பொருளாதார நாடுகளான சீனா, ஜப்பான், மத்திய கிழக்கு மற்றும் தென் கொரியா உள்ளிட்ட நாடுகளை இணைக்கிறது.

### எல்லையில் பயன்படுத்த ஆளில்லா விமானம் வடிவமைப்பு

- இமயமலையை ஒட்டிய எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவரும் ராணுவ வீரர்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்லவும் எதிரிகளின் எல்லைப்பகுதிகளுக்குச் சென்று வெடிகுண்டு தாக்குதல் நடத்தும் வகையிலும் திறன்கொண்ட ஆளில்லா விமானத்தை வடிவமைத்துள்ளதாக மத்திய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) அதிகாரிகள் தெரிவித்தனர்.
- மகாராஷ்டிர மாநிலம் நாகபுரியில் 108–ஆவது இந்திய அறிவியல் மாநாடு நடைபெற்று வருகிறது.
- இந்த மாநாட்டில் காட்சிப்படுத்தப்பட்ட ஆளில்லா விமானம் குறித்து டிஆர்டிஓ அதிகாரிகள் கூறியதாவது:
- பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் இந்த ஆளில்லா விமானம் 5 கிலோ முதல் 25 கிலோ வரையிலான பொருளை எடுத்துச் செல்லும் திறனுடையது.
- இதன் திறனை 30 கிலோவுக்கு அதிகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- எவ்வித கட்டளைகளும் வழங்கப்படாமல் தானியங்கி முறையிலே இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று, பொருள்களை வழங்கிவிட்டு மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே இந்த ஆளில்லா விமானத்தால் திரும்ப முடியும்.

### ஜம்மு எல்லையில் சுரங்கப் பாதைகளைக் கண்டறிய ட்ரோன் ரேடார் பிஎஸ்எஃப் திட்டம்

- ஜம்மு பிராந்தியத்தின் இந்தியா–பாகிஸ்தான் சர்வதேச எல்லைப் பகுதியில் நிலத்தடி சுரங்கப் பாதைகளைக் கண்டறிய ஆளில்லா விமானங்களில் ரெடார் பொருத்தி கண்காணிக்க எல்லைப் பாதுகாப்பு படை (பிஎஸ்எஃப்) திட்டமிட்டுள்ளது.

- அதன்படி, ஜம்மு பிராந்தியத்தில் அமைந்துள்ள 193 கி.மீ. நீளம் கொண்ட சர்வதேச எல்லைப் பகுதியில் 5 சுரங்க பாதைகள் கடந்த 3 ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஜம்மு பிராந்தியத்தில் அமைந்துள்ள சர்வதேச எல்லைப் பகுதியில் பயங்கரவாதிகளால் எல்லை ஊடுருவல் முயற்சிகளில் ஈடுபட பயன்படுத்தபடும் நிலத்தடி சுரங்கப் பாதைகளைக் கண்டறிந்து கண்காணிக்க ரேடார் பொருத்தப்பட்ட ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்த எல்லைப் பாதுகாப்பு படையினர் திட்டமிட்டிருக்கிறது.

## ரூ. 4,276 கோடி ராணுவத் தளவாட கொள்முதலுக்கு அமைச்சகம் ஒப்புதல்

- எதிரி நாடுகளின் பீரங்கிகளை அழிக்கும் ஏவுகணை அமைப்பு, மலைப் பகுதிகள் மற்றும் கடற்பகுதிகளில் பயன்படுத்தத்தக்க ஏவுகணை அமைப்பு உள்ளிட்ட மூன்று ராணுவத் தளவாடங்களை ரூ. 4,276 கோடியில் கொள்முதல் செய்ய மத்திய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

## 7–ஆவது ஆயுதப் படை வீரர்களின் தினம்

- இந்திய ராணுவம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாகக் கூறிய ராணுவ தலைமைத் தளபதி மனோஜ் பாண்டே, உலகின் மிகச் சிறந்த படைகளில் இந்திய ராணுவமும் ஒன்று என்றார்.
- 7–ஆவது ஆயுதப் படை வீரர்களின் தினம் தில்லியில் நடைபெற்றது.

## சைன்யா ரணக்ஷேத்திரம் 2.0

- அக்டோபர் 2022 முதல் ஜனவரி 2023 வரை 'சைன்ய ரணக்ஷேத்திரம்' இரண்டாவது பதிப்பை இந்திய ராணுவம் ஏற்பாடு செய்தது.
- குறிக்கோள்: சைபர் சவால்களுக்கு செயல்பாட்டுத் தீர்வுகளைத் தேடுதல் மற்றும் சைபர் பாதுகாப்பு களத்தில் புதுமையான தீர்வுகளுக்கான வளர்ச்சி நேரத்தைத் தொடங்குதல்.

## இந்திய கடற்படையில் ஐஎன்எஸ் வாகீர் இணைப்பு

- கல்வரி ரகத்தைச் சேர்ந்த 5–ஆவது நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் வாகீர் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது.
- 'புராஜெக்ட் 75' திட்டத்தின் கீழ் முற்றிலும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட ஐந்தாவது நீர்மூழ்கிக் கப்பல் ஐஎன்எஸ் வாகீர். பிரான்ஸ் நிறுவனத்துடன் இணைந்து மஸகான் டாக் கப்பல் கட்டும் நிறுவனம் வாகீர் நீர்மூழ்கிக் கப்பலைக் கட்டியது.
- ஏவுகணைகளும் கருவிகளும்: ஐஎன்எஸ் வாகீர் குறித்து இந்தியக் கடற்படை வெளியிட்ட அறிக்கையில், 'பல்வேறு நவீன கருவிகள் ஐஎன்எஸ் வாகீர் நீர்மூழ்கிக் கப்பலில் இணைக்கப்பட்டுள்ளன.
- நீண்ட தொலைவு சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகளும், போர்க் கப்பல்களைத் தாக்கி அழிக்கக் கூடிய ஏவுகணைகளும் ஐஎன்எஸ் வாகீரில் இணைக்கப்பட்டுள்ளன. பல நவீன உணர்விகளும் (சென்சார்) வாகீரில் பொருத்தப்பட்டுள்ளன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- புராஜெக்ட் 75: 'புராஜெக்ட் 75' திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஐஎன்எஸ் கல்வரி, ஐஎன்எஸ் கண்டேரி, ஐஎன்எஸ் கரஞ்ஜ், ஐஎன்எஸ் வேலா ஆகிய நீர்மூழ்கிக் கப்பல்கள் ஏற்கெனவே கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளன. ஐஎன்எஸ் வேலா கடந்த 2021–ஆம் ஆண்டு நவம்பரில் கடற்படையில் இணைக்கப்பட்டது.

## Ops Alert பயிற்சி

- வரவிருக்கும் குடியரசுத் தினக் கொண்டாட்டங்களைக் கருத்தில் கொண்டு எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) 'Ops Alert' பயிற்சியைத் தொடங்கியுள்ளது.
- நோக்கம்: குஜராத்தின் கட்ச் மாவட்டம் மற்றும் ராஜஸ்தானில் உள்ள பார்மரில் இந்தியா–பாகிஸ்தான் எல்லைப்பாதுகாப்பை மேம்படுத்துதல்.
- குடியரசு தின விழா கொண்டாட்டங்களின் போது தேசவிரோத சக்திகளின் தவறான நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
- ஜனவரி 28 வரை இந்தியா–பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் சர் க்ரீக்கிலிருந்து(சதுப்பு நிலப்பகுதி) குஜராத்தில் உள்ள ரான் ஆஃப் கட்ச் மற்றும் ராஜஸ்தானின் பார்மர் வரை இந்தப் பயிற்சித் தொடரும்.

## வீர் கார்டியன்–2023

- இது இந்திய விமானப்படை மற்றும் ஜப்பான் ஏர் செல்ஃப் பாதுகாப்பு படை (JASDF) ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தியா மற்றும் ஜப்பான் இடையேயான கூட்டு விமானப் போர்ப் பயிற்சியாகும்.
- இது 12 ஜனவரி 2023 முதல் 26 ஜனவரி 2023 வரை ஜப்பானின் ஹைகுரி விமான தளத்தில் நடைபெற்றது.
- குறிக்கோள்: இரு நாடுகளுக்கு இடையே போர்த்திறன் சார்ந்த தொடர்புகள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்.

குறிப்பு:

- இது இந்தியா மற்றும் ஜப்பான் இடையேயான இருதரப்பு விமானப் பயிற்சியின் தொடக்கப் பதிப்பாகும்.



# 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

## இந்தியாவின் முதல் Y20 உச்சி மாநாடு

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், புது தில்லியில் நடைபெற்ற கர்டன் ரைசர் நிகழ்வில் Y20 உச்சிமாநாட்டின் தீம், லோகோ & இணையதளத்தை அறிமுகப்படுத்தினார்.
- Y20 என்பது G20 (குரூப் 20) க்கான அதிகாரப்பூர்வ இளைஞர் குழுவாகும், இது உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் முன்னேறிய பொருளாதாரங்களுக்கான மன்றமாகும்.
- Y20 உலகளாவிய இளைஞர்களின் தலைமை மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தும். இந்தியா முதன்முறையாக Y20 உச்சி மாநாட்டை நடத்துகிறது.
- Youth 20 Engagement Group இல், இந்தியாவின் முக்கிய கவனம் உலகம் முழுவதிலும் உள்ள இளம் தலைவர்களை ஒன்றிணைத்து, சிறந்த நாளைக்கான யோசனைகளைப் பற்றி விவாதித்து, செயலுக்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்குவதாகும்.

G20 பற்றி

- G20 அல்லது குரூப் ஆஃப் ட்வென்டி என்பது 19 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆகியவற்றை உள்ளடக்கிய பெரிய வளர்ந்த மற்றும் வளரும் பொருளாதாரங்களின் அரசுகளுக்கிடையேயான மன்றமாகும்.
- உருவாக்கம் – 26 செப்டம்பர் 1999.
- தலைவர் – நரேந்திர மோடி, இந்தியப் பிரதமர்
- ஜெர்மனியின் கொலோனில் முதல் சந்திப்பு
- G20 நாடுகள் – அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, மெக்சிகோ, ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சவுதி அரேபியா, தென் கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம்.

## டாவோஸில் உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டம்

- உலகப் பொருளாதார மன்றத்தின் 53வது ஆண்டுக் கூட்டம் 2023 ஜனவரி 16 முதல் 20 வரை சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடைபெறுகிறது.
- கருப்பொருள்: "ஒரு துண்டு துண்டான உலகில் ஒத்துழைப்பு"

உலகப் பொருளாதார மன்றம் பற்றி:

- இது 1971இல் நிறுவப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற அறக்கட்டளையாகும், இது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது.
- இது பொது–தனியார் ஒத்துழைப்புக்கான சர்வதேச நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது
- குறிக்கோள்: உலகளாவிய, பிராந்திய மற்றும் தொழில்துறை நிகழ்ச்சி நிரல்களை வடிவமைக்க வணிக, அரசியல், கல்வி மற்றும் சமூகத்தின் பிற தலைவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் உலகின் நிலையை மேம்படுத்துதல்.

## சர்வதேச நிதிக் கட்டிடக்கலை பணிக்குழு

- இந்தியாவின் G20 தலைமையின் கீழான முதல் G20 சர்வதேச நிதி கட்டமைப்பு பணிக்குழு கூட்டம் சண்டிகரில் நடைபெற்றது.
- இது G20 ஃபைனான்ஸ் டிராக்கின் கீழ் நடத்தப்படும் ஒரு கூட்டமாகும்.

**சிறப்பம்சங்கள்:**

- சர்வதேச நிதியத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான மற்றும் 21 ஆம் நூற்றாண்டின் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கான வழிகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.
- ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதற்கான வழிகளை ஆராய்வதிலும் இந்த கூட்டம் கவனம் செலுத்தியது.

### விண்வெளி 20 திட்டம்

- G20 இன் ஸ்பேஸ் 20 நிகழ்ச்சி ஏப்ரல் 2023 இல் மேகாலயாவின் தலைநகரமான ஷில்லாங்கில் நடைபெறும்
- நோக்கம்: விண்வெளிப் பொருளாதாரத்தை G20 உச்சிமாநாட்டின் முறையான நிகழ்ச்சி நிரலாக மாற்றுவது
- குறிக்கோள்: நாடுகளின் பொருளாதாரத்திற்கு விண்வெளி கூட்டாண்மையின் பங்களிப்பைப் பற்றி விவாதிப்பது.

**சிறப்பம்சங்கள்:**

- இது 2020 இல் G20 நாடுகளின் தேசிய விண்வெளி நிறுவனங்களால் நடத்தப்பட்ட விண்வெளிப் பொருளாதாரத் தலைவர்கள் கூட்டத்தின் தொடர்ச்சியாகும்.

**இருபது நாடுகளின் குழு (G20) பற்றி:**

- இது 19 நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேசத்தின் நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு முறைசாரா குழுவாகும்.
- G20 உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த சிக்கல்கள் மற்றும் உலக பொருளாதார சிக்கல்கள் ஆகிவற்றில் கவனம் செலுத்துகிறது.

**இந்தியாவின் தலைமை:**

- டிசம்பர் 1, 2022 முதல் நவம்பர் 30, 2023 வரை G20 தலைவராக இந்தியா பதவி வகிக்கும்.
- இந்தியாவின் G20 தலைமையின் கருப்பொருள் – "வசுதைவ குடும்பகம்" அல்லது "ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்.

## 1.4 சிறந்த நபர்கள்

### பிரபல விஞ்ஞானி தாமோதரன் காலமானார்

- பிரபல விஞ்ஞானியும், அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் முன்னாள் இயக்குநருமான ஏ.டி.தாமோதரன் திருவனந்தபுரத்தில் காலமானார்.
- ஈ.எம்.எஸ்.நம்பூதிரி பாட்டின் அரசியல் வழியை பின்பற்றிய அவர், கேரளத்தில் இடதுசாரி அரசுக்குப் பல்வேறு நிலைகளில் ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார். அணு விஞ்ஞானத்தில் நிபுணத்துவம் பெற்ற விஞ்ஞானி.

## 1.5 விளையாட்டு

### உலகக் கோப்பை ஹாக்கி ஆட்டங்கள்

- சர்வதேச ஹாக்கி சம்மேளனம் நடத்தும் 15–ஆவது ஆடவர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டியின் ஆட்டங்கள் தொடங்குகின்றன.

**உலகத்தரவரிசை**

1. ஆஸ்திரேலியா

- அதிகபட்சம்: 3 முறை சாம்பியன் (1986, 2010, 2014).

2. பெல்ஜியம்

- அதிகபட்சம்: 1 முறை சாம்பியன் (2018)

3. நெதர்லாந்து

- அதிகபட்சம்: 3 முறை சாம்பியன் (1973, 1990, 1998)

4. ஜெர்மனி

- அதிகபட்சம்: 2 முறை சாம்பியன் (2002, 2006)

5. இங்கிலாந்து

- அதிகபட்சம்: 2–ஆம் இடம் (1986)

6. இந்தியா

- அதிகபட்சம்: 1 முறை சாம்பியன் (1975)
- உலகக் கோப்பை வரலாற்றில் ஒருமுறை மட்டும் சாம்பியனாகியிருக்கும் இந்தியா, அதன் பிறகு அரையிறுதிவரை கூட தகுதிபெறவில்லை. 1978 முதல் 2014 வரை குரூப் சுற்றை கடந்ததில்லை. கடந்த உலகக் கோப்பை போட்டியில் காலிறுதியுடன் வெளியேறியது இந்தியா. இந்த நிலையில் டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்று வரலாறு படைக்க, கடந்த புரோ லீக் போட்டியிலும் 3–ஆம் இடம் பிடித்து முன்னேறி வருகிறது. கிரஹாம் ரெய்ட் பயிற்சியில் வளர்ந்து வரும் இந்தியா, காமன்வெல்த் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றது. கேப்டன் ஹர்மன்பிரீத் சிங், கோல்கீப்பர் பி.ஆர்.ஸ்ரீஜேஷ், மன்பிரீத் சிங், அமித் ரோஹிதாஸ் முக்கிய வீரர்களாவர்.

7. அர்ஜென்டீனா

- அதிகபட்சம்: 3–ஆம் இடம் (2014)

8. ஸ்பெயின்

- அதிகபட்சம்: 2–ஆம் இடம் (1971, 1998)

9. நியூஸிலாந்து

- அதிகபட்சம்: 7–ஆம் இடம் (1973, 1975, 1982, 2014)

10. தென்கொரியா

- அதிகபட்சம்: 4–ஆம் இடம் (2002, 2006)

### ஷுப்மன் கில் இரட்டை சதம்

- நியூஸிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் ஆட்டத்தில் இளம் வீரர் ஷுப்மன் கில் அதிரடியாக ஆடி முதல் இரட்டை சதம் 208 அடித்தார்.
- பரபரப்பான ஆட்ட முடிவில் 12 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

**கில்லின் இரட்டை சதம் சிறப்புகள்:**

- இரட்டை சதத்தை அடித்த 5–ஆவது இந்திய வீரர். முன்னர் சச்சின், சேவாக், ரோஹித், இஷான் கிஷண் ஆகியோர் இரட்டை சதம் அடித்தனர்.
- ஒருநாள் ஆட்டத்தில் இரட்டை சதத்தை அடித்த முதல் இளம் வீரர் என்ற சாதனையும் நிகழ்த்தினார். மேலும் துரிதமாக 1,000 ரன்களை கடந்த வீரர் என்ற சிறப்பில் கோலி, தவனை முறியடித்தார்.
- கடைசியாக 49–ஆவது ஓவரில், லாக்கி பெர்குஸன் பந்தில் தொடர்ந்து ஹாட்ரிக் சிக்ஸர்களை பதிவு செய்தார். 122 பந்துகளில் 150–ஐ கடந்தார்.

## 1.6 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### "புரட்சியாளர்கள்: இந்தியா எப்படி சுதந்திரம் பெற்றது என்பதற்கான மற்றொரு கதை" (Revolutionaries: The other story of how India won its freedom) என்ற புத்தகம் வெளியீடு

- இந்த புத்தகத்தை எழுதியவர் சஞ்சீவ் சன்யால். இது ஆயுதப் புரட்சியாளர்களின் கதைகளையும் சுதந்திரப் போராட்டத்தில் அவர்களின் பங்கையும் கூறுகிறது

**சஞ்சீவ் சன்யால் பற்றி:**

- அவர் ஒரு இந்திய பொருளாதார நிபுணர் மற்றும் பிரதமர் நரேந்திர மோடியின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்.
- அவரது மற்ற படைப்புகள்,
  - இந்தியப் பெருங்கடலின் நம்பமுடியாத வரலாறு
  - யோசனைகளின் யுகத்தில் இந்தியா: எழுத்துகளைத் தேர்ந்தெடுக்கவும்
  - தி ஓஷன் ஆஃப் சர்ன்
  - இந்தியாவின் புவியியலின் நம்பமுடியாத வரலாறு
  - இந்திய மறுமலர்ச்சி: ஆயிரம் ஆண்டுகள் சரிவுக்குப் பிறகு இந்தியாவின் எழுச்சி

# 1.7 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

## மஞ்சப்பை விருது

- மஞ்சப்பை விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.
- 'மீண்டும் மஞ்சப்பை' என்ற பிரசாரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால், நெகிழி இல்லாத வளாகங்களாக மாற்றும் முயற்சியில் ஈடுபடும் பள்ளிகள், கல்லூரிகள், வணிக வளாகங்களுக்கு மஞ்சப்பை விருதுகள் வழங்கப்படுகின்றன.
- அந்த வகையில் இம்முயற்சியில் ஈடுபட்டு, சிறப்பாக செயல்படும் 3 சிறந்த பள்ளிகள், 3 சிறந்த கல்லூரிகள் மற்றும் 3 சிறந்த வணிக வளாகங்களுக்கு மஞ்சப்பை விருதுகள் வழங்கப்பட உள்ளன. விருது பெறுபவர்களுக்கு, விருதுடன் முதல் பரிசாக ரூ.10 லட்சமும், 2–ஆம் பரிசாக ரூ.5 லட்சமும், 3–ஆம் பரிசாக ரூ.3 லட்சமும் வழங்கப்படும்.

## இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமாருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

- திரைப்பட இயக்குநர் கே.எஸ்.ரவிகுமாருக்கு 'இயக்குநர் சிகரம்' கே.பாலசந்தர் நினைவு வாழ்நாள் சாதனையாளர்–2023' விருது வழங்கப்பட்டது.
- ஹியூமர் கிளப் இன்டர்நேஷனல் சார்பில் சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அவருக்கு இந்த விருதை திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், நடிகர் டெல்லி கணேஷ், இயக்குநரும், நகைச்சுவை நடிகருமான மனோபாலா ஆகியோர் வழங்கினர்.

## வாழ்விடத்தின் உலக வாழ்விட விருதுகள் 2023

- ஒடிசா மாநிலத்தின் 5T முன்முயற்சி (5T – குழுப்பணி, தொழில்நுட்பம், வெளிப்படைத்தன்மை, மாற்றம் மற்றும் நேர வரம்பு) திட்டத்திற்கான (UN–Habitat's World Habitat Awards 2023) ஐ வென்றது.

குறிப்பு

- 1985 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, வருடாந்திர உலக வாழ்விட விருதுகள், உலகம் முழுவதிலுமிருந்து புதுமையான, சிறந்த மற்றும் புரட்சிகரமான வீட்டு யோசனைகள், திட்டங்கள் மற்றும் திட்டங்களை அங்கீகரித்து சிறப்பித்துக் காட்டுகின்றன.

**ஜகா மிஷன்**

- இது உலகின் மிகப்பெரிய நில உரிமை மற்றும் சேரிகளை மேம்படுத்தும் திட்டமாகும், இது குடிசைவாசிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஐ.நா.– வாழ்விடம் பற்றி**

- மனித குடியேற்றங்கள் மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் மனித குடியேற்றத் திட்டம்.
- உருவாக்கம் – 1977
- தலைமையகம் – நைரோபி, கென்யா.

**ஒடிசா பற்றி**

- தலைநகரம் – புவனேஸ்வர்
- கவர்னர் – கணேஷி லால்
- முதல்வர் – நவீன் பட்நாயக்

## டிஜிட்டல் இந்தியா விருதுகள் 2022

- 2022 ஆம் ஆண்டுக்கான டிஜிட்டல் இந்தியா விருதுகளை ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கினார்.
- இந்த விருதுகள், டிஜிட்டல் இந்தியா பார்வையை நிறைவேற்றுவதில் அரசு நிறுவனங்களை மட்டுமல்ல, ஸ்டார்ட்–அப்கள் மற்றும் அடிமட்ட டிஜிட்டல் முயற்சிகளையும் ஊக்குவித்து ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய தேசிய இணையதளத்தின் கீழ் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரால் DIA நிறுவப்பட்டது.
- டிஜிட்டல் இந்தியா விருதுகளின் 7வது பதிப்பு பின்வரும் ஏழு பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டது.
- குடிமக்களின் டிஜிட்டல் அதிகாரமளித்தல் – இ–நாம் (விவசாயப் பொருட்களுக்கான ஒருங்கிணைந்த தேசிய சந்தையை உருவாக்குவதற்கு பான்–இந்தியா மின்னணு வர்த்தக போர்டல்).
- அடிமட்ட அளவில் டிஜிட்டல் முயற்சிகள் – இ–விவேச்னா ஆப் (மத்திய பிரதேசம்) (குற்ற விசாரணையில் உதவ).
- எளிதாக வணிகம் செய்வதற்கான டிஜிட்டல் முயற்சிகள் – மைன் மித்ரா (உத்தர பிரதேசம்) (சுரங்கத் திட்டத்தின் ஆன்லைன் ஒப்புதலுக்கு).
- சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான தரவுப் பகிர்வு மற்றும் பயன்பாடு – ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன், M/o வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள்.

**பொது டிஜிட்டல் தளங்கள்**

- மத்திய அமைச்சகங்கள், துறைகள் மற்றும் மாநிலங்கள் – ICEGATE போர்டல் (சுங்க அனுமதி செயல்முறையை வெளிப்படையானதாக்குகிறது).
- மாநிலங்கள் – DUARE SARKAR (மேற்கு வங்கம்) (மக்கள் வீட்டு வாசலில் சேவை வழங்கல் மற்றும் நலத்திட்டங்களுக்கு).
- ஸ்டார்ட்அப்களுடன் இணைந்து டிஜிட்டல் முயற்சிகள் – டிஜிட்டல் பணியாளர் மேலாண்மை அமைப்பு (கேரளா).
- GIGW & அணுகல்தன்மை வழிகாட்டுதல்களுடன் இணங்கும் சிறந்த இணையம் மற்றும் மொபைல் முயற்சிகள் – பிலாஸ்பூர் மாவட்ட இணையதளம் (சத்தீஸ்கர்).

## திருவள்ளுவர், பெரியார், அண்ணா விருதுகள் அறிவிப்பு

- தமிழக அரசின் சார்பில் திருவள்ளுவர், பெரியார், அண்ணா ஆகியோர் பெயரிலான விருதுகள் உள்ளிட்ட 10 விருதுகளைப் பெறுவோரின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

**விருது பெறுவோர் பட்டியல்:**

- திருவள்ளுவர் விருது (2023) –இரணியன் நா.கு. பொன்னுசாமி
- தேவநேயப்பாவாணர் விருது – முனைவர் இரா. மதிவாணன்
- அண்ணா விருது (2022) – உபயதுல்லா
- காமராஜர் விருது – ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்
- பாரதியார் விருது – முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி
- பாரதிதாசன் விருது – வாலஜா வல்லவன்
- திரு.வி.க. விருது – நாமக்கல் பொ.வேல்சாமி
- கி.ஆ.பெ.விசுவநாதம் விருது – கவிஞர் மு.மேத்தா
- பெரியார் விருது – கவிஞர் கலி. பூங்குன்றன்
- அம்பேத்கர் விருது – எஸ்.வி.ராஜதுரை

## தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இரு விருதுகள்

- பள்ளி சுகாதாரம், மாதவிடாய் விழிப்புணர்வு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டதற்காக தமிழகத்துக்கு இரு விருதுகளை மத்திய அரசு வழங்கியுள்ளது.
- தேசிய நலவாழ்வு குழுமம், தமிழ்நாடு பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து இயக்குநரகம் ஆகியவை பள்ளிக் கல்வித்துறையுடன் ஒருங்கிணைந்து பள்ளி சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய தூதுவர் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அந்த திட்டத்தின்படி இதுவரை 70 ஆயிரம் பள்ளி ஆசிரியர்கள், 41,62,792 மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர்.
- ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரை 43 லட்சம் இளம்பெண்கள் இத்திட்டம் மூலம் பயனடைந்துள்ளனர்.

## 'சிறந்த நிலையான கிரீன்ஃபீல்ட் விமான நிலையம்' விருது

- GMR கோவா சர்வதேச விமான நிலையம் (GGIAL) விமான நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழலின் கீழ் 'சிறந்த நிலையான கிரீன்ஃபீல்ட் விமான நிலையம்' விருதை வென்றுள்ளது.
- ASSOCHAM இன் 14வது சர்வதேச மாநாட்டில் வழங்கப்படும் விருது – சிவில் விமானப் போக்குவரத்துக்கான விருதுகள் 2023

ASSOCHAM பற்றி

- இந்தியாவின் அசோசியேட்டட் சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸ் & இண்டஸ்ட்ரி (ASSOCHAM) என்பது 1920 இல் தொடங்கப்பட்ட நாட்டின் மிகப் பழமையான உயர் நிறுவனம் ஆகும்.
- இது ஒரு புதிய இந்தியாவை உருவாக்கும் பார்வையைக் கொண்டுள்ளது மற்றும் தொழில்துறைக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஒரு சேனலாக செயல்படுகிறது.

## சிறார்களுக்கான தேசிய விருதுகள்:

- இந்திய சிறார்களின் சாதனைகளைப் பாராட்டி வழங்கப்படும் மத்திய அரசின் 'ராஷ்டிரீய பால் புரஸ்கார்' விருதை 11 சிறார்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கி கௌவரவிக்கிறார்.

- கலை, கலாசாரம், வீர தீர செயல், புதுமை, சமூக சேவை, கல்வி மற்றும் விளையாட்டு உள்ளிட்ட 6 பிரிவுகளில் சிறந்து விளங்கிய இந்தியச் சிறார்களுக்கு 'பிரதான் மந்த்ரி ராஷ்டிரீய பால் புரஸ்கார் விருது வழங்கப்படுகிறது.
- சிறுவயதிலேயே செய்த சாதனையை அங்கீகரிக்கும் விதமாகவும், அவர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டும் வகையிலும் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது. தங்கள் துறைகளில் சிறந்து விளங்கிய 5 வயது முதல் 18 வயது வரையிலான சிறார்கள் நாடு முழுவதுமிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். விருது வென்ற சிறார்களுக்கு குடியரசுத் தலைவர் விருதுகளை வழங்குவார்.
- இந்த ஆண்டுக்கான விருதுக்கு நாடு முழுவதிலிருந்து 6 ஆண்கள் மற்றும் 5 பெண்கள் உள்பட 11 சிறார்கள் தேர்வு செய்யப்பட்டனர். கலை மற்றும் கலாசாரத்தில் சிறந்து விளங்கிய 4 பேருக்கும், வீரதீர செயலுக்காக ஒருவருக்கும், புதுமையான செயல்களுக்காக 2 பேருக்கும், சமூக சேவையில் ஈடுபட்ட ஒருவருக்கும் மற்றும் விளையாட்டு வீரர்கள் 3 பேருக்கும் என 11 பேருக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது."

## 'பரம் வீர் சக்ரா' விருதாளர்கள் பெயர்

- நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்த தினத்தையொட்டி கோபாரை சேர்ந்த பெயரிடப்படாத 21 தீவுகளுக்கு 'பரம் வீர் சக்ரா' விருது பெற்றவர்களின் பெயரை பிரதமர் நரேந்திர மோடி சூட்டினார்.
- சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 127-ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.
- அந்தமான்-நிகோபாரில் சுபாஷ் சந்திர போஸுக்கு அமைக்கப்படவுள்ள நினைவிடத்தின் மாதிரியை பிரதமர் மோடி காணொலி மூலம் வெளியிட்டார்.

### அந்தமான்-நிகோபார்

- மேலும், இந்திய தேசியக் கொடியை சுபாஷ் சந்திர போஸ் முதன்முதலாக 1943-ஆம் ஆண்டில் அந்தமான்-நிகோபாரில்தான் ஏற்றினார். இது அந்தத் தீவுகளில் வசிக்கும் மக்களுக்குப் பெருமைமிகு தருணமாகும்.

## 106 பேருக்கு பத்ம விருதுகள்

- கலை, இலக்கியம், விளையாட்டு, மருத்துவம், சமூகப் பணி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்த விளங்கிய 106 பேருக்கு பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்தது.
- பத்ம விபூஷண்: உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த சமாஜவாதி கட்சி நிறுவனரான மறைந்த முலாயம் சிங் யாதவ், கர்நாடக மாநில முன்னாள் முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா, பிரபல தபேலா கலைஞர் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ஜாஹிர் ஹுசைன், பிரபல குழந்தைகள் நல மருத்துவர் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் மறைந்த திலீப் மஹலானாபிஸ், பிரபல கட்டடவியல் நிபுணர் குஜராத்தைச் சேர்ந்த மறைந்த பாலகிருஷ்ண தோஷி, அமெரிக்காவில் வசிக்கும் பிரபல இந்திய கணிதவியலாளர் ஸ்ரீநிவாஸ் வரதன் ஆகிய 6 பேருக்கு பத்ம விபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- பத்ம பூஷண்: தமிழகத்தைச் சேர்ந்த பிரபல திரைப்பட பின்னணி பாடகி வாணி ஜெயராம், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த தொழிலதிபர் கே.எம். பிர்லா, கன்னட எழுத்தாளர் எஸ்.எல்.பைரப்பா, ஐஐஎஸ்சி இயற்பியல் துறைப் பேராசிரியர் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த தீபக் தர், தெலங்கானாவைச் சேர்ந்த ஆன்மிகத் தலைவர் சின்ன ஜீயர் சுவாமி, பிரபல திரைப்பட பின்னணி பாடகி மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த சுமன் கல்யாண்பூர், மொழியியல் பேராசிரியரும் தில்லி ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழக முன்னாள் இணை துணைவேந்தருமான தில்லியைச் சேர்ந்த கபில்கபூர், இன்ஃபோசிஸ் நிறுவன இணை நிறுவனர் நாராணமூர்த்தியின் மனைவியும் இன்ஃபோசிஸ் அறக்கட்டளைத் தலைவருமான கர்நாடகத்தைச் சேர்ந்த சுதா மூர்த்தி, குஜராத்தில் பிறந்து தெலங்கானாவில் வசித்து வரும் ஆன்மிகத் தலைவரும், பிரபல யோகா குருவுமான கமலேஷ் டி.படேல் ஆகிய 9 பேருக்கு பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- **பத்மஸ்ரீ**: 91 பேருக்கு பத்ம ஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

### எஸ்.எல்.பைரப்பாவுக்கு பத்ம பூஷண் விருது

- பத்ம பூஷண் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எஸ்.எல்.பைரப்பா, கர்நாடக மாநிலம், ஹாசன் மாவட்டம், சென்னராயப்பட்டணா வட்டத்தில் உள்ள சந்தேசிவரா கிராமத்தில் 1931ஆம் ஆண்டு ஜூன் 20ஆம் தேதி பிறந்தவர்.
- இவரது தந்தை பெயர் லிங்கன்னையா. கோரூர் ராமசாமி ஐயங்காரின் எழுத்துகளால் ஈர்க்கப்பட்டு கன்னட இலக்கியத்தில் கால் பதித்த பைரப்பா, புதின எழுத்தாளர், திரைக்கதை ஆசிரியர், தத்துவ ஆசிரியர் என்று பல பரிமாணங்களில் பங்காற்றியவர். கன்னடத்தில் இவர் எழுதிய புதினங்கள் ஆங்கிலம், ஹிந்தி, மராத்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.



- 1958இல் 'பீமகயா' என்ற நூல் மூலம் எழுத்தாளராக அறிமுகமான பைரப்பா, இதுவரை 24 புதினங்களை எழுதியிருக்கிறார். 'வம்சவிருக்ஷா', 'தப்பலிய நீனாதே மகனே', 'மடதனா', 'நாயி நெரலு' ஆகிய புதினங்கள் திரைப்படங்களாக எடுக்கப்பட்டுள்ளன.
- 'வம்சவிருக்ஷா' புதினத்திற்கு 1966ஆம் ஆண்டு கன்னட சாஹித்ய அகாதெமி விருது கிடைத்தது. 1975ஆம் ஆண்டு 'தாட்டு' புதினத்திற்கு மத்திய சாஹித்ய அகாதெமி விருது கிடைத்தது. இவருக்கு 2016ஆம் ஆண்டு மத்திய அரசின் உயரிய விருதான பத்மஸ்ரீ வழங்கப்பட்டது.

### புதுச்சேரி மருத்துவருக்கு பத்மஸ்ரீ

- புதுச்சேரியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரசு மருத்துவர் நளினி பார்த்தசாரதிக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இவர் ஜிப்மர் மருத்துவமனையில் மருத்துவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அரிதான ரத்தக் கசிவு நோய்க்கு புதுச்சேரியில் சிகிச்சை மையம் அமைத்து கடந்த 30 ஆண்டுகளாக ஏழை, எளியோருக்கு சிகிச்சை அளித்து வருகிறார். மேலும், பொதுமக்களுக்கு இந்த நோய் குறித்து முகாம்கள், கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.

## செங்கல்பட்டை சேர்ந்த பாம்பு பயிற்சியாளர்களுக்கு பத்மஸ்ரீ

- செங்கல்பட்டு மாவட்டம், செந்நேரி கிராமத்தை சேர்ந்த தலைசிறந்த பாம்பு பயிற்சியாளர்களான வடிவேல் கோபால் மற்றும் மாசிசடையன் உள்பட தமிழகத்தைச் சேர்ந்த 5 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- தமிழகத்தைச் சேர்ந்த பாடகி வாணி ஜெயராமுக்கு பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- பத்ம விருதுகள் பட்டியலில் இடம்பெற்றுள்ள தமிழக இருளர் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த மேற்குறிப்பிட்ட இருவரும் மிகவும் அபாயகரமான விஷப் பாம்புகளையும் பிடிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர்கள். பாம்புகளைப் பிடிப்பதற்கு சர்வதேச அளவில் பயிற்சி அளிப்பவர்கள்.
- முறையான கல்வியறிவு பெறாத நிலையிலும், பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு பாம்புகளைப் பிடிப்பதோடு, பாம்புகளை பாதுகாப்பாக பிடிப்பதற்கான பயிற்சிகளையும் அளித்து வருகின்றனர்.
- ஒட்டுமொத்தமாக, பாம்புகளிடமிருந்து விஷ எதிர்ப்பு மருந்துகளைச் சேகரிப்பதன் மூலம் இந்திய மருத்துவத் துறையிலும் இருளர் பழங்குடியின சமூகத்தினர் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். இவர்கள் இருவருக்கும் ஒருசேர பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- பிரபல பரதநாட்டிய கலைஞர் கே.கல்யாணசுந்தரம் பிள்ளை, நூலகரும் சமூக சேவகருமான பாலம் கலியாணசுந்தரம், பாளையங்கோட்டையைச் சேர்ந்த சித்த மருத்துவர் கோபால்சாமி வேலுச்சாமி ஆகியோருக்கு பத்ம ஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- **காந்தியவாதி அப்புகுட்டன்**: ஒடுக்கப்பட்ட சமூக மக்களுக்காக 80 ஆண்டுகளாக சேவையாற்றி வரும் காந்தியவாதியான கேரளத்தைச் சேர்ந்த 99 வயது வி.பி.அப்புகுட்டன் பொதுவாளுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- கேரள மாநிலம், பய்யனூரைச் சேர்ந்த சேர்ந்த இவர், மகாத்மா காந்தியும், ஜவாஹர்லால் நேருவும் பையனூரில் ஆற்றிய உரையால் ஈர்க்கப்பட்டு சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். 1942-இல் மகாத்மா காந்தியின் இந்திய விடுதலைக்கான அழைப்பை ஏற்று நடத்தப்பட்ட வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றார்.

## தமிழக காவல் துறையில் 24 பேருக்கு குடியரசுத் தலைவர் விருது

- தமிழக காவல் துறையில் 24 பேருக்கு குடியரசுத் தலைவர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் காவல் துறையில் சிறப்பாக பணியாற்றி வருபவர்களுக்கு குடியரசுத் தலைவரின் தகைசால் பணிக்கான விருது, குடியரசுத் தலைவரின் பாராட்டத்தக்கப் பணிக்கான விருது அறிவிக்கப்பட்டன.
- தமிழக காவல் துறையில் சிபிசிஐடி ஐஜி பி.சி. தேன்மொழி, செங்கல்பட்டு சைபர் குற்றப்பிரிவு ஏடிஎஸ்பி வே.பொன்ராமு, அரியலூர் மாவட்ட ஏடிஎஸ்பி பி.ரவிசேகரன் ஆகிய மூவருக்கு குடியரசுத் தலைவரின் தகைசால் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- குடியரசுத் தலைவரின் பாராட்டத்தக்க பணிக்கான விருது 21 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### புதுக்கோட்டை பெண் விவசாயிக்கு வேளாண்மை சிறப்பு விருது

- புதுக்கோட்டையைச் சேர்ந்த பெண் விவசாயி க.வசந்தாவுக்கு, வேளாண்மைத் துறை சிறப்பு விருதை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
- புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம் ஆலவயல் கிராமத்தைச் சேர்ந்தவர், க.வசந்தா. 6 ஏக்கர் புஞ்சை நிலத்தில் விவசாயம் செய்து வரும் அவர், 20 ஆண்டுகளுக்கு மேலாக செம்மை நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி வருகிறார். இந்த ஆண்டில், அவர் விவசாயம் செய்திருந்த 50 சென்ட் நெல்வயல் அறுவடை செய்யப்பட்டது. அதில், 2 ஆயிரத்து 890 கிலோ தானிய எடை கிடைத்தது. ஒரு ஏக்கரில் 5 ஆயிரத்து 780 கிலோ மகசூல் கிடைத்தது.

### பிரதமரின் குழந்தைகளுக்கான தேசிய விருது

- 2023 ம் ஆண்டிற்கான பிரதமரின் குழந்தைகளுக்கான தேசிய விருதை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்குவார்.
- கலை மற்றும் கலாச்சாரம், புத்தாக்கம் மற்றும் விளையாட்டு போன்ற துறைகளில் சாதனைப் படைத்த 11 குழந்தைகளுக்கு இந்த விருதுகள் வழங்கப்படும்.

**குழந்தைகளுக்கான பிரதமரின் தேசிய விருது பற்றி:**

- குழந்தைகளுக்காக 'பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார்' விருது விதிவிலக்கான திறன்கள் மற்றும் சிறந்த சாதனைகளுக்கு வழங்கப்படும்.
- இந்த விருது இரண்டு பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது:
  - பால் சக்தி புரஸ்கார்
  - பால் கல்யாண் புரஸ்கார்

## 1.8 கலாச்சாரம்

### கீழடி அகழ் வைப்பகப் பணியை இம்மாத இறுதிக்குள் முடிக்கத் திட்டம்

- கீழடி அகழ் வைப்பகத்தில் தொல் பொருள்களைக் காட்சிப்படுத்தும் பணியை இந்த மாதத்துக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாநில தொழில், தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.
- அகழாய்வுப் பணியில் கிடைத்துள்ள தொல்பொருள்களின் ஆய்வு முடிவுகளின் படி, தமிழர்கள் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நகர நாகரிகத்துடன் வாழ்ந்திருப்பது தெரியவந்துள்ளது.
- கீழடி, மணலூர், அகரம், கொந்தகை ஆகிய பகுதிகளில் நடைபெற்ற வரும் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களைக் காட்சிப்படுத்துவதற்கு ஏதுவாக, கீழடியில் ரூ.11.3 கோடியில் செட்டிநாடு கலைநயத்துடன் புதிய அகழ்வைப்பகம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் கட்டுமானப் பணிகள் மட்டும் தற்போது நிறைவடைந்துள்ளன.
- தொல் பொருள்களைக் காட்சிப்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## 1.9 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

### ஆஸ்திரிய வெளியுறவுத் துறை அமைச்சருடன் ஜெய்சங்கர் சந்திப்பு

- இந்திய–ஆஸ்திரிய ராஜீய உறவுகள் 75 ஆண்டுகளை எட்டும் நிலையில் 28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஆஸ்திரியாவுக்கு அரசுப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

### ரூபாயில் வர்த்தகம்: தெற்காசிய நாடுகளுடன் பேச்சு

- இந்திய ரூபாய் வாயிலாக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள தெற்காசிய நாடுகளுடன் மத்திய அரசும் இந்திய ரிசர்வ் வங்கியும் (ஆர்பிஐ) பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.
- சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) சார்பில் தில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் 'தெற்காசிய நாடுகளின் பொருளாதார சவால்களும் கொள்கை முன்னெடுப்புகளும்' என்ற தலைப்பில் ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் உரையாற்றினார்.
- எண்ம ரூபாயை சோதனை அடிப்படையில் இந்திய ரிசர்வ் வங்கி பயன்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளது. எண்ம ரூபாயின் செயல்பாடு குறித்து மிக கவனமாகவும் தீவிரமாகவும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. எண்ம ரூபாயில் முறைகேடுகளைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விவகாரத்தில் தெற்காசிய நாடுகளுடன் இந்தியா ஒருங்கிணைந்து செயல்படும்.
- சர்வதேச வர்த்தகத்தில் இந்திய ரூபாயின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசுடன் இணைந்து ஆர்பிஐ மேற்கொண்டு வருகிறது. தெற்காசிய நாடுகளுடன் அதற்கான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



### வெளிநாடுகளில் அதிகம் வசிக்கும் வம்சாவளியினரைக் கொண்ட நாடு இந்தியா

- உலகிலேயே வெளிநாடுகளில் அதிக அளவில் வசிக்கும் வம்சாவளியினரைக் கொண்ட நாடாக இந்தியா உள்ளது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.
- உலகிலேயே வெளிநாடுகளில் அதிக அளவில் வசிக்கும் வம்சாவளியினரைக் கொண்ட நாடாக இந்தியா உள்ளது. அவர்களில் பலரும் மிகவும் திறமை வாய்ந்தவர்கள்.
- வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கும் நமக்கும் ரத்த பந்தம் உள்ளது என்றும், அது பாஸ்போர்ட் ரீதியிலான பந்தம் அல்ல என்றும் பிரதமர் நரேந்திர மோடி கூறியிருக்கிறார். அந்த பந்தத்தின் காரணமாகவே நாம் இங்கு கூடியுள்ளோம்.
- இந்திய வம்சாவளியினர் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் எண்ணிக்கை 3.4 கோடியாக உள்ளது.
- வெளிநாடுகளில் வசிக்கும் நம்நாட்டு இளைஞர்களுக்கு முன்பைவிட தற்போது நம்நாட்டுடன் தொடர்பு கொள்ள வசதி வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

## 1.10 நியமனங்கள்

### சுங்கத்துறை தலைமை ஆணையராக மண்டலிகா ஸ்ரீனிவாஸ் பொறுப்பேற்பு

- சென்னை மண்டல சுங்கத்துறை முதன்மை தலைமை ஆணையராக மண்டலிகா ஸ்ரீனிவாஸ் பொறுப்பேற்றார்.
- சென்னை, எண்ணூர் காமராஜர், காட்டுப்பள்ளி அதானி ஆகிய துறைமுகங்களும், சென்னை பயணிகள் விமான நிலையம், மீனம்பாக்கம் சரக்குகள் கையாளும் முனையம், உள்நாட்டு முனையங்களான கான்கார், உள்ளிட்டவை சென்னை மண்டல முதன்மை தலைமை ஆணையரகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.
- ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த இவர் இதற்கு முன்பு புது தில்லியில் உள்ள நேரடி வரிகள் வாரியத்தில் இயக்குநர் ஜெனரலாக பணியாற்றி வந்தார்.

### நாசா தலைமை தொழில்நுட்ப நிபுணராக இந்திய–அமெரிக்கர் நியமனம்

- அமெரிக்க விண்வெளி ஆய்வு மையத்தின் (நாசா) தலைமை தொழில்நுட்ப நிபுணராக இந்திய–அமெரிக்கரான ஏ.சி.சரணியா நியமிக்கப்பட்டுள்ளார்.
- நாசாவின் கீழ் இயங்கும் பல்வேறு அமைப்புகளுக்குத் தேவையான தொழில்நுட்ப முதலீடுகளை முடிவுசெய்வது, மற்ற விண்வெளி ஆராய்ச்சி அமைப்புகளுடன் தொழில்நுட்ப ரீதியில் ஒருங்கிணைந்து செயல்படுவது உள்ளிட்டவற்றையும் அவர் மேற்பார்வையிடுவார்.
- எமோரி பல்கலைக்கழகத்தில் இளநிலை பொருளாதாரப் பட்டம் பெற்ற அவர், ஜார்ஜியா தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் விண்வெளி பொறியியல் படிப்பில் இளநிலை, முதுநிலை பட்டங்களைப் பெற்றார்.

- அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாண சாலை சுங்கக் கட்டண வாரிய இயக்குநர்களில் ஒருவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸ்வபன் தைர்யவான் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நிபுணத்துவம் பெற்ற பட்டயக் கணக்கரான அவர், மக்களின் வரிப் பணம் முறையாகச் செலவிடப்படுவதை உறுதிசெய்வார் என மாகாண அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தெற்கு ரயில்வே முதன்மை தலைமை வணிக மேலாளராக பி.ரவீந்திரன் பொறுப்பேற்பு

- தெற்கு ரயில்வேயின் முதன்மை தலைமை வணிக மேலாளராக பி.ரவீந்திரன் பொறுப்பேற்றார்.
- கிண்டி பொறியியல் கல்லூரியின் முன்னாள் மாணவரான பி.ரவீந்திரன், இந்திய ரயில்வே போக்குவரத்து சேவை அதிகாரியாக (ஐஆர்டிஎஸ்) 1988-ஆம் ஆண்டு பொறுப்பேற்றார்.
- இவர் முன்னதாக, தெற்கு ரயில்வேயின் தலைமை உரிமைகோரல் அதிகாரியாவும், தலைமை சரக்கு போக்குவரத்து மேலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

### பிஎஸ்எஃப் முன்னாள் தலைவர் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமனம்

- எல்லை பாதுகாப்பு படையின் (பிஎஸ்எஃப்) முன்னாள் தலைவர் பங்கஜ் குமார் சிங், நாட்டின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய காவல் பணி அதிகாரியான (ஐபிஎஸ்) இவர், 1998-ஆம் ஆண்டின் ராஜஸ்தான் பிரிவைச் சேர்ந்தவர். தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜீத் தோவல் பதவி வகித்து வருகிறார்.



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

### 30வது இந்திய-இஸ்ரேல் விவசாய மையம்

- இந்தியாவும் இஸ்ரேலும் ஹரியானா மாநிலம் பிவானியில் உள்ள கிரிக்னோவ் கிராமத்தில் 30வது சிறப்பு மையத்தை (CoE) தொடங்கி வைத்தன.
- இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான முழு தூதரக உறவுகளின் 30 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் அடையாளமாக இது திறக்கப்பட்டது

CoE அக்ரி ஹப் பற்றி

- இது விவசாயத் துறைக்கான அதன் கூட்டுப் பணித் திட்டத்தின் கீழ் அதன் கூட்டு விவசாயத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்
- குறிக்கோள்: கடுமையான தட்பவெப்ப நிலைகளைக் கடந்து வறண்ட சூழலில் வளங்களை அதிகப்படுத்துதல்

## 2.2 சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்

### 1,268 உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் மாநில மொழிகளில் வெளியீடு

- அரசமைப்புச் சட்டத்தின் 8-ஆவது அட்டவணையில் உள்ள 13 மொழிகளில் 1,268 உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் வெளியிடப்பட உள்ளன.
- அரசமைப்புச் சட்டத்தின் 8-ஆவது அட்டவணையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி உள்பட 22 மொழிகள் உள்ளன.
- மின்னணு உச்சநீதிமன்ற தீர்ப்புகளின் விவரக் குறிப்புகளில் (இ-எஸ்சிஆர்) சுமார் 34,000 தீர்ப்புகள் எண்ம வடிவில் உள்ள நிலையில், 8-ஆவது அட்டவணையில் உள்ள 13 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட 1,268 தீர்ப்புகளை உச்சநீதிமன்றப் பதிவாளர் வெளியிட உள்ளார். அவற்றில் ஹிந்தியில் 1,091, தமிழில் 52, மலையாளத்தில் 29, தெலுங்கில் 28, ஒடியாவில் 21 தீர்ப்புகள் இடம்பெற்றுள்ளன.

### 'சட்டம் இயற்றுவது முற்றிலும் நாடாளுமன்றத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டது"

- சட்ட ஆணையத்தை சட்டபூர்வ அமைப்பாக அறிவிக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரிய பொதுநல மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. அது தொடர்பான உத்தரவில், 'சட்டம் இயற்றுவது முற்றிலும் நாடாளுமன்றத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டது' என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.
- 21-ஆவது சட்ட ஆணையத்தின் பதவிக் காலம் கடந்த 2018-ஆம் ஆண்டு ஆகஸ்டுடன் நிறைவடைந்தது. அதற்குப்பிறகு நீண்ட நாள்களாக 22-ஆவது சட்ட ஆணையம் அமைக்கப்படாமலும், 21-ஆவது ஆணையத்துக்குக் காலநீட்டிப்பு வழங்கப்படாமலும் இருந்தது.

# 2.3 பொது விழிப்புணர்வு மற்றும் பொது நிர்வாகம்

## BEE இன் நட்சத்திர லேபிளின் கீழ் திருத்தப்பட்ட விதிமுறைகள் ஆணை

- BEE இன் நட்சத்திர லேபிளிங்கிற்கான திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ் உச்சவரம்பு மின்விசிறிகள் கட்டாய லேபிளிங்கில் சேர்க்கப்பட்டுள்ளன.
- BEE ஆனது ஜனவரி 1 முதல் குளிர்சாதனப்பெட்டிகளுக்கான விதிமுறைகளை கடுமையாக்கியுள்ளது, இதற்கு ஃப்ரீஸர்களுக்கு தனி நட்சத்திர லேபிளிங் மற்றும் லேபிளிங்கை வலுப்படுத்துவதுடன் உறைபனி இல்லாத பதிப்புகளின் குளிர்சாதனப் பெட்டி வழங்கல் அலகுகள் (சேமிப்புப் பிரிவு) தேவைப்படுகிறது.
- 3–நட்சத்திர மதிப்பீட்டில் இருக்கும் குளிர்சாதனப்பெட்டியானது 2–நட்சத்திரம் என்று லேபிளிடப்படும்.

BEE இன் ஸ்டார் லேபிள் பற்றி

- மே, 2006ல் மின்துறை அமைச்சரால் இத்திட்டம் துவக்கப்பட்டது.
- ஆற்றல் பாதுகாப்புச் சட்டம், 2001 இன் கீழ், ஸ்டார் லேபிளிங் திட்டம் எரிசக்தி திறன் பணியகத்தால் உருவாக்கப்பட்டது.
- இது 26 உபகரணங்களை உள்ளடக்கிய வீட்டு உபகரணங்கள்/சாதனங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. BEE இன் நட்சத்திர லேபிள் என்பது ஒரு பொருளின் ஆற்றல் செயல்திறனை விவரிக்கும் ஒரு வழியாகும். இது மற்ற பிராண்டுகளின் ஒத்த சலுகைகளுடன் ஒப்பிடுகையில் ஒரு குறிப்பிட்ட பிராண்டின் சாதனத்தின் ஆற்றல் செயல்திறனைக் குறிக்கிறது. இது ஒரு ஒப்பீட்டு லேபிளை விட ஒப்பீட்டு லேபிள் ஆகும்.

குறிப்பு

- ஆற்றல் பாதுகாப்புச் சட்டம், 2001 இன் விதிகளின் கீழ், இந்திய அரசு, மார்ச் 1, 2002 அன்று, ஆற்றல் திறன் பணியகத்தை (BEE) அமைத்தது.

## குறைகள் மேல்முறையீட்டு குழுக்கள்

- சமீபத்தில் திருத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பம் (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா நெறிமுறைகள் குறியீடு) விதிகள், 2021 அடிப்படையில் மூன்று குறைகள் மேல்முறையீட்டுக் குழுக்களை (GAC) மத்திய அரசு அமைத்தது.
- **தொலைநோக்கு:** இந்தியாவில் இணையம் திறந்ததாகவும், நம்பகமான மற்றும் பொறுப்புடன் பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கான ஒட்டுமொத்த கொள்கை மற்றும் சட்டக் கட்டமைப்பாகும்.
- **குறிக்கோள்:** Facebook, Twitter மற்றும் Instagram போன்ற பெரிய சமூக ஊடக நிறுவனங்களுக்கு எதிரான பயனர்களின் புகார்களைக் கவனிக்க.
- **GAC அமைப்பு:** இது ஒரு தலைவர், பல்வேறு அரசாங்கங்களில் இருந்து இரண்டு முழு நேர உறுப்பினர்கள். நிறுவனங்கள் மற்றும் ஓய்வு பெற்ற மூத்த நிர்வாகிகளைக் கொண்டிருக்கும் (பதவி ஏற்ற தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்கு)

## இந்திய சர்வதேச நடுவர் மையம்

- டெல்லி சர்வதேச நடுவர் மைய (திருத்தம்) சட்டம், 2022 அமல்படுத்தப்பட்டது
- இந்த திருத்த சட்டத்தின் மூலம் புது தில்லி சர்வதேச நடுவர் மையம் இந்தியா சர்வதேச நடுவர் மையம் என்று பெயர் மாற்றம் செய்யப்படும்.

**சர்வதேச நடுவர் மையம் பற்றி**

- தொடக்கம் – 2019

**குறிக்கோள்:**

- தேசிய மற்றும் சர்வதேச அளவில் குறைந்த செலவில் மத்தியஸ்தம் மற்றும் சமரசம் செய்வது மற்றும் சரியான நேரத்தில் சேவைகளை வழங்குதல்.
- மாற்று தகராறு தீர்வு மற்றும் நடுவர், மத்தியஸ்தம் மற்றும் சமரசம் செய்வதில் பயிற்சி அளிப்பது.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### 2022ல் அசாமில் காண்டாமிருகங்களை வேட்டையாடுவது பூஜ்ஜியமாகும்

- கடந்த 45 ஆண்டுகளில் முதன்முறையாக 2022–ம் ஆண்டு காண்டாமிருகத்தை வேட்டையாடுவதை அஸ்ஸாம் பதிவு செய்தது.

குறிப்பு

- இந்திய காண்டாமிருகங்கள் ஆசியாவின் மிகப்பெரிய காண்டாமிருக இனமாகும்.
- இவை இந்தியாவில் (அஸ்ஸாம், மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசம்), நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன.
- IUCN நிலை – பாதிக்கப்படக்கூடியது
- இந்திய காண்டாமிருகங்களுக்கு ஒரே ஒரு கொம்பு மட்டுமே உள்ளது காண்டாமிருக கொம்பு கெரட்டின் – புரதத்தால் ஆனது. இது நமது முடி மற்றும் நகங்களுக்கு அடிப்படையாக அமைகிறது.
- வாழ்விடம்: வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டல புல்வெளிகள், சவன்னாக்கள் மற்றும் புதர் நிலங்கள், வெப்பமண்டல ஈரமான காடுகள், பாலைவனங்கள் மற்றும் புதர் நிலங்கள்.
- அச்சுறுத்தல்கள்: மருத்துவ மதிப்பிற்காக கொம்பு வேட்டையாடுதல், வாழ்விட இழப்பு.
- இந்திய காண்டாமிருகங்களின் அதிக அடர்த்தி: போபிடோரா வனவிலங்கு சரணாலயம்

**இந்தியாவில் காண்டாமிருக மாற்றத்திற்கான முயற்சிகள்**

- 2005 ஆண்டு இம்முயற்சி தொடங்கப்பட்டது, இது ஏழு பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் மக்கள்தொகையை நிறுவுவதன் மூலம் அசாமில் காண்டாமிருகங்களின் எண்ணிக்கையை 3,000 ஆக உயர்த்தியது.
- காண்டாமிருகங்களை வேட்டையாடுவதையும் அது தொடர்பான நடவடிக்கைகளையும் தடுக்க அசாமில் சிறப்பு காண்டாமிருக பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டது.

### ஆற்றல் மற்றும் சுத்தமான காற்று பற்றிய ஆராய்ச்சி மையத்தின் அறிக்கை

- இந்த அறிக்கையின்படி, தேசிய சுத்தமான காற்று திட்டம் (NCAP) அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து பெரும்பாலான நகரங்களில் காற்றின் தரத்தில் எந்த மாற்றமும் இல்லை.
- 2021–22ல் 131 நகரங்களில் 49 நகரங்களில் மட்டுமே காற்றின் தரம் மேம்பட்டுள்ளது.

குறிப்பு

- இது சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தால் (MoEFCC) ஜனவரி 2019 இல் தொடங்கப்பட்டது.
- காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் நாட்டின் முதல் தேசியக் கொள்கை இதுவாகும்.
- 2024 ஆம் ஆண்டிக்கான இலக்கு: வளிமண்டலத்தில் உள்ள கரடுமுரடான மற்றும் நுண்ணிய துகள்களின் செறிவை குறைந்தபட்சம் 20% முதல் 30% வரை குறைப்பதற்கு 2017ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஒப்பிடுதல்

### 90 ஆண்டுகளுக்குப் பிறகு பெரிய ஸ்கேப் கண்டுபிடிப்பு

- 90 ஆண்டுகளுக்குப் பிறகு மணிப்பூரின் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் உள்ள லோக்டாக் ஏரியில் சமீபத்தில் சடாங்மான் என்று அழைக்கப்படும் கிரேட்டர் ஸ்கேப் என்ற அரிய வகை வாத்துகள் காணப்பட்டன.

**கிரேட்டர் ஸ்கேப் பற்றி:**

- இது அனாடிடே குடும்பத்தைச் சேர்ந்த நடுத்தர அளவிலான டைவிங் வாத்து இனமாகும்.

- இது ஆர்க்டிக் மற்றும் சபார்க்டிக் பகுதிகளில் பரவலாக காணப்படும். புலம்பெயர்ந்த பறவையாகும், இது முக்கியமாக கடலோர டன்ட்ரா வாழ்விடங்களில் கூடு கட்டுகிறது.

## தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா முழுவதும் கழுகுகள் கணக்கெடுப்பு

- மாநில அளவிலான கழுகு பாதுகாப்புக் குழு (SVCC) தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகாவில் கழுகுகள் கணக்கெடுப்பு ஒத்திசைவை நடத்த முடிவு செய்துள்ளது.

குறிப்பு:

- இது SVCC இன் முதலாவது கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.
- முதுமலை புலிகள் காப்பகத்தை சுற்றி கழுகு பாதுகாப்பு மண்டலம் (VSZ) அமைக்கும் திட்டம் விவாதிக்கப்பட்டது.

SVCC பற்றி

- மாநில அளவிலான கழுகு பாதுகாப்புக் குழு (SVCC) தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது.

குறிக்கோள்:

- 2020-2025 க்கான கழுகு பாதுகாப்பு செயல் திட்டத்தை (APVC) செயல்படுத்த
- இது மாநிலத்தில் கழுகுகளைப் பாதுகாப்பதற்கான ஒரு நிறுவன கட்டமைப்பை உருவாக்குகிறது

இந்தியாவில் கழுகுகள் பற்றி:

- இந்தியாவில் காணப்படும் ஒன்பது வகையான கழுகுகளில் ஏழு மிகவும் அருகிய இனம் மற்றும் அச்சுறு நிலையை நெருங்கியுள்ள இனம் எனப் பட்டியலிடப்பட்டுள்ளனளள.
- இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN) அச்சுறுத்தப்பட்ட உயிரினங்களின் சிவப்பு பட்டியலின் படியுள்ள நிலையாகும்.

பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் சிவப்பு பட்டியல் பற்றி

- 1964 இல் நிறுவப்பட்டது
- இது உலகின் பல்லுயிர் ஆரோக்கியத்தின் முக்கியமான குறிகாட்டியாகும்.
- உயிரினங்களை ஒன்பது வகைகளாகப் பிரிக்கிறது
  1. இனஅழிவு நிகழ்ச்சியால் அற்றுவிட்ட இனம் (EX) – Extinct
  2. இயலிடத்தில் அற்றுவிட்ட இனம் (EW) – Extinct in the Wild.
  3. மிகவும் அருகிய இனம் (CR)– Critically endangered
  4. அருகிய இனம் (EN) – Endangered
  5. அழிய வாய்ப்புள்ள இனம், பாதுகாப்பற்றவை (VU) – Vulnerable
  6. அச்சுறு நிலையை நெருங்கியுள்ள இனம் (NT–Near threatened)
  7. போதிய கவனம் இல்லாத இனம் (LC) – Least Concern
  8. தரவுகள் போதாது (DD) – Data Deficient
  9. மதிப்பீடு செய்யப்படவில்லை (NE) – Not evaluated.

## நோபலின் ஹெலன்

- அதானு போஸ், லோரன் சோனோவால் மற்றும் மான்சூன் ஜோதி கோகோய் ஆகிய மூன்று பட்டாம்பூச்சி ஆர்வலர்கள் அருணாச்சல பிரதேசத்தின் நம்தாபா தேசிய பூங்காவில் (இந்தியாவின் கிழக்குப் புலிகள் காப்பகம்) மிகவும் அரிதான நோபல் ஹெலன் பட்டாம் பூச்சியின் இருப்பைப் பதிவு செய்தனர்.
- இது இந்தியாவில் முதல் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

நோபலின் ஹெலன் பற்றி

- விலங்கியல் பெயர் – Papilio noblei
- இந்த வகை ஸ்வாலோடெயில் பட்டாம்பூச்சிகள் மியான்மர், சீனாவின் யுனான் மற்றும் ஹுபாய் பகுதிகள் , லாவோஸ், கம்போடியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்தும் பதிவாகியுள்ளன.
- இது ஒரு பெரிய முதுகெலும்பு வெள்ளை புள்ளியால் வகைப்படுத்தப்படுகிறது
- இது பின்புற இறக்கையின் அடிப்பகுதியில் சிவப்பு லூனூல்களின் முழு வரிசையையும் மற்றும் டிஸ்கல் மேல் பக்கம் வெள்ளை பகுதிகளையும் கொண்டுள்ளது.
- சோலிகாஸ் – குளவியின் புதிய இனம்
- விஞ்ஞான சமூகம் குளவியின் புதிய இனத்திற்கு சோலிகாஸின் பெயரை சூட்டியுள்ளது
- காடுகள் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பை அங்கீகரிப்பதற்காக இந்த முயற்சி எடுக்கபட்டது
- புதிய பெயர் – Soliga ecarinata



சோலிகாஸ் பற்றி

- சோலிகாக்கள் கர்நாடகா மாவட்டம் சாமராஜநகரில் உள்ள பிலிகிரி ரங்கன் மலைகளில் வாழ்ந்து வரும் ஒரு பழங்குடி சமூகம் ஆகும்.
- சோலிகா வாழ்க்கை முறையானது பழங்காலத்திலிருந்தே நவீன உலகின் மந்திரமான நிலைத்தன்மையின் தத்துவத்தில் வேரூன்றியுள்ளது.

## நிகழ்நேர மாசு காரணிகள் சேகரிக்கும் பொறிமுறை

- டெல்லியின் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் நிகழ்நேர மூல பகிர்வு 'சூப்பர்சைட்' மற்றும் ஒரு நடமாடும் காற்று தர மேலாண்மை வாகனத்தை தொடக்கிவைத்தார்.
- டெல்லியில் எந்த இடத்திலும் மாசு காற்றை அதிகரிப்பதற்கு காரணமான காரணிகளை அடையாளம் காண இது நிகழ்நேரத்தில் மாசு தரவுகளை சேகரிக்கும்.

குறிப்பு

- காற்று மாசுபாட்டின் நிகழ்நேர மூலப் பிரிவைப் பெற்ற நாட்டின் முதல் நகரமாக டெல்லி மாறியுள்ளது.



# 4. பொருளாதாரம்

## 4.1 இந்தியப் பொருளாதாரத்தின் தற்போதைய போக்குகள்

### டிசம்பரில் ஜிஎஸ்டி வருவாய் நவம்பரில் இருந்து உயர்ந்துள்ளது

- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வருவாய் டிசம்பரில் கிட்டத்தட்ட ₹1.5 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.
- இது இதுவரையிலான மூன்றாவது அதிகபட்ச மாதாந்திர வசூலாகும் மற்றும் டிசம்பர் 2021ஐ விட 15% அதிகமாகும்.
- ஜிஎஸ்டி வசூல் ₹1.4 லட்சம் கோடியைத் தாண்டிய 10வது மாதமும், சரக்குகளின் இறக்குமதி மூலம் கிடைக்கும் வருவாய் 8% உயர்ந்துள்ளது மற்றும் உள்நாட்டுப் பரிவர்த்தனைகளின் (சேவைகளின் இறக்குமதி உட்பட) வருவாய் இந்த ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் வருவாயில் இருந்து 18% அதிகரித்துள்ளது. டிசம்பர் 2021 இல்.
- மத்திய ஜிஎஸ்டி (சிஜிஎஸ்டி) ₹26,711 கோடி, மாநில ஜிஎஸ்டி (எஸ்ஜிஎஸ்டி) ₹33,357 கோடி, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி (ஐஜிஎஸ்டி) ₹78,434 கோடி (பொருட்கள் இறக்குமதி மூலம் வசூலிக்கப்படும் ₹40,263 கோடி உட்பட) மற்றும் செஸ் ₹11,005 கோடி (உடன் ₹850) பொருட்களின் இறக்குமதியில் கோடி கோடியாக வசூலிக்கப்பட்டது).
- பீகார் வருவாயில் 36% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- தமிழகத்தின் வருவாய் 25 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஜிஎஸ்டி பற்றி:

- 101வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 2016 ஜூலை 1, 2017 முதல் ஜிஎஸ்டியை அறிமுகப்படுத்தியது.
- ஜிஎஸ்டி இந்தியாவில் பழைய மறைமுக வரி முறையை மாற்றியது.
- இது "ஒரே நாடு– ஒரு சந்தை – ஒரே வரி" என்ற யோசனையுடன் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஜிஎஸ்டி என்பது ஒரு மறைமுக, பல கட்ட, நுகர்வு அடிப்படையிலான வரி அமைப்பு. இது சேவை வரி, கொள்முதல் வரி, மதிப்பு கூட்டப்பட்ட வரி, கலால் வரி மற்றும் பல உள்நாட்டு மறைமுக வரிகளை ஒரு தலையின் கீழ் உட்படுத்துகிறது.
- இதில் பெட்ரோலியம், மதுபானம் மற்றும் முத்திரை கட்டணம் இல்லை.
- ஜிஎஸ்டியின் கீழ் மூன்று வரி விண்ணப்பங்கள் சிஜிஎஸ்டி (மத்திய) எஸ்ஜிஎஸ்டி (மாநிலம்) மற்றும் ஐஜிஎஸ்டி (ஒருங்கிணைந்த) நான்கு வரி அடுக்குகள் 5%, 12%, 18%, 28% ஆகும்.

### டிசம்பரில் ரூ.12.82 லட்சம் கோடிக்கு யுபிஐ பரிவர்த்தனை

- கைப்பேசியைப் பயன்படுத்தி பணப் பரிவர்த்தனை செய்யும் (யுபிஐ) சேவை மூலம் ரூ.12.82 லட்சம் கோடி பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது.
- கடந்த டிசம்பர் மாதம் இதுவரை இல்லாத அளவுக்கு மேலே குறிப்பிட்ட தொகைக்கு 782 கோடி பரிவர்த்தனைகள் செய்யப்பட்டுள்ளன.
- 2016–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த சேவை குறித்து மத்திய நிதி சேவைகள் துறை வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், நாட்டின்
- எண்ம (டிஜிட்டல்) பரிவர்த்தனையில் புதிய புரட்சி ஏற்பட்டுள்ளது. யுபிஐ சேவை மூலம் கடந்த மாதம் இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.12.82 லட்சம் கோடி பண பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது.
- கைப்பேசி மூலம் நடைபெறும் வங்கி பண பரிவர்த்தனைக்கு கட்டணங்கள் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. இந்தச் சேவையை 381 வங்கிகள் வழங்கி வருவதால் மாதந்தோறும் இதன் மூலம் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள் அதிகரித்து வருகின்றன.

### இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.6 சதவீதமாக குறையும்: உலக வங்கி

- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அடுத்த நிதியாண்டில் 6.6 சதவீதமாக குறையும் என்று உலக வங்கி கணித்துள்ளது. இதுவே நடப்பு நிதியாண்டில் (2022–23) 6.9 சதவீதமாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.
- அதே நேரத்தில் வளரும் நாடுகள், மிகப்பெரிய சந்தையைக் கொண்ட நாடுகள் பட்டியலில் இடம் பெற்றுள்ள முதல் 7 நாடுகளில் வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டதாக இந்தியா திகழும் என்று கூறப்பட்டுள்ளது.
- 2022 ஏப்ரல் முதல் 2023 மார்ச் வரையிலான நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.9 சதவீதமாக இருக்கும். இதுவே முந்தைய நிதியாண்டில் ஆண்டில் 8.7 சதவீதமாக இருந்தது. அடுத்த நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் சற்று குறைந்து 6.6 சதவீதமாக இருக்கும், அதற்கு அடுத்த நிதியாண்டில் (2024–25) வளர்ச்சி மேலும் சரிந்து 6.1 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி கூறியுள்ளது.

### 'மென்பொருள் ஏற்றுமதி ரூ.1.76 லட்சம் கோடியைத் தொடும்": தமிழ்நாடு அரசு

- தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி இந்த ஆண்டில் ரூ.1.76 லட்சம் கோடியைத் தொடும் என்று மாநில தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டி. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.
- மென்பொருள் ஏற்றுமதியில் இந்தியாவின் 3–ஆவது பெரிய மாநிலமாக தமிழகம் திகழும்.
- உலகின் பல்வேறு நாடுகளுக்கு தமிழகத்திலிருந்து மென்பொருள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி ரூ.1.76 லட்சம் கோடியைத் தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அந்த வகையில், மென்பொருள் ஏற்றுமதியில் நாட்டின் 3–ஆவது பெரிய மாநிலமாக தமிழகம் திகழும்.
- மென்பொருள் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த தகவல் தொழில்நுட்பக் கொள்கை, தகவல் சேகரிப்பு மையக் கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கொள்கை ஆகியவற்றை வகுத்து தமிழக அரசு செயல்படுகிறது.

மேலும் 6 நகரங்களில் 5ஜி சேவை

- ஏற்கெனவே தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் தனது 5ஜி சேவையை அறிமுகப்படுத்தியுள்ள ரிலையன்ஸ் ஜியோ, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், ஒசூர், வேலூர் ஆகிய மேலும் 6 நகரங்களில் அத்தகைய சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

### நிகழ் நிதியாண்டின் 6 மாதங்களில் வருவாய் பற்றாக்குறை ரூ.4,185 கோடி நிதிநிலை ஆய்வறிக்கை

- நிகழ் நிதியாண்டில் முதல் ஆறு மாதங்களில் வருவாய் பற்றாக்குறை ரூ.4,185 கோடி ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.
- நிகழ் நிதியாண்டில் தமிழக அரசுக்கான மொத்த வருவாய் வரவுகள் ரூ.2.31 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில் மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூ.1.12 லட்சம் கோடியாக உள்ளது. இது கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாய் வரவுகளைக் காட்டிலும் 31.61 சதவீதம் கூடுதலாகும்.
- அதிகபட்ச செலவு: உதவித் தொகைகள், நிதி மாற்றங்கள் போன்றவற்றுக்காக ரூ.41,074 கோடியும், வட்டி செலுத்தியதற்காக ரூ.16,117 கோடியும், இதர செலவுகள் என்ற வகையில் ரூ.4 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

| வரவு–செலவு விவரம்: கடந்த ஆண்டு செப்டம்பர் வரை | |
|---|---|
| வருவாய் வரவுகள் | ரூ.1,12,143 கோடி |
| செலவினம் | ரூ.1,16,328 கோடி |
| பற்றாக்குறை | ரூ. 4,185 கோடி |

### 'நாட்டின் நிதி: 2022–23 பட்ஜெட் பற்றிய ஆய்வு'

- இது இந்திய ரிசர்வ் வங்கியின் ஆண்டு வெளியீடாகும்.
- நிலுவையில் உள்ள சந்தைக் கடன்களில் 45.3% ஆனது 5–10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடியவையென அறிக்கை கூறுகிறது.

### தமிழகத்தின் நிலுவையில் உள்ள கடன்கள்

- பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் திரட்டப்பட்ட நிதியில் நிலுவையில் உள்ள கடன்கள் மார்ச் 2022 இன் இறுதியில் சுமார் ₹4.73 லட்சம் கோடியாக இருந்தது.
- நிலுவையில் உள்ள தொகைகளில் சுமார் 32.4% (₹1.53 லட்சம் கோடி) 2026-27 ல் திருப்பிச் செலுத்தப்பட உள்ளது.

குறிப்பு:

- வருமானம் மற்றும் செலவு அல்லது நிதிப் பற்றாக்குறைக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க, தமிழ்நாடு அரசு மாநில வளர்ச்சிக் கடன்கள் (SDLகள்) மற்றும் பிற பத்திரங்கள் மூலம் கடன் வாங்குகிறது.
- மார்ச் 2023 இறுதி மதிப்பீட்டின் படி தமிழ்நாட்டின் மொத்த நிலுவையிலுள்ள கடன்களில் SDLகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.(₹7.54 லட்சம் கோடியில் ₹5.32 லட்சம் கோடி)
- கடன்களின் மீதமுள்ள பகுதிகள் உதய் (UDAY) பத்திரங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் கடன்கள் ஆகியவை அடங்கும்.

மாநில வளர்ச்சிக் கடன்கள் (SDLகள்) பற்றி:

- SDLகள் என்பது மாநில அரசுகளின் மாநில நிதி மற்றும் நிதிப் பற்றாக்குறையை நிர்வகிப்பதற்கு மாநில அரசுகளால் வழங்கப்படும் பத்திரங்களாகும்.
- அவை முதன்மை சந்தையில் ரிசர்வ் வங்கியால் நடத்தப்படும் சாதாரண ஏலங்கள் மூலம் வெளியிடப்படுகின்றன மற்றும் அவை இரண்டாம் நிலை சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.

### உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் (WESP) 2023 அறிக்கை

- இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்படுகிறது.
- 2023 காலண்டர் ஆண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 20 அடிப்படை புள்ளிகள் (2022 இல் 6.4% முதல் 5.8% வரை) குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இருப்பினும், இந்தியா 5.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து, வேகமாக வளரும் பெரிய பொருளாதாரமாக இந்த ஆண்டில் இருக்கும்

குறிப்பு:

- இந்த அறிக்கை ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை (UNDESA), ஐ.நா. வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) மற்றும் ஆப்பிரிக்கா, ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன், ஆசியா மற்றும் பசிபிக் மற்றும் மேற்கு ஆசியாவிற்கான பிராந்திய பொருளாதார ஆணையங்களால் சேர்ந்து தயாரிக்கப்பட்டது.

UNDESA பற்றி

- தொடக்கம் – 1978.
- இது நிலையான வளர்ச்சியின் முன்னோடி மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDG) உயிரிடமாக கருதப்படுகிறது.

UNCTAD பற்றி

- தொடக்கம் – 1964.
- இது உலகப் பொருளாதாரத்தில் வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கு உகந்த ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கிறது.

## 4.2 புதிய பொருளாதார கொள்கை மற்றும் அரசுத்துறை

### பொருளாதார முன்னோட்ட ஆய்வறிக்கை வெளியீடு 7% வளர்ச்சி காணும் என கணிப்பு

- மத்தியபட்ஜெட்தாக்கல்செய்யப்படவுள்ளநிலையில் நடப்பு 2022-23-ஆம் நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையின் முன்னோட்ட அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. அதில் நாட்டின் பொருளாதாரம் 7 சதவீதம் வளர்ச்சி காணும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2023-24-ஆம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1-ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யவுள்ளார்.
- நாட்டின் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 7 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.157.60 லட்சம் கோடியாக அதிகரிக்கும். நாட்டின் ஏற்றுமதி ரூ.35.70 லட்சம் கோடியாகவும், இறக்குமதி ரூ.46.88 லட்சம் கோடியாகவும் இருக்கும். தனிநபர் வருமானம் ரூ.96,522-ஆக இருக்கும்.



- அரிசி உற்பத்தி 6.1 சதவீதமும் கச்சா எண்ணெய் உற்பத்தி 1.4 சதவீதமும் குறையும். நிலக்கரி உற்பத்தி 17.2 சதவீதம் அதிகரிக்கும். சிமெண்ட் உற்பத்தி 10.8 சதவீதமும், எஃகு பயன்பாடு 11.5 சதவீதமும் அதிகரிக்கும். வங்கிகளில் ஒட்டுமொத்த சேமிப்பு 8.9 சதவீதமும் ஒட்டுமொத்த கடன் 17 சதவீதமும் அதிகரிக்கும்.
- உற்பத்தித் துறை 1.6 சதவீதமும் கட்டுமானத் துறை 9.1 சதவீதமும் வளர்ச்சி காணும். சுரங்கத் துறை உற்பத்தி 2.4 சதவீதம் அதிகரிக்கும். வேளாண்துறை 3.5 சதவீதமும் மனைவணிகத் துறை 6.4 சதவீதமும் வளர்ச்சி காணும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- நடப்பு நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சி 6.8 சதவீதமாக இருக்கும் என இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) கணித்துள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 6.8 சதவீதமாக இருக்கும் என சர்வதேச நிதியமும் (ஐஎம்எஃப்), 6.9 சதவீதமாக இருக்கும் என உலக வங்கியும், 7 சதவீதமாக இருக்கும் என ஆசிய வளர்ச்சி வங்கியும் கணித்துள்ளன.

## 4.3 பணம் மற்றும் வங்கி

### ரூ.16,000 கோடிக்கு இந்திய பசுமைப் பத்திரங்கள் வெளியீடு

- மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதின்படி, வரும் 25-ஆம் தேதி மற்றும் பிப்ரவரி 9-ஆம் தேதி, தலா ரூ.8,000 கோடி மதிப்பிலான பசுமை பத்திரங்கள் வெளியிடப்பட உள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்தது.
- சிங்கப்பூர், தென்கொரியா போன்ற நாடுகள் ஏற்கெனவே பசுமை பத்திரங்களை வெளியிடத் தொடங்கியுள்ளன. இந்தியாவும் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளது. இதற்கான அறிவிப்பு 2022-23 நிதியண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டது. அதன்படி, சுற்றுசூழலுக்கு உகந்த திட்டங்களில் முதலீடு செய்வதற்காக நிதி திரட்டும் நோக்கில் இந்திய பசுமை பத்திரங்கள் வெளியிடப்பட உள்ளன.

### டிஜிட்டல் பேமெண்ட்டுகளை ஊக்குவிக்கும் ஊக்கத்தொகை

- ரூபே கார்டுகள் மற்றும் யுனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸ் (யுபிஐ) மூலம் பணம் செலுத்துவதை ஊக்குவிக்க 2,600 கோடி மதிப்பிலான ஊக்கத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ரூபே கார்டுகள் மற்றும் BHIM-UPI ஐப் பயன்படுத்தி விற்பனை புள்ளி மற்றும் மின்-வணிக பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்காக வங்கிகளுக்கு நிதிச் சலுகைகள் வழங்கப்படும்.
- வணிகத் தள்ளுபடி விகிதத்தால் (MDR) ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய வங்கிகளுக்கு நிதி செலுத்தப்படும்.

BHIM-UPI பற்றி (பணத்திற்கான பாரத் இடைமுகம் – ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம்)

- இது டிசம்பர் 30, 2016 அன்று தொடங்கப்பட்டது
- இது நேஷனல் பேமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (NPCI) மூலம் உருவாக்கப்பட்டது
- BHIM என்பது பரிவர்த்தனைகளுக்கு யூனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸை (UPI) பயன்படுத்தும் ஒரு கட்டணப் பயன்பாடாகும்.
- குறிக்கோள்: தேசத்திற்கும் டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமூகத்திற்கும் நிதிச் சேர்க்கையைக் கொண்டுவருதல்.

இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (NPCI) பற்றி:

- இது இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மற்றும் இந்திய வங்கிகள் சங்கம் (IBA) ஆகியவற்றின் முன்முயற்சியாகும், இது பணம் செலுத்துதல் மற்றும் தீர்வு முறைகள் சட்டம், 2007 இன் விதிகளின் கீழ் உள்ளது.
- இது இந்தியாவில் சில்லறை கட்டணங்கள் மற்றும் தீர்வு அமைப்புகளை இயக்குவதற்கான ஒரு குடை அமைப்பாகும்.
- குறிக்கோள்: இந்தியாவில் வலுவான பணம் செலுத்துதல்மற்றும்தீர்வுக்கான உள்கட்டமைப்பை உருவாக்குதல்

**வணிகர் தள்ளுபடி விகிதம் (MDR) பற்றி:**

- MDR என்பது ஒரு வணிகர் தங்கள் வாடிக்கையாளர்களிடம் இருந்து கடன் மற்றும் டெபிட் கார்டுகள் அல்லது ஆன்லைன் பரிவர்த்தனைகள் மூலம் பணம் செலுத்துவதற்கு அவர்களின் வழங்கும் வங்கியால் வசூலிக்கப்படும் கட்டணமாகும்.

# 5. அறிவியல்



## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### சமுத்ரயான் திட்டம்

- 'சமுத்ரயான் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 3 ஆய்வாளர்களை கடலில் 500 மீட்டர் ஆழத்துக்கு அனுப்பி ஆய்வு நடத்த இந்தியா திட்டமிட்டுள்ளது' என்று மத்திய அரசு தெரிவித்தனர்.
- இதற்கென சென்னையில் உள்ள தேசிய கடல்சார் தொழில்நுட்ப (என்ஐஓடி) நிறுவன பொறியாளர்கள் எஃகினால் உருவாக்கப்பட்ட பிரத்யேக ஆய்வுக்கலத்தை வடிவமைத்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
- ஆழ்கடல் ஆய்வில் நிபுணத்துவம் பெற்றவர்களை கடலுக்கு அடியில் 6,000 மீட்டர் ஆழத்துக்கு அனுப்பி ஆய்வு நடத்த 'சமுத்ரயான்' திட்டத்தை இந்தியா உருவாக்கியுள்ளது. இதில் முதல் கட்டமாக, இந்த ஆண்டு 3 ஆய்வாளர்களை கடலில் 500 மீட்டர் ஆழத்துக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 5.2 விண்வெளி

### 'பிருத்வி-2' ஏவுகணை சோதனை வெற்றி

- 'பிருத்வி-2' ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்தது.
- ஒடிஸா மாநிலத்தின் சண்டீபூர் கடற்கரையை ஒட்டிய ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.
- இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மிகவும் துல்லியமாகத் தாக்கி அழித்ததாகப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்தது.
- அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்ட இந்த ஏவுகணை, சுமார் 350 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இலக்குகளை அழிக்கும் திறனுடையது குறிப்பிடத்தக்கது.

## 5.3 சுகாதார அறிவியல் பற்றிய சமீபத்திய கண்டுபிடிப்புகள்

### Lumpi-ProVacInd

- இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) லம்பி தோல் நோய்க்கான (LSD) Lumpi-ProVacInd தடுப்பூசியை உருவாக்கியுள்ளது.
- ஹரியானா மாநிலம் ஹிசாரில் உள்ள ICAR இன் குதிரைகளுக்கான தேசிய ஆராய்ச்சி மையம் (NRCE) மற்றும் உத்தரபிரதேசத்தின் இசத்நகரில் உள்ள இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் (IVRI) இணைந்து தடுப்பூசியை உருவாக்கியுள்ளது.
- இது எல்எஸ்டி வைரஸிலிருந்து கால்நடைகளைப் பாதுகாப்பதற்கான ஒரே மாதிரியான, நேரடி தடுப்பூசியாகும்.

**குறிப்பு**

- சமீபகாலமாக கட்டி தோல் நோயால் பல மாநிலங்களில் கால்நடைகள் இழப்பு ஏற்பட்டுள்ளது.
- கட்டி தோல் நோய் என்பது கேப்ரிபாக்ஸ் வைரஸால் ஏற்படும் ஒரு வைரஸ் நோயாகும், இது கால்நடைகளை பாதிக்கிறது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII EDUCATIONAL INSTITUTIONS SUCCESS GUARANTEED Since 2011

- இது சில வகையான ஈக்கள் மற்றும் கொசுக்கள் அல்லது உண்ணி போன்ற இரத்தத்தை உண்ணும் பூச்சிகளால் பரவுகிறது.
- கட்டுப்பாட்டு விருப்பங்களில் தடுப்பூசிகள் மற்றும் பாதிக்கப்பட்ட விலங்குகளை அழித்தல் ஆகியவை அடங்கும்.

## 5.4 ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

### அடுத்த ஆண்டில் பிஎஸ்என்எல் 5ஜி சேவை

- பொதுத் துறை தொலைத்தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல், 5ஜி சேவையை 2024-ஆம் ஆண்டு தொடங்கும் மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.
- ஜியோ, ஏர்டெல் உள்ளிட்ட தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் ஏற்கெனவே 5ஜி சேவையை முக்கிய நகரங்களில் தொடங்கிவிட்ட நிலையில், பிஎஸ்என்எல் தொடர்ந்து பின்தங்கியுள்ளது.
- ஜியோ, ஏர்டெல் நிறுவனங்களின் 5ஜி சேவையை ஒடிஸாவில் வியாழக்கிழமை தொடங்கப்பட்டது.
- 'இப்போது புவனேசுவரம், கட்டக் நகரங்களில் 5ஜி சேவை தொடங்கப்பட்டுள்ளது. அடுத்த 2 ஆண்டுகளில் மாநிலம் முழுவதும் 5ஜி சேவை கிடைக்கும்' என்றார்.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



### MGNREGS இல் பெண்கள் புதிய பாதையை உருவாக்குகிறார்கள்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் (MGNREGS) பெண்களின் பங்களிப்பு 2022-23 நிதியாண்டில் 10 ஆண்டுகளில் அதிகபட்சமாக அதிகரித்துள்ளது.
- மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்திடம் உள்ள சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, 2022 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திய தொழிலாளர்களில் 57.8% பேர் பெண்களாக இருந்தனர், இது 2012-13 ஆம் ஆண்டிலிருந்து அவர்களின் அதிகபட்ச பங்களிப்பாகும்.
- கடந்த ஐந்து ஆண்டுகளாக, கேரளா மற்றும் தமிழ்நாட்டில், MGNREGS பணியாளர்களில் பெண்களின் பங்கு 85% முதல் 90% வரை உள்ளது.
- பெண்களின் பங்கேற்பு இரண்டு காரணிகளால் அதிகரித்தது – சந்தை சக்திகள் மற்றும் பெண்கள் MGNREGS தொழிலாளர்களுக்கான நலன்புரி ஊக்கத்தொகை.
- பீகார் மற்றும் உத்தரபிரதேசத்தில் வளர்ச்சி ஸ்பைக் அதிகமாக இருந்தது.
- பீகாரில் பெண் தொழிலாளர்களின் விகிதம் இந்த ஆண்டு 3.7 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது, அதே நேரத்தில் உ.பி. 3.3 சதவீத புள்ளி உயர்வு கண்டது.

MGNREGA பற்றி

- ஆகஸ்ட் 25, 2005 அன்று தொடங்கப்பட்டது.
- MGNREGA ஆனது சட்டப்பூர்வ குறைந்தபட்ச ஊதியத்தில் திறமையற்ற கைமுறை வேலையைச் செய்ய விரும்பும் கிராமப்புற குடும்பத்தைச் சேர்ந்த வயதுவந்த உறுப்பினர்களுக்கு நூறு நாட்கள் வேலைக்கான சட்டப்பூர்வ உத்தரவாதத்தை வழங்குகிறது.
- ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் (MRD) செயல்படுத்தப்பட்டது.
- கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, முதன்மையாக அரை அல்லது திறமையற்ற வேலை, கிராமப்புற இந்தியாவில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு.
- 5 கிமீ சுற்றளவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்: 5 கிமீக்கு மேல் இருந்தால் கூடுதல் ஊதியம் வழங்கப்படும்.

### மத்திய அரசு அலுவலகங்கள் டிஜிட்டல் மயமாக்கப்படும்

- பிப்ரவரி 2023 க்குள் அனைத்து மத்திய அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகள் e-office 7.0 க்கு மாறுமாறு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.
- இதுவரை, 74 அமைச்சகங்கள் மற்றும் துறைகள் மின்-அலுவலகம் பதிப்பு 7.0 க்கு இடம்பெயர்ந்துள்ளன.
- குறைந்தது 13 அலுவலகங்கள் இன்னும் புதுப்பிக்கப்பட்ட அமைப்புக்கு மாறவில்லை

மின் அலுவலகம் 7.0 பற்றி

- இது நேஷனல் இன்ஃபர்மேட்டிக்ஸ் சென்டரால் (என்ஐசி) உருவாக்கப்பட்ட ஒரு உள்ளக அமைப்பு.
- சரியான நேரத்தில் பாதுகாப்பு தணிக்கைகள் மற்றும் போதுமான ஃபயர்வால்கள் கொண்ட மிகவும் பாதுகாப்பான அமைப்பு.
- இது இரண்டு காரணி அங்கீகாரத்துடன் வகைப்படுத்தப்படாத கோப்புகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது மற்றும் இணையத்தில் கிடைக்காது ஆனால் NICNET (NIC இன் ICT நெட்வொர்க்) இல் கிடைக்கிறது.
- CERT-IN குழுவில் உள்ள மூன்றாம் தரப்பு ஏஜென்சிகளால் அறியப்பட்ட பாதிப்புகளுக்கு மின்-அலுவலக விண்ணப்பம் தொடர்ந்து தணிக்கை செய்யப்படும்.
- மின்-அலுவலகத்திற்கு இடம்பெயர்வதற்கான காரணங்கள் 7.0

- கம்ப்யூட்டர் எமர்ஜென்சி ரெஸ்பான்ஸ் சிஸ்டத்தின் (CERT–IN) அரையாண்டு அறிக்கை 2022 இல் ransomware சம்பவங்கள் நடந்ததாகக் கூறுகிறது.
- டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (எய்ம்ஸ்) சர்வர்கள் மீது சமீபத்திய சைபர் மற்றும் ரான்சம்வேர் தாக்குதல்.

குறிப்பு

- CERT–IN, கணினி பாதுகாப்பு சம்பவங்களுக்கு பதிலளிப்பதற்கான நோடல் ஏஜென்சி.

## அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி 4% உயர்வு

- அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 4 சதவீதம் உயர்த்தி ஜனவரி 1 முதல் வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஆய்வு செய்ய குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் முதல்வர் கூறியுள்ளார்.
- அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையான அகவிலைப்படி உயர்வு குறித்து கனிவுடன் பரிசீலித்து, இந்த உயர்வை 2023 ஜனவரி 1 முதல் செயல்படுத்த அரசு முடிவு எடுத்துள்ளது.
- அதன்படி, தற்போது 34 சதவீதமாக உள்ள அகவிலைப்படி ஜனவரி 1 (ஞாயிற்றுக்கிழமை) முதல் 38 சதவீதமாக உயர்த்தப்படும்.
- இதனால், சுமார் 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர்.
- இந்த உயர்வால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூ.2,359 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.
- **கோரிக்கைகளை ஆய்வு செய்ய குழு:** சம வேலை–சம ஊதியம் என்ற கோரிக்கை தொடர்பாக வலியுறுத்தி போராடி வரும் ஆசிரியர்களின் கோரிக்கைகள் குறித்து ஆய்வு செய்து, தகுந்த பரிந்துரைகளை அளிப்பதற்காக, நிதித்துறைச் செயலர் (செலவினம்) தலைமையில், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு அமைக்கப்படும்.

## உயர்நீதிமன்ற புதிய நீதிபதிகளில் 11% மட்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

- உயர்நீதிமன்றங்களுக்குக் கடந்த 5 ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட 537 நீதிபதிகளில் 11 சதவீதத்தினர் மட்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.
- கடந்த 2018 முதல் 2022 வரை நாட்டில் உள்ள உயர்நீதிமன்றங்களுக்கு 537 நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். அவர்களில் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் 1.3 சதவீதத்தினர். பட்டியலினத்தைச் சேர்ந்தவர்கள் 2.8 சதவீதத்தினர். 11 சதவீத நீதிபதிகள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த நீதிபதிகள் 2.6 சதவீதம். 20 நீதிபதிகளின் சமூகப் பின்னணி சார்ந்த விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

## 108வது இந்திய அறிவியல் காங்கிரஸ்

- மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் இந்திய அறிவியல் காங்கிரஸின் (ஐஎஸ்சி) 108வது அமர்வு தொடங்கப்பட்டது.
- இந்திய அறிவியல் காங்கிரஸ் 2023 இல் பிரதமர் நரேந்திர மோடி கிட்டத்தட்ட உரையாற்றினார்.
- இந்நிகழ்ச்சியை நாக்பூர் பல்கலைக்கழகம் அதன் அமராவதி சாலை வளாகத்தில் நடத்துகிறது.
- ISC 2022 இன் மையக் கருப்பொருள் "பெண்கள் அதிகாரமளித்தலுடன் நிலையான வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்."
- பெண்கள் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய நிலையான வளர்ச்சியே ISC இன் முக்கிய சிறப்பம்சமாகும்.

வரலாறு

- இந்திய அறிவியல் காங்கிரஸ் சங்கம் (ISCA) இரண்டு பிரிட்டிஷ் வேதியியலாளர்களின் தொலைநோக்கு மற்றும் முன்முயற்சி தோற்றமாகும்.
- காங்கிரஸின் முதல் கூட்டம் 1914 ஜனவரியில் கல்கத்தாவில் உள்ள ஆசியடிக் சொசைட்டி வளாகத்தில் நடைபெற்றது.

## ஆயுர்வேத நிபுணர்களுக்கான ஸ்மார்ட் திட்டம்

- ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் (MoA) கீழ் உள்ள இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையம் (NCISM) மற்றும் ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில் (CCRAS) ஆகியவற்றால் ஸ்மார்ட் (ஆசிரியர் வல்லுநர்களில் ஆயுர்வேத ஆராய்ச்சியை முதன்மைப்படுத்துவதற்கான நோக்கம்) திட்டம் தொடங்கப்பட்டது.
- இது ஆயுர்வேத கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் மூலம் இரும்புச்சத்து குறைபாடு இரத்த சோகை, உடல் பருமன் போன்ற முன்னுரிமை சுகாதார ஆராய்ச்சி பகுதிகளில் அறிவியல் ஆராய்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முறையே மருத்துவக் கல்வியை ஒழுங்குபடுத்துவதற்கும் அறிவியல் ஆராய்ச்சி நடத்துவதற்கும் தொடங்கப்பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட முன்முயற்சியானது, கீல்வாதம், இரும்புச்சத்து குறைபாடு இரத்த சோகை, நாள்பட்ட மூச்சுக்குழாய் அழற்சி, டிஸ்லிபிடெமியா, முடக்கு வாதம், உடல் பருமன், நீரிழிவு நோய், தடிப்புத் தோல் அழற்சி, பொதுவான நோயியலுக்குரிய கவலை போன்ற சுகாதார ஆராய்ச்சிப் பகுதிகளில் புதுமையான ஆராய்ச்சி யோசனைகளை அடையாளம் காணவும், ஆதரிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் ஒரு நோக்கத்துடன் கருத்தாக்கப்பட்டுள்ளது. கொழுப்பு கல்லீரல் நோய் (NAFLD).

NCISM பற்றி

- இதுமருத்துவக்கல்வியைஒழுங்குபடுத்துவதற்காக NCISM சட்டம், 2020 மூலம் MoA இன் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- தரமான மற்றும் மலிவு விலையில் மருத்துவக் கல்விக்கான அணுகலை மேம்படுத்துவதுடன், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இந்திய மருத்துவ முறையின் போதுமான மற்றும் உயர்தர மருத்துவ நிபுணர்கள் கிடைப்பதை உறுதி செய்கிறது.

CCRAS பற்றி

- MoA இன் தன்னாட்சி அமைப்பு.
- ஆயுர்வேத அறிவியலில் அறிவியல் ரீதியில் ஆராய்ச்சியை மேற்கொள்வது, ஒருங்கிணைத்தல், உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கான உச்ச அமைப்பு.
- அதன் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் மருத்துவ தாவர ஆராய்ச்சி (மருத்துவ–எத்னோ தாவரவியல் ஆய்வு, மருந்தியல் மற்றும் திசு வளர்ப்பு), மருந்து தரநிலைப்படுத்தல் போன்றவை அடங்கும்.
- ஆயுர்வேதத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள்
- ஆயுஷ் ஔஷதி குணவட்ட ஏவம் உத்பதன் சம்வர்தன் யோஜனா (AOGUSY)க்கான மத்தியத் துறைத் திட்டம்.
- 9வது உலக ஆயுர்வேத காங்கிரஸ் கோவாவில் உலக அளவில் ஆயுஷ் மருத்துவ முறைகளின் திறன் மற்றும் வலிமையை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்றது.



## அறிவியல் வளர்ச்சியின் இலக்கு தற்சார்பு இந்தியா

- மகாராஷ்டிர மாநிலம், நாகபுரியில் 108–ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை காணொலி முறையில் பிரதமர் தொடக்கி வைத்தார். பின்னர் உரையாற்றிய அவர், அடுத்த 25 ஆண்டுகளுக்கான நாட்டின் அறிவியல் தொலைநோக்குப் பார்வை குறித்து பேசினார்.
- **புத்தாக்க குறியீட்டில் முன்னேற்றம்:** உலக புத்தாக்க குறியீட்டில் கடந்த 2015–இல் 81–ஆவது இடத்தில் இருந்த இந்தியா,2022–இல் 40–ஆவது இடத்துக்கு முன்னேறியது.
- "பெண்களுக்கு அதிகாரமளிப்பதுடன் கூடிய நிலையான வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்கள்" என்ற கருப்பொருளில் நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கிறது.
- **புதிய தடுப்பூசிகள் குறித்த ஆய்வுகள்:** புதிய தொற்றுநோய்களை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் உருவாக்கத்தில் அறிவியல் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானதாகும்.
- உலக மக்கள்தொகையில் 17 முதல் 18 சதவீதத்தை இந்தியா கொண்டுள்ளது. எனவே, இந்திய மக்களின் வளர்ச்சி என்பது உலக வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.
- 2023–ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா. அறிவித்திருப்பது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமைக்குரிய விஷயமாகும்.

## ஆதார் முகவரி புதுப்பித்தலுக்கு 'குடும்பத் தலைவர்' முறை அறிமுகம்

- 'ஆதார்' அடையாள அட்டையை வழங்கும் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) 'குடும்பத் தலைவர்' என்கிற முறையை ஏற்படுத்தியுள்ளது; இதன்மூலம் குடும்ப உறுப்பினர்களை ஒருங்கிணைத்து முகவரி உள்ளிட்ட வசதிகளை செய்துள்ளதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- ஆதாரில் ஏற்கெனவே இருப்பிடச் சான்று ஆவண வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது குடும்பத் தலைவர் (ஹெச்ஓஃஎப்–ஹெட் ஆஃப் தி பேஃமிலி) முறை கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி, 18 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் குடும்பத் தலைவராக பதிவு செய்து கொள்ளலாம். ஹெச்ஓஃஎப் தனது முகவரியை மற்ற குடும்ப உறுப்பினர்களான மனைவி, தந்தை, தாய், மகன்கள்/மகள்கள், உடன் பிறந்தவர்களோடு பகிர்ந்துகொள்ளலாம்.

- ஒருவர் முகவரியை முகவரியை மாற்றும் (https://myaadhaar.uidai.gov.in/) என்ற தளத்தில் இந்த முறையைப் பயன்படுத்தலாம். இதற்கு குடும்பத் தலைவரின் ஆதார் எண்ணைப் பதிவு செய்து சரிபார்த்தல் நடைமுறையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். பின்பு, ஹெச்ஓஎஃப்வுடன் உறவுமுறை ஆவணச்சான்றை பதிவேற்றம் செய்ய வேண்டும். அதாவது விண்ணப்பதாரருக்கும், குடும்பத் தலைவருக்கும் இடையேயான உறவை குறிப்பிட்டு, அவர்களது பெயர்கள், குடும்ப அட்டை, தேர்வு மதிப்பெண் சான்றிதழ், திருமணச் சான்றிதழ், கடவுச்சீட்டு போன்ற ஆவணங்களை ஆதாரமாகச் சமர்ப்பித்து குடும்பத் தலைவரோடு இணைக்கலாம்.
- இந்தச் சேவையைப் பயன்படுத்துவதற்கான கட்டணம் ரூ.50. இந்தக் கட்டணம் செலுத்தப்பட்ட பிறகு குடும்பத் தலைவருக்கு இதுகுறித்த குறுஞ்செய்தி அனுப்பப்படும். தகவல் அனுப்பப்பட்ட நாளிலிருந்து 30 நாள்களுக்குள் மேல் குறிப்பிட்ட இணையதளத்தில் குடும்பத்தலைவர் தமது ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டும். 30 நாள்களுக்குள் குடும்ப உறுப்பினரின் கோரிக்கையைகுடும்பத்தலைவர் நிராகரித்தாலோ அல்லது தமது முகவரியைப் பகிர்ந்துகொள்ள விருப்பம் தெரிவிக்காவிட்டாலோ சம்பந்தப்பட்ட விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படாது. இது சம்பந்தமான தகவல், விண்ணப்பித்தவருக்கு குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும். எந்தச் சூழ்நிலையிலும் செலுத்திய கட்டணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

## வடகிழக்கு கலைஞர்களின் கலாசார விழா தொடக்கம்

- தென்மண்டல கலாசார மையத்தின் ஆக்டேவ் 2023–வடகிழக்கின் கலாசார திருவிழாவை தமிழக ஆளுநரும், அம்மையத்தின் தலைவருமான ஆர்.என்.ரவி தொடக்கி வைத்தார்.
- இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள பாரம்பரிய கலைகளை மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் தென்மண்டல கலாசார மையத்தின் சார்பில் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

## சியாச்சினில் முதல் பெண் ராணுவ அதிகாரி

- இமயமலையில் உள்ள சியாச்சின் பனி மலைப் பகுதியில் முதல்முறையாக சிவா சௌஹான் என்ற பெண் ராணுவ அதிகாரி பணியமர்த்தப்பட்டுள்ளார்.
- உலகின் மிக உயரமான போர் முனையாக சியாச்சின் பனி மலைப்பகுதி உள்ளது. இது நாட்டின் பாதுகாப்புக்கு உத்திசார்ந்து முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக உள்ளது.
- போர்முனையில் பணியமர்த்தப்படும் முன் பனிச்சுவர் மீது ஏறுவது, பனிச்சரிவிலும் பனிப்பாறைக்கு இடையிலும் சிக்கியவர்களை மீட்பது என ஒரு மாத காலம் கடுமையான பயிற்சிகளை அவர் மேற்கொண்டார்.
- போர்முனையில் சாலை கட்டுமானம், பதுங்குமிடம் அமைத்தல் என ராணுவத்தின் போர் நடவடிக்கைகளுக்கு உதவும் எண்ணற்ற பணிகளில், அவர் தலைமையிலான குழு 3 மாதங்கள் சியாச்சினில் ஈடுபடுத்தப்படும் என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது. ராஜஸ்தானைச் சேர்ந்த சிவா சௌஹான் சிவில் பொறியியல் பட்டதாரி ஆவார்.

## அரசியலமைப்பு சட்டம் பூங்கா திறப்பு

- மாநிலத் தலைநகர் ஜெய்பூரில் உள்ள ஆளுநர் மாளிகையில் "பொலிவுறு நகரம்" (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள "அரசிலமைப்புச் சட்டப் பூங்காவைத் திறந்து வைத்து அரசியலமைப்புச் சட்டத்தில் இதுவரை 105 சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் நமது அரசியலமைப்புச் சட்டம் ஓர் உயிர்ப்புள்ள ஆவணமாகத் திகழ்கிறது. காலத்தைப் பொறுத்து பொதுமக்களின் நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திறனுடையதாக நமது அரசிலமைப்புச் சட்டம் விளங்குகிறது.
- சூரிய மின்சக்தி திட்டத்துக்கு அடிக்கல்: இந்திய பவர்கிரிட் நிறுவனத்தின் மூலம் 8.9 ஜிகாவாட் சூரிய மின்சக்தியை பத்ரா, ஃபதேகர், பிகானீர் பிராந்தியங்களுக்குக் கொண்டுச் செல்வதற்காக தொடக்கி வைத்தார்.
- மேலும், 1,000 மெகா வாட் மின்சக்தியை உற்பத்தி செய்யம் பிகானீர் சூரிய மின்சக்தி திட்டத்துக்கு ஜெய்பூரில் இருந்தபடி காணொலி வாயிலாக திரௌபதி முர்மு அடிக்கல் நாட்டினார்.
- சட்லஜ் நீர்மின்சக்தி கழகத்தின் (எஸ்ஜெவிஎன்) துணை நிறுவனமான எஸ்ஜெவிஎன் பசுமை எரிசக்தி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டம் அடுத்த ஆண்டு மார்ச் செயல்பாட்டுக்கு வரும்.
- இத்திட்டத்தின் வாயிலாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்துக்கான பயன்பாட்டுக் கட்டணம் அதிகபட்சமாக ஒரு யூனிட்டுக்கு ரூ.2.57 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



## ரூ.19,744 கோடியில் பசுமை ஹைட்ரஜன் திட்டம்

- ரூ.19,744 கோடி ஆரம்பகட்ட மதிப்பீட்டிலான தேசிய பசுமை திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.
- கரியமில வாயு வெளியேற்றத்தை குறைக்கும் நோக்கில், பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான ஊக்கத்தொகை திட்டமாக இது செயல்படுத்தப்படும்.
- பசுமை ஹைட்ரஜன் மற்றும் அதன் துணைப் பொருள்களின் உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதிக்கான மையமாக இந்தியாவை மாற்றுவதை நோக்கமாக கொண்டு, தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. ஆண்டுக்கு 5 மில்லியன் மெட்ரிக் டன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை அடுத்த 5 ஆண்டுகளில் எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான செலவை குறைப்பதற்கு இந்த ஊக்கத்தொகை திட்டம் உதவும். ரூ.19,744 கோடி ஆரம்பகட்ட மதிப்பீட்டிலான இத்திட்டத்தின்கீழ், ஹைட்ரஜன் எரிபொருளுக்கு மாறுவதற்கான உத்திசார் இடையீட்டு திட்டத்துக்கு ரூ.17,490 கோடி, சோதனை அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கு ரூ.1,466 கோடி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ.400 கோடி, இதர அம்சங்களுக்கு ரூ.388 கோடி செலவிடப்படும். 'ரூ.8 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்படும்':
- முக்கிய நாடுகளின் வரிசையில் இந்தியா: வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் எரிபொருளாக பயன்படுத்தவல்ல ஹைட்ரஜன், தண்ணீர் பிரிப்பு முறையில் உற்பத்தி செய்யப்படுதாகும். சூரியசக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க வளங்களில் இருந்து கிடைக்கப் பெறும் மின்சாரத்தை பயன்படுத்தி, மின்பகுப்பு முறையில் தண்ணீரில் இருந்து பசுமை ஹைட்ரஜன் பிரித்தெடுக்கப்படுகிறது. இந்த செயல்முறையில், உப பொருளாக ஆக்ஸிஜன் கிடைக்கிறது.
- பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான மானியம் மற்றும் ஆதரவு திட்டங்கள், உலகின் முக்கிய நாடுகளால் அறிவிக்கப்பட்டு வருகின்றன. ஜெர்மனி, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகள், பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கு ஆதரவளித்து வரும் நிலையில், அமெரிக்காவிலும் இதற்கான மாபெரும் திட்டம் அண்மையில் அறிவிக்கப்பட்டது.
- கோவா விமான நிலையத்துக்கு பாரிக்கர் பெயர்: கோவாவின் மோபா பகுதியில் அண்மையில் திறக்கப்பட்ட பசுமை விமான நிலையத்துக்கு மறைந்த முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சரும் முன்னாள் முதல்வருமான மனோகர் பாரிக்கர் பெயர்சூட்ட மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி, கோவா பசுமை சர்வதேச விமான நிலையத்துக்கு 'மனோகர் சர்வதேச விமான நிலையம்' என பெயர் சூட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.எ.நஸீர் ஓய்வு

- உச்சநீதிமன்ற நீதிபதி பதவியிலிருந்து நீதிபதி எஸ்.ஏ. நஸீர் ஓய்வு பெற்றார். 'நீதிபதி நஸீர் எப்போதும் நீதியின் பக்கம் நின்றவர்' என்று தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் புகழாரம் என்று சூட்டினார்.

## மாநில நீர்வளத் துறை அமைச்சர்களின் முதலாவது தேசிய மாநாடு

- மாநில நீர்வளத் துறை அமைச்சர்களின் முதலாவது தேசிய மாநாடு மத்திய ஜல்சக்தி அமைச்சகம் சார்பில் மத்திய பிரதேச தலைநகர் போபாலில் தொடங்கியது.
- அரசமைப்புச் சட்டப்படி நீர் மேலாண்மை என்பது மாநிலங்களின் அதிகாரத்துக்கு உள்பட்டது. அதைக் கருத்தில் கொண்டு நீர்ப்பாதுகாப்பில் நாட்டின் இலக்குகளை அடைவதற்கு மாநிலங்கள் திறம்படப் பணியாற்ற வேண்டும். அடுத்த 25 ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் நாட்டை வளர்ச்சி அடையச் செய்வதற்கு நீர் மேலாண்மை மிகவும் அவசியம்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பெரும்பாலான பணிகள், நீர்ப் பாதுகாப்பு சார்ந்ததாகவே இருக்க வேண்டும். வேளாண்மை, தொழிற்சாலைகள் ஆகியவற்றில் நீர் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## புதிய நாடாளுமன்றம்: எம்.பி.க்களுக்கு 'ஸ்மார்ட் கார்டு'

- புதிய நாடாளுமன்றக்கட்டடத்தில் நுழைவின்போது பயன்படுத்துவதற்காக, எம்.பி.க்களுக்கு 'ஸ்மார்ட் கார்டு' அடிப்படையிலான புதிய அடையாள அட்டைகள் தயாரிக்கும் பணியை மக்களவைச் செயலகம் தொடங்கியுள்ளது.

- நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் அமர்வு வரும் 31–ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி 10–ஆம் தேதி வரையும், இரண்டாம் அமர்வு மார்ச் 6–ஆம் தேதி முதல் ஏப்ரல் 6–ஆம் தேதி வரையும் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் தேதிகள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.
- பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் அமர்வு, புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறும் என்று ஏற்கெனவே தகவல்கள் வெளியாகின.
- இந்நிலையில், புதிய நாடாளுமன்றத்தில் நுழைவின்போது எம்.பிக்கள் பயன்படுத்துவதற்கான ஸ்மார்ட் கார்டு அடிப்படையிலான அடையாள அட்டைகள் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளதாக மக்களவைச் செயலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- மிகுந்த பாதுகாப்பு அம்சங்களுடன் உருவாக்கப்படும் இந்த அடையாள அட்டைக்காக, எம்.பிக்களின் தனிப்பட்ட விவரங்கள், பயோ மெட்ரிக் தரவுகள் சேகரிக்கப்படும். இது, முக அடையாளப் பதிவு அமைப்பு முறையையும் உள்ளடக்கியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தில்லியில் சென்ட்ரல் விஸ்டா மறுமேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக புதிய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு 2020, டிசம்பரில் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.
- 2022 இறுதிக்குள் புதிய நாடாளுமன்றக் கட்டடப் பணிகள் நிறைவடைந்துவிடும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், வரும் பிப்ரவரிக்குள் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய நேரத்தை சீராக கடைப்பிடிக்க விரைவில் கொள்கை: மத்திய அரசு

- தொலைத்தொடர்பு நிறுவனங்கள், இணையதள சேவை வழங்கும் நிறுவனங்கள் உள்ளிட்டவை துல்லியமான இந்திய நேரத்தை (ஐஎஸ்டி) பயன்படுத்துவதைக் கட்டாயமாக்குவதற்கான கொள்கை விரைவில் வெளியிடப்படவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- பிரிட்டன் தலைநகர் லண்டன் வழியே செல்லும் கிரீன்விச் கோட்டை அடிப்படையாகக் கொண்டே உலக நேரம் கணக்கிடப்பட்டு வருகிறது. அதன்படி, அங்கு நிலவும் நேரத்தை விட இந்திய நேரம் ஐந்தரை மணி நேரம் முன்கூட்டிச் செல்கிறது (ஜிஎம்டி+5.30). இதுவே இந்தியன் ஸ்டாண்டர்ட் டைம் (ஐஎஸ்டி) என்னும் இந்திய நேரம். நாடு முழுமைக்கும் இந்த ஒரே நேரமே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- அனைத்து தொலைத்தொடர்பு நிறுவனங்கள், இணைய சேவை வழங்கும் நிறுவனங்கள் உள்ளிட்டவை துல்லியமான இந்திய நேரத்தைக் கடைப்பிடிப்பதில்லை. அமெரிக்காவின் செயற்கைக்கோள்கள் அமைப்பு உள்ளிட்ட மற்ற தளங்கள் வழங்கும் நேரத்தை அவை கடைப்பிடித்து வருகின்றன.
- "இஸ்ரோ, தேசிய இயற்பியல் ஆய்வகம் ஆகியவற்றுடன் இணைந்து துல்லிய இந்திய நேரத்தை (ஐஎஸ்டி) அனைத்து நிலைகளிலும் கடைப்பிடிக்கும் நடவடிக்கைகளை அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது.
- ஒரு விநாடியில் 100 கோடி பங்கு என்ற அளவிலான நேர துல்லியத்தன்மை உயர் அறிவியல் ஆராய்ச்சியில் தேவைப்படுகிறது.
- செயற்கைக்கோள் செயல்பாடு, தொலைத்தொடர்பு, இணைய சேவை வழங்குதல், வங்கி கட்டமைப்புகள், எண்ம நிர்வாகம், போக்குவரத்து கட்டமைப்புகள், இணையவழி பணப் பரிவர்த்தனை, பாதுகாப்பு கட்டமைப்புகள், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் துல்லிய நேரத்தின் பயன்பாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது" என்றார்.

## நிலக்கரி உற்பத்தி 61 கோடி டன்னாக அதிகரிப்பு

- நடப்பு நிதியாண்டின் முதல் 9 மாதங்களில் இந்தியாவின் நிலக்கிரி உற்பத்தி 60.80 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.
- இது கடந்த ஆண்டின் ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில் நாட்டின் நிலக்கரி உற்பத்தி 16.39 சதவீதம் உயர்ந்து 60.80 கோடி டன்னாக உள்ளது.
- முந்தைய 2021–ஆம் ஆண்டின் இதே மாதங்களில் நிலக்கிரி உற்பத்தி 52.23 கோடி டன்னாக இருந்தது.
- நாட்டின் நிலக்கரி உற்பத்தியில் அரசுக்கு சொந்தமான கோல் இந்தியா நிறுவனத்தின் பங்கு 80 சதவீதத்துக்கு மேல் உள்ளது. மதிப்பீட்டு மாதங்களில் அந்த நிறுவனத்தின் உற்பத்தி முந்தை ஆண்டின் அதே காலகட்டத்தைவிட 15.82 சதவீதம் அதிகரித்து 47.9 கோடி டன்னாக இருந்தது.



## ஆண்டில் இந்தியாவில் 2.11 கோடி வாகனங்கள் விற்பனை 2021 உடன் ஒப்பிடுகையில் 15% அதிகம்

- இந்தியாவில் கடந்த ஆண்டு வாகன விற்பனை 15 சதவீதம் உயர்ந்துள்ளது என்றும் மொத்தமாக 2.11 கோடி வாகனங்கள் விற்பனையாகியுள்ளன என்றும் ஆட்டோ மொபைல் டீலர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (எப்ஏடிஏ) தெரிவித்துள்ளது.
- 2021–ம் ஆண்டில் 1.83 கோடி வாகனங்கள் விற்பனையாகின. இந்நிலையில் 2022–ல் விற்பனை 2.11 கோடியாக உயர்ந்துள்ளது.
- சென்ற ஆண்டில் 1.53 கோடி இரு சக்கர வாகனங்கள் விற்பனையாகியுள்ளன. இது 2021 ஆண்டைவிட 13.37 சதவீதம் அதிகம். 2021–ல் 1.35 கோடி இருசக்கர வாகனங்கள் விற்பனையாகின.
- அதேபோல், 2021–ல் பயணிகள் வாகன விற்பனை 29.49 லட்சமாக இருந்த நிலையில், 2022–ல் அது 16 சதவீதம் உயர்ந்து 34.31 லட்சமாக உள்ளது.
- மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் டிராக்டர்கள் விற்பனை சென்ற ஆண்டில் உச்சம் தொட்டுள்ளது. 2021–ல் மூன்று சக்கர வாகன விற்பனை 3.73 லட்சமாக இருந்த நிலையில் 2022–ல் அது 6.40 லட்சமாக உயர்ந்துள்ளது. அதேபோல் டிராக்டர்கள் விற்பனை 7.69 லட்சத்திலிருந்து 7.94 லட்சமாக உயர்ந்துள்ளது.

## பொருளாதார முன்னோட்ட ஆய்வறிக்கை வெளியீடு 7% வளர்ச்சி காணும் என கணிப்பு

- மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில் நடப்பு 2022–23–ஆம் நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையின் முன்னோட்ட அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. அதில் நாட்டின் பொருளாதாரம் 7 சதவீதம் வளர்ச்சி காணும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2023–24–ஆம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1–ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யவுள்ளார்.
- நாட்டின் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 7 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.157.60 லட்சம் கோடியாக அதிகரிக்கும். நாட்டின் ஏற்றுமதி ரூ.35.70 லட்சம் கோடியாகவும், இறக்குமதி ரூ.46.88 லட்சம் கோடியாகவும் இருக்கும். தனிநபர் வருமானம் ரூ.96,522–ஆக இருக்கும்.
- அரிசி உற்பத்தி 6.1 சதவீதமும் கச்சா எண்ணெய் உற்பத்தி 1.4 சதவீதமும் குறையும். நிலக்கரி உற்பத்தி 17.2 சதவீதம் அதிகரிக்கும் சிமெண்ட் உற்பத்தி 10.8 சதவீதமும், எஃகு பயன்பாடு 11.5 சதவீதமும் அதிகரிக்கும். வங்கிகளில் ஒட்டுமொத்த சேமிப்பு 8.9 சதவீதமும் ஒட்டுமொத்த கடன் 17 சதவீதமும் அதிகரிக்கும்.
- உற்பத்தித் துறை 1.6 சதவீதமும் கட்டுமானத் துறை 9.1 சதவீதமும் வளர்ச்சி காணும். சுரங்கத் துறை உற்பத்தி 2.4 சதவீதம் அதிகரிக்கும். வேளாண்துறை 3.5 சதவீதமும் மனைவணிகத் துறை 6.4 சதவீதமும் வளர்ச்சி காணும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- நடப்பு நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சி 6.8 சதவீதமாக இருக்கும் என இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) கணித்துள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 6.8 சதவீதமாக இருக்கும் என சர்வதேச நிதியமும் (ஐஎம்எஃப்), 6.9 சதவீதமாக இருக்கும் என உலக வங்கியும், 7 சதவீதமாக இருக்கும் என ஆசிய வளர்ச்சி வங்கியும் கணித்துள்ளன.

## ஹைட்ரஜன் எதிர்கால எரிபொருள்

- எரிசக்திக்காக மரபுசார் ஆற்றல் மூலங்களையே இந்தியா இன்னும் சார்ந்துள்ளது. மின்சார உற்பத்தியில் சுமார் 70 சதவீதமானது நிலக்கரியைப் பயன்படுத்தும் அனல்மின் நிலையங்கள் மூலமாகவே பெறப்பட்டு வருகிறது. வாகனங்கள் போக்குவரத்துக்கு கச்சா எண்ணெயை இந்தியா அதிக அளவில் சார்ந்துள்ளது. அதிலும் உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தி குறைவாகவே உள்ள நிலையில், கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு வெளிநாடுகளை நம்பி செயல்பட வேண்டிய நிலைமை இந்தியாவுக்கு உள்ளது.

### சுற்றுச்சூழல் பாதிப்பு

- கச்சா எண்ணெய், நிலக்கரி உள்ளிட்டவற்றைப் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழலும் அதிக அளவில் பாதிப்புக்கு உள்ளாகி வருகிறது. அதைக் கருத்தில்கொண்டு மரபுசாரா ஆற்றல் மூலங்களில் இருந்து எரிசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா தீவிரப்படுத்தி வருகிறது. அதன் ஒருபகுதியாகவே தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது.

**நிதி ஒதுக்கீடு**

- தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்துக்க மத்திய அரசு ரூ.19,744 கோடியை ஒதுக்கியுள்ளது. அதன் மூலமாக கட்டமைப்பு மேம்பாடு, உற்த்தி ஆலைகளை அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**முக்கிய தூண்கள்**

- பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரித்து, பயன்பாட்டை ஊக்குவித்தல்.
- தனியார் முதலீடுகளை அதிகரித்தல், அரசு–தனியார் கூட்டு (பிபிபி) நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

**இலக்குகள் (2030–ஆம் ஆண்டுக்குள்)**

- குறைந்தபட்சம் ஆண்டுக்கு 5 மில்லியன் டன் பசமை ஹைட்ரஜன் உற்பத்தி.
- கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைப்பதன் வாயிலாக ரூ.1 லட்சம் கோடி சேமிப்பு.
- 6 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கம்.
- 50 மில்லியன் டன் கரியமில வாயு வெளியேற்றம் குறைப்பு.
- ரூ.8 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு.
- 125 ஜிகா வாட் எரிசக்தி உற்பத்தி.

**சாம்பல், நீல, கருப்பு, பசுமை ஹைட்ரஜன்**

- நீரில் மின்சாரத்தை செலுத்தி மின்னாற்பகுப்பு முறையில் ஹைட்ரஜன் பிரித்தெடுக்கப்படுகிறது. அந்த மின்சாரம் எத்தகைய ஆற்றல் மூலத்தில் இருந்து தயாரிக்கப்படுகிறது என்பதைக் கொண்டு ஹைட்ரஜன் வெவ்வேறு பெயர்களைப் பெறுகிறது.

**சாம்பல் (கிரே) ஹைட்ரஜன்**

- இயற்கை எரிவாயு, பெட்ரோல், டீசல் உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட மின்சாரத்தைக் கொண்டு பிரித்தெடுக்கப்படும். அவ்வாறு தயாரிக்கையில் கரியமில வாயு வளிமண்டலத்தில் வெளியேற்றப்படும்.

**நீல (புளூ) ஹைட்ரஜன்**

- இயற்கை எரிவாயு உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட மின்சாரத்தைக் கொண்டு பிரித்தெடுக்கப்படும். அதில் வெளியேறும் கரியமில வாயு வளிமண்டலத்தில் அல்லாமல் கடலுக்குள் செலுத்தப்படும்.

**கருப்பு ஹைட்ரஜன்**

- நிலக்கரியைக் கொண்டு தயாரிக்கப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தி ஹைட்ரஜனை பிரித்தெடுத்தல். கரியமில வாயு அதிக அளவில் வளிமண்டலத்தில் வெளியேற்றப்படும்.

**பசுமை (கிரீன் ஹைட்ரஜன்)**

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட மின்சாரத்தைக் கொண்டு ஹைட்ரஜன் பிரித்தெடுக்கப்படும். அதில் உருவாகும் ஆக்சிஜன் வாயு வளிமண்டலத்தில் வெளியேற்றப்படும். மற்ற முறைகளைக் காட்டிலும் இந்த முறையே சுற்றச்சூழலுக்கு மிக உகந்தது.

**விலை குறைப்பு**

- இந்தியாவில் தற்போது பசுமை ஹைட்ரஜன் மிகக் குறைந்த அளவிலேயே வர்த்தகப் பயன்பாட்டில் உள்ளது. அதன் விலை கிலோவுக்கு ரூ.350 முதல் ரூ.400 வரை உள்ளது. அந்த விலையை கிலோவுக்கு ரூ.100 என்ற அளவில் குறைப்பதே தேசிய பசமை ஹைட்ரஜன் திட்டத்தின முக்கிய இலக்கு.

**ஹைட்ரஜன்**

- இயற்கையில் காணப்படும் தனிமங்களில் ஹைட்ரஜனும் ஒன்று. ஆனால் ஹைட்ரஜன் தனித்துக் காணப்படாமல், மற்ற தனிமங்களுடன் சேர்ந்தே காணப்படுகிறது. ஹைட்ரஜனை எரிசக்தியாகப் பயன்படுத்த அதை மற்ற தனிமங்களில் இருந்து பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நீரில் இரு மூலக்கூறு ஹைட்ரஜனும் ஒரு மூலக்கூறு ஆக்சிஜனும் உள்ளது. நீரில் இருந்து ஹைட்ரஜனைப் பிரிக்கும் முறை எளிதாக உள்ளது.

## ஆஸ்ட்ரோ டூரிசம் – டெல்லியின் இந்தியா கேட்டில் ஒரு வானத்தைப் பார்க்கும் நிகழ்வு

- தேசிய அறிவியல் அருங்காட்சியகங்கள் கவுன்சில் (NCSM) நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகத்துடன் (NMML) இணைந்து ஆஸ்ட்ரோ டூரிசம் – A Sky Gazing நிகழ்வை புது தில்லியின் இந்தியா கேட் என்ற இடத்தில் ஏற்பாடு செய்தது.
- ஆஸ்ட்ரோ டூரிஸம் நிகழ்வில் நிபுணரான வானியலாளர்களின் வானியல் பேச்சுக்கள், வானியல் பற்றிய கண்காட்சி, வானியல் பொருள்கள் தொடர்பான கதைசொல்லல், நிலவின் பள்ளங்களைக் காண தொலைநோக்கியைப் பயன்படுத்திய அனுபவம், வானியல் செயல்பாடுகள், புகைப்படக் குழு கண்காட்சி மற்றும் வானியல் புகைப்படம் எடுத்தல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் அடங்கும். இத்திட்டம் மக்களிடையே அறிவியல் ஆர்வத்தை வளர்க்க உதவும்.

**குறிப்பு**

- நமது அரசியலமைப்புச் சட்டத்தின் 51ஏ, அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதை ஒவ்வொரு குடிமகனின் கடமையாக ஆக்குகிறது.

## இந்தியாவின் மிகப்பெரிய ஹாக்கி மைதானம்

- ஒடிசாவின் ரூர்கேலாவில் பிர்சா முண்டா சர்வதேச ஹாக்கி ஸ்டேடியம் திறக்கப்பட்டது.
- இந்த மைதானம் இந்தியாவின் மிகப்பெரிய ஹாக்கி மைதானமாகும்.
- FIH ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை 2023க்கு முன்னதாக இந்த வசதி திறக்கப்பட்டது.
- புவனேஸ்வரில் உள்ள கலிங்கா ஸ்டேடியத்திற்குப் பிறகு சர்வதேச நிகழ்வுகளுக்கான இரண்டாவது இடம் ரூர்கேலா.

**ஒடிசா பற்றி**

- தலைநகரம் – புவனேஸ்வர்
- கவர்னர் – கணேஷி லால்
- முதல்வர் – நவீன் பட்நாயக்

## தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.1,550 கோடி கடனுதவி

- தெருவோர வியாபாரிகள், சிறு தொழில்முனைவோருக்கு மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் ஒரே நாளில் ரூ.1,550 கோடிக்கும் அதிக மதிப்பிலான கடன்கள் வழங்கப்பட்டன.
- பிரதமரின் ஸ்வநிதி யோஜனா (தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்துக்கான கடன் திட்டம்), முத்ரா திட்டம், பசு வளர்ப்போருக்கான கடன் திட்டம் போன்றவற்றின்கீழ் 33,000–க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு இக்கடன்கள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எரிசக்தித் துறையில் தன்னிறைவே இலக்கு!

- கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு தவிர வேறுபல எரிசக்தி வளங்களும் நாட்டில் கண்டறியப்பட்டுள்ளன. எரிசக்தித் துறையில் தன்னிறைவு பெறுவதே இலக்கு என மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.
- நாட்டின் மொத்த கச்சா எண்ணெய் தேவையில் 85 சதவீதம் இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இயற்கை எரிவாயு தேவையில் 50 முதல் 60 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. அதே வேளையில், உள்நாட்டில் கச்சா எண்ணெய்–இயற்கை எரிவாயு உற்பத்தி 18 சதவீதம் வரை கடந்தாண்டில் உயர்ந்துள்ளது.
- உலகம் முழுவதும் ஒரு நாளில் சுமார் 10,000 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் சுமார் 50 லட்சம் பீப்பாய் எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் தேவை ஒரு சதவீத அளவில் அதிகரித்து வருகிறது. அது இந்தியாவில் 3 சதவீதமாக உள்ளது. பொருளாதாரம் வளரும் போது அதிக எரிசக்தி தேவைப்படும்.
- நாட்டில் எரிசக்தி பாதுகாப்பு நிலவி வருவதற்கு எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களின் செயல்பாடு முக்கியக் காரணமாக உள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு கடந்த 2021 நவம்பர், 2022 மே மாதங்களில் பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியைக் குறைத்ததும் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்தது. அந்த நடவடிக்கை காரணமாக பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.13, டீசல் விலை லிட்டருக்கு ரூ.16 குறைந்தது.

## தேசிய புவியியல் கொள்கை (NGP) 2022

- உலகளாவிய புவியியல் துறையில் இந்தியாவை உலகத் தலைவராக மாற்றும் குறிக்கோளுடன், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் தேசிய புவியியல் கொள்கை (NGP) 2022ஐ அறிவித்துள்ளது.

**கொள்கையின் முக்கிய அம்சங்கள்**

- இது புவியியல் துறையை வலுப்படுத்த விரும்பும் குடிமக்களை மையமாகக் கொண்ட கொள்கையாகும்.

- 2030க்குள் உயர் துல்லியமான டிஜிட்டல் எலிவேஷன் மாடலுடன் (DEM) உயர் தெளிவுத்திறன் நிலப்பரப்பு ஆய்வு மற்றும் மேப்பிங்கை அமைப்பதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது புவியியல் சுற்றுச்சூழல் அமைப்பின் முழுமையான வளர்ச்சிக்கான கட்டமைப்பை உருவாக்குகிறது.
- புவிசார் அறிவு உள்கட்டமைப்பு (GKI): அரசாங்கம் 2030 க்குள் 5. ஒருங்கிணைந்த தரவு மற்றும் தகவல் கட்டமைப்பை நிறுவும் (GKI ஐ உருவாக்க)
- ஜியோஸ்பேஷியல் டேட்டா மேம்பாடு மற்றும் மேம்பாட்டுக் குழு (GDPDC, 17 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாக இருக்கும்) தேசிய அளவில் புவிசார் துறையை மேம்படுத்துவது தொடர்பான உத்திகளை உருவாக்கி செயல்படுத்துவதற்கான உச்ச அமைப்பாக இருக்கும்.
- அரசாங்கம் நேஷனல் டிஜிட்டல் ட்வின் (உயர் தெளிவுத்திறன் நிலப்பரப்பு ஆய்வு மற்றும் மேப்பிங் 2035 க்குள்) நிறுவும்.

## உலக முதலீட்டாளர்கள்–தமிழக புதுமை தொழில் நிறுவனங்களை இணைக்க இணையதளம்

- உலக தமிழ் முதலீட்டாளர்கள் மற்றும் தமிழக புதுமை (ஸ்டார்ட் அப்) தொழில் நிறுவனங்களை இணைக்கும் பிரத்யேக இணையதளத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கிவைத்தார்.
- சென்னையில் நடைபெற்ற உலகத்தமிழ் புதிய தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில், புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள 'குளோபல் தமிழ் ஏஞ்சல்ஸ்' என்னும் இணையதளம் ஆகும்.
- தமிழ்நாட்டில் இயங்கும் புதிய தொழில்களுக்கான முதலீடுகள் சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் கிடைத்துள்ளன. இது 2021–ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 70 சதவீதம் அதிகம்.

## 17வது வெளிநாடுவாழ் இந்தியர் தினம்

- வெளிநாடுவாழ் இந்தியர்கள் அனைவரும் அந்நிய மண்ணில் இந்தியாவின் சிறந்த தூதர்களாகத் திகழ்ந்து வருவதாகப் பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.
- மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் தனது வழக்குரைஞர் பணிகளை முடித்துக்கொண்டு 1915–ஆம் ஆண்டு ஜனவரி 9–ஆம் தேதி இந்தியா திரும்பினார். அந்த நாளானது 'வெளிநாடு வாழ் இந்தியர்கள்' தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. 17–ஆவது 'வெளிநாடுவாழ் இந்தியர்கள்' தினம் கொண்டாடப்பட்ட நிலையில், மத்திய பிரதேசத்தின் இந்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்துகொண்டார்.

## இலவச சேனல்களை பார்க்க டி.வி. யிலேயே செட் டாப் பாக்ஸ்

- இலவச சேனல்களைப் பார்க்க தொலைக்காட்சி பெட்டியிலேயே செட் டாப் பாக்ஸ், அனைத்து கருவிகளுக்குமான ஒருங்கிணைந்த சி–டைப் சார்ஜர், ஒரே மாதிரியான கண்காணிப்பு கருவி ஆகியவற்றுக்கு சர்வதேச தர நிர்ணயம் செய்து மத்திய அரசு அறிவித்துள்ளது.
- தற்போது இலவச மற்றும் கட்டண தொலைக்காட்சி சேனல்களை காண வேண்டுமென்றால் செட் டாப் பாக்ஸ் கருவியைப் பொருத்த வேண்டியுள்ளது. மேலும், தூர்தர்ஷன் தனது ஒளிபரப்பை எண்ம (டிஜிட்டல்) வடிவில் மட்டுமே செயல்படுத்த உள்ளதால், நாடு முழுவதும் அனைவரும் அந்த சிக்னல்களைப் பெறும் வகையில் இந்த புதிய அறிவிப்பை மத்திய அரசு அறிவித்துள்ளது.

## நாட்டின் முதல் முழு டிஜிட்டல் வங்கி மாநிலம்

- வங்கி சேவையில் முழுமையாக டிஜிட்டல் மயமான இந்தியாவின் முதல் மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு (SLBC) படி, டிஜிட்டல் முறையில் இயக்கப்பட்ட 3.76 கோடி கணக்குகளில் குறைந்தபட்சம் ஒரு தயாரிப்பு உள்ளது.

**இணையத்திற்கான உரிமை**

- இந்தியாவின் குடிமக்களின் அடிப்படை உரிமையாக 'இணையதள உரிமை' அறிவித்துள்ள ஒரே மாநிலம் கேரளா.

**கேரளா ஃபைபர் ஆப்டிக் இணையம் (K–FON) திட்டம்:**

- K–FON மாநிலத்தில் உள்ள அனைவருக்கும் இணைய வசதியை உறுதி செய்யும்.
- ஆப்டிகல் ஃபைபர் கேபிள் 17,155 கிமீ தூரத்திற்கு வரையப்பட்டது.
- இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தில் உள்ள அனைவருக்கும் குறைந்த விலையில் அல்லது இலவச விலையில் இணையம் கிடைக்கும்.



குறிப்பு

- தலைநகரம் – திருவனந்தபுரம்
- கவர்னர் – ஆரிப் முகமது கான்
- முதல்வர் – பினராயி விஜயன்

## லண்டனில் இளம் தொழில்முறை திட்டம்

- இங்கிலாந்தில் உள்ள இந்திய உயர் ஆணையர், விக்ரம் கே டோரைஸ்வாமி மற்றும் இங்கிலாந்தின் உள்துறை அலுவலகத்தில் நிரந்தர செயலாளர் மேத்யூ ரைக்ராஃப்ட் ஆகியோர் லண்டனில் நடந்த நிகழ்வில் இளம் தொழில்முறை திட்டத்தை முறைப்படுத்துவதற்கான கடிதங்களில் கையெழுத்திட்டனர்.
- லண்டனில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

குறிப்பு

- இந்தத் திட்டம், 18 முதல் 30 வயதுக்குட்பட்ட 3,000 பட்டம் பெற்ற குடிமக்கள் வரை இரண்டு வருட காலத்திற்கு பரஸ்பர நாடுகளில் வசிக்கவும் வேலை செய்யவும் அனுமதிக்கும்.
- மே 2021 இல் கையொப்பமிடப்பட்ட இந்திய U.K இடம்பெயர்வு மற்றும் மொபிலிட்டி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டது, பாலியில் G20 உச்சிமாநாட்டில் நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டின் இடம்பெயர்வு மற்றும் நகர்வு ஒப்பந்தம் சட்டவிரோதமாக குடியேறுபவர்கள் தங்கள் சொந்த நாடுகளுக்கு திரும்புவதை நிவர்த்தி செய்ய முயல்கிறது.
- தலைநகரம் – லண்டன்
- மன்னர் – சார்லஸ் III
- பிரதமர் – ரிஷி சுனக்
- நாணயம் – பவுண்ட் ஸ்டெர்லிங்

## ஆர்ஆர்ஆர் "நாட்டு நாட்டு" பாடலுக்கு "கோல்டன் குளோப்" விருது

- இந்தியாவில் கடந்தாண்டு வெளியாகி மாபெரும் வரவேற்பைப் பெற்ற ஆர்ஆர்ஆர் திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த "நாட்டு நாட்டு" எனத் தொடங்கும் பாடல், சிறந்த பாடலுக்கான பிரிவில் அமெரிக்காவின் "கோல்டன் குளோப்" விருதை வென்றுள்ளது.
- மௌலி இயக்கத்தில், தெலுங்கு நடிகர்கள் ராம் சரண் மற்றும் ஜூனியர் என்டிஆர் நடிப்பில் ஆர்ஆர்ஆர் திரைப்படம் உருவானது. கடந்தாண்டு மார்ச் மாதம் தெலுங்கு, தமிழ், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியானது. இப்படத்துக்கு எம்.எம். கீரவாணி இசையமைத்தார்.
- திரையுலகின் உயரிய விருதுகளாக கருதப்படும் "கோல்டன் குளோப்" மற்றும் "ஆஸ்கர்" விருதுகளுக்கு பல்வேறு பிரிவுகளில் ஆர்ஆர்ஆர் திரைப்படம் போட்டியிட்டது. ஹாலிவுட் சீசனின் தொடக்க விழா எனக் கருதப்படும் அமெரிக்காவின் கோல்டன் குளோப் விருதுக்கு சிறந்த பிறமொழிப் படம் மற்றும் சிறந்த பாடல் உள்ளிட்ட 5 பிரிவுகளில் ஆர்ஆர்ஆர் பரிந்துரைக்கப்பட்டது.
- ஆஸ்கர் விருதின் சிறந்த பாடல் பிரிவுக்கு இறுதி 14 பாடல்களில் ஒன்றாக "நாட்டு நாட்டு" பாடலும் தேர்வாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. 1920–களில் வாழ்ந்த அல்லூரி சீதாராமராஜு, கொமரம் பீம் ஆகியோரின் வாழ்க்கையைச் சுற்றி பின்னப்பட்ட கற்பனைக் கதையாக ஆர்ஆர்ஆர் படம் உருவாக்கப்பட்டிருந்தது.
- இந்திய திரைப்படத்தின் பாடலுக்கு கோல்டன் குளோப் விருது வழங்கப்படுவது இதுவே முதல் முறை.

## இந்திய நிறுவனத்தின் 2 இருமல் மருந்துகளை பயன்படுத்த வேண்டாம்: உலக சுகாதார நிறுவனம்

- உஸ்பெகிஸ்தானில் 18 குழந்தைகள் உயிரிழப்புக்கு காரணமாக குற்றம்சாட்டப்பட்ட இந்திய நிறுவனத்தின் 2 இருமல் மருந்துகளையும் தரமற்றவை என்று குறிப்பிட்டுள்ள உலக சுகாதார நிறுவனம் (டபிள்யுஹெச்ஓ), அவற்றை பயன்படுத்த வேண்டாம் என்று எச்சரித்துள்ளது.
- உத்தர பிரதேச மாநிலம், நொய்டாவைச் சேர்ந்த மேரியன் பயோடெக் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட அம்ப்ரோனால், டோக்–1 மேக்ஸ் ஆகிய இருமல் மருந்துகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 7 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக இந்தியா மாறும் தலைமை பொருளாதார ஆலோசகர்

- நடப்பு 2022–23 நிதியாண்டின் முடிவில் இந்தியாவின்பொருளாதார மதிப்பு 3.5 டிரில்லியன் டாலராக இருக்கும் வேளையில், அடுத்த 7 ஆண்டுகளில் 7 டிரில்லியன் டாலராக இருக்கும்

எனத் தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன் தெரிவித்தார்.

- நடப்பு 2022–23 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 3.5 டிரில்லியன் டாலராக (சுமார் ரூ.284 லட்சம் கோடி) இருக்கும். இது அடுத்த 7 ஆண்டுகளில் 7 டிரில்லியன் டாலராக (சுமார் ரூ.569 லட்சம் கோடி) அதிகரிக்கும்.
- நடப்பு 2022–23 நிதியாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 7 சதவீதமாக இருக்கும் என தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.
- வரும் 2024 அல்லது 2025–இல் வட்டி விகிதங்களைக் குறைக்கும் அமெரிக்காவின் நடவடிக்கை, இந்திய ரூபாய் மதிப்பில் தாக்கத்தை ஏற்படுத்துவது முக்கியப் பிரச்னையாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.
- 2025–இல் இந்திய பொருளாதாரத்தின் மதிப்பு 5 டிரில்லியன் டாலராக (சுமார் ரூ. 406 லட்சம் கோடி) இருக்கும் என மத்திய அரசு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## 10 லட்சம் டன் துவரம் பருப்பு இறக்குமதி: மத்திய அரசு முடிவு

- தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்க நிகழாண்டு 10 லட்சம் டன் துவரம் பருப்பை தனியார் வர்த்தகர்கள் மூலம் இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

### தாவர எண்ணெய் இறக்குமதி

- தாவர எண்ணெய் (உண்ணக் கூடியதும் கூடாதவையும்) இறக்குமதி டிசம்பர் மாதம் 28 சதவீதம் 15.66 லட்சம் டன்) அதிகரித்துள்ளது.
- பாமாயில் இறக்குமதியும் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு நவம்பர்–டிசம்பர் மாதங்களில் 4,58,646 டன் ரிஃபைண்ட் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய ஆண்டுகளில் இது 82,267 டன்னாக இருந்தது என அரசு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

### கோதுமை உற்பத்தியில் சாதனை

- நிகழ் பயிர் பருவ ஆண்டில் கோதுமை உற்பத்தி 112 மில்லியன் டன்னுக்கு அதிகமாகி சாதனை படைக்கும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.
- வெப்ப அலை பாதிப்பால் 2021–22 பயிர் பருவ ஆண்டில் கோதுமை உற்பத்தி 106.84 மில்லியன் டன்னாக குறைந்தது. நிகழாண்டு ராபி பயிர் காலத்தில் 332.16 லட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பில் கோதுமை பயிரிடப்பட்டுள்ளதால் 112 மில்லியன் டன் உற்பத்தியாகி இதுவரை இல்லாத அளவுக்கு சாதனை படைக்கும் என்று எதிர்பார்ப்பதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

## 'எம்வி கங்கா விலாஸ்' என்ற பயணிகள் கப்பல் தொடக்கம்

- உத்தர பிரதேசத்தின் வாரணாசிக்கும் அஸ்ஸாமின் திப்ரூகருக்கும் இடையே சுமார் 3,200 கி.மீ. தொலைவுக்குப் பயணம் மேற்கொள்ளும் 'எம்வி கங்கா விலாஸ்' என்ற பயணிகள் கப்பலின் சேவையைப் பிரதமர் மோடி தொடக்கிவைத்தார்.
- இரு நகரங்களுக்கு இடையேயான பயணத்தை 51 நாள்களுக்கு அக்கப்பல் மேற்கொள்ளும். வழியில் 27 நதிகளை அக்கப்பல் கடக்கும். உத்தர பிரதேசம், பிகார், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களைக் கடந்து வங்கதேசத்துக்குள் நுழைந்து பின்னர் அஸ்ஸாமின் திப்ரூகர் நகரை அக்கப்பல் அடையும்.
- அத்துடன் வாரணாசியில் கங்கை நதிக்கரையில் அமைக்கப்பட்டுள்ள கூடார நகரத்தையும் (டென்ட் சிட்டி) சுற்றுலா பயணிகளைக் கவரும் நோக்கில் நூற்றுக்கணக்கான கூடாரங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன.
- உத்தர பிரதேசம், பிகார், மேற்கு வங்கம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்தும் வகையில் சுமார் ரூ.1,000 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

## ஆதியோகி சிலையைத் திறக்க கர்நாடக உயர்நீதிமன்றம் அனுமதி

- கர்நாடகத்தின் சிக்பளாப்பூரில் ஆதியோகி சிலையை குடியரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் திறந்து வைக்க கர்நாடக உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- ஈஷா மையத்தின் சார்பில் சிக்பளாப்பூர் மாவட்டத்தின் அவல குர்கி பகுதியில் 112 அடி உயரத்தில் ஆதியோகி சிலை அமைக்கப்பட்டுள்ளது.

## செந்திரபாத்–விசாகப்பட்டினம் இடையே வந்தே பாரம் ரயில்

- தெலங்கானா மாநிலம் செகந்திராபாத், ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் இடையிலான வந்தே பாரத் ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறார்.
- மகர சங்கராந்தி (தமிழகத்தில் பொங்கல் பண்டிகை) தினத்தில் நடைபெறும்.
- 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின்கீழ் முழுவதும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ரயிலான வந்தே பாரத், ஏற்கெனவே நாட்டின் பல்வேறு பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில், இப்போது தெலங்கானா–ஆந்திரம் இடையே இயக்கப்படுகிறது.
- முழுவதும் ஏ.சி. வசதி செய்யப்பட்ட 14 பெட்டிகள், சிறப்புப் பிரிவு பெட்டிகள் 2 என மொத்தம் 16 பெட்டிகள் கொண்ட இந்த ரயிலில் 1,128 பேர் பயணிக்க முடியும்.
- இது முழுவதும் இருக்கை வசதி கொண்டதாகும். 6 முதல் 7 மணி நேர பகல் நேரப் பயணம் என்பதால் படுக்கை வசதி கிடையாது. இந்த ரயில் சென்னையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## சிறுபான்மையினரின் பங்கை சிஏஏ குறைக்கும்: பொருளாதார நிபுணர் அமர்த்தியா சென்

- குடியுரிமை திருத்தச் சட்டத்தை (சிஏஏ) அமல்படுத்துவது, நாட்டில் சிறுபான்மையினரின் பங்களிப்பைக் குறைக்க வாய்ப்புள்ளதாகப் பொருளாதார நிபுணரும் நோபல் பரிசு பெற்றவருமான அமர்த்தியா சென் தெரிவித்துள்ளார்.
- குடியுரிமை திருத்தச் சட்டத்தை மத்திய அரசு கடந்த 2019–ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. அதன்படி, வங்கதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மதத் துன்புறுத்தலுக்கு உள்ளாகி இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த ஹிந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தமதத்தினர், சமணர்கள், பார்சிக்கள் ஆகியோருக்குக் குடியுரிமை வழங்க வழிவகை செய்யப்பட்டது.

## சிறுகடன் நிறுவனங்களின் செயல்பாடு குறித்து ஆய்வு

- கடந்த சில ஆண்டுகளில் மட்டும் 6 கோடிக்கும் அதிகமான நபர்களுக்குக் கடன் வழங்கியுள்ள சிறுகடன் நிறுவனங்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கை வகிக்கவுள்ளதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சிறுகடன் நிறுவனங்களின் செயல்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த அறிக்கையில், கடந்த 2017–ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் 2022–ஆம் ஆண்டு ஜூன் வரை சிறுகடன் நிறுவனங்கள் தங்கள் செயல்பாட்டைப் பெரிய அளவில் விரிவுபடுத்தியுள்ளன. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவர்கள் தொடர்ந்து கடன்களை வழங்கி வருகின்றனர்.
- சிறுகடன் நிறுவனங்களின் சர்வதேச சந்தை மதிப்பு 2026–ஆம் ஆண்டுக்குள் 12,246 கோடி அமெரிக்க டாலர் அளவில் அதிகரிக்கும்.
- சிறுகடன் நிறுவனங்களின் வளர்ச்சி ஆண்டுக்கு 11.61 சதவீத அளவில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 'ஏழை மக்கள் உள்ளிட்டோருக்கு குறு, சிறு கடன்களை வழங்கி ஏழ்மையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை சர்வதேச அரசுகளும் நிறுவனங்களும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. கடந்த 2017–ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் செயல்பட்டு வரும் சிறுகடன் நிறுவனங்கள் இணையவழி கடன் வழங்கலை அதிகரித்துள்ளன.

## உத்தரகாண்டில் போர் நினைவிடம் திறப்பு

- உத்தரகாண்டில் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கான நினைவிடத்தைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்துவைத்தார்.
- "சௌர்ய ஸ்தலம்" எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த நினைவகத்தைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.
- போர் நினைவிடத்தில் 7 தூண்கள் அமைக்கபட்டுள்ளன. அவற்றின் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த 1,400 வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

## மத்திய அரசுக்கு இலவசமாக கோவிஷீல்ட் தடுப்பூசி: சீரம் நிறுவனம்

- பல்வேறு நாடுகளில் கரோனா நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், கோவிஷீல்ட் தடுப்பூசிகளை மத்திய அரசுக்கு இலவசமாக வழங்க இருப்பதாக சீரம் நிறுவனம் தெரிவித்துள்ளது.
- முதற்கட்டமாக 80 லட்சம் கோவிஷீல்ட் தடுப்பூசிகளை மத்திய அரசு பெற உள்ளது.

## இந்தியாவின் முதல் சூரியசக்தி கார் அறிமுகம்

- தில்லி பெருநகர்ப் பகுதியிலுள்ள கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்று வரும் 'ஆட்டோ எக்ஸ்போ 2023' கண்காட்சியில், சூரிய சக்தியில் இயங்கக்கூடிய இந்தியாவின் முதல் காரான 'இவா' அறிமுகப்படுத்தப்பட்டது.
- புணேயைச் சேர்ந்த புத்தாக்க தொழில்நிறுவனமான 'வாய்வே மொபி லிட்டி' இந்தக் காரை வடிவமைத்துள்ளது.

- இரண்டு பெரியவர்கள், ஒரு சிறியவர் என மூன்று பேர் அமர்ந்து செல்லக்கூடிய இந்த காரை, நகர்ப்புற வாடிக்கையாளர்களை மனதில் கொண்டு அந்நிறுவனம் உருவாக்கியுள்ளது.

## "ஆக்ஸ்ஃபேம் இண்டர்நேஷனல்" அறிக்கை

- உலக பொருளாதார கூட்டமைப்பு ஆண்டுக் கூட்டத்தில் பிரிட்டனைச் சேர்ந்த "ஆக்ஸ்ஃபேம் இண்டர்நேஷனல்" அமைப்பு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் இந்தியாவில் ஆண் தொழிலாளியின் சம்பளம் ஒரு ரூபாய் என்றால், பெண் தொழிலாளியின் 63 பைசா என்ற அளவில் தான் உள்ளது. இந்தியாவில் பெரும் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 2020-இல் 102 ஆக இருந்தது. இதுவே 2022-இல் 166 ஆக அதிகரித்துவிட்டது. நாட்டின் முதல் 100 கோடீஸ்வரர்களின் மொத்த செல்வம் 54.12 லட்சம் கோடியாக உள்ளது. இதன் மூலம் இந்தியாவின் 18 மாத பட்ஜெட் செலவை எதிர்கொள்ள முடியும். கோடீஸ்வரர்களுடன் ஒப்பிடும்போது ஏழைகள் தங்கள் வருமானத்தில் இருந்து அதிக வரி செலுத்துகின்றனர்.

## கொலீஜியத்தில் அரசு பிரதிநிதியை

- 'உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்றங்களின் கொலீஜியங்களில் மத்திய அரசுப் பிரதிநிதியை சேர்க்க வேண்டும் என்ற மத்திய அரசு சார்பில் பரிந்துரை செய்யப்பட்டது, தேசிய நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டத்தை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் மேற்கொண்ட நடவடிக்கை அடிப்படையிலான சரியான நடவடிக்கையே' என்று விளக்கமளிக்கப்பட்டது.
- மத்திய அரசு கடந்த 2014-ஆம் ஆண்டு தேசிய நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டத்தை இயற்றியது. ஆனால், அந்தச் சட்டத்தை உச்ச நீதிமன்றம் கடந்த 2015-ஆம் ஆண்டு ரத்து செய்தது. இதன் காரணமாக, கொலீஜியம் முறை தொடர்ந்து வருகிறது.

## 128 மருந்துகளின் விலை மாற்றியமைப்பு: என்பிபிஏ அறிவிப்பு

- நுண்ணுயிரி எதிர்ப்பு (ஆன்டிபயோடிக்) மற்றும் தீநுண்மி எதிர்ப்பு (ஆன்டிவைரல்) மருந்துகள் உள்பட 128 மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை தேசிய மருந்து விலை ஒழுங்காற்று ஆணையம் (என்பிபிஏ) மாற்றியமைத்துள்ளது.
- இதன் மூலமாக, அமாக்ஸிஸிலின், கிளவுலானிக் ஆசிட் உள்ளிட்ட நுண்ணுயிரி எதிர்ப்பு ஊசி மருந்து, வான்கோமைசின், ஆஸ்துமா மருந்தான சால்புடமால், புற்றுநோய் மருந்து டிரஸ்டு சுமாப், மூளைக் கட்டி சிகிச்சைக்கான மருந்து டெமோஸோலோமைட், வலி நிவாரணி இபுப்ரோஃபென், காய்ச்சல் மற்றும் வலிக்கான பாரசெட்டமால் ஆகிய மருந்துகளுக்கும் அதிகபட்ச விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- அமாக்ஸிஸிலின் ஒரு மாத்திரியின் அதிபட்ச விலை ரூ.2.18-ஆகவும், செட்ரிசின் ஒரு மாத்திரையின் அதிகபட்ச விலை ரூ. 1.68-ஆகவும், அமாக்ஸிஸிலின் மற்றும் கிளவுலானிக் ஆசிட் ஊசி மருந்தின் அதிகபட்ச விலை ரூ.90.38-ஆகவும், இபுப்ரோஃபென் 400 மில்லி கிராம் மருந்து விலை ரூ.1.07-ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.
- அத்தியாவசிய மருந்துகள் தேசியப் பட்டியல் (என்எல்இஎம்) 2022-இல் மருந்துகள் விலை கட்டுப்பாட்டு உத்தரவு 2013-இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள 12 மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விற்பனை விலையேயும் என்பிபிஏ நிர்ணயித்துள்ளது.
- சர்க்கரை நோய் எதிர்ப்பு மருந்தான கிலிமெபிரைட், வோக்லிபோஸ், மெட்ஃபார்மின் ஆகியவற்றின் ஒருமாத்திரையின் அதிகபட்ச சில்லறை விற்பனை விலை ரூ.13.83-ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதுபோல, பாரசெட்டமால், ஃபெனைலெஃப்ரைன் ஹைட்ரோகுளோரின், டைஃபென்ஹைட்ராமைன் ஹைட்ரோகுளோரின், காஃபைன் ஆகியவற்றின் ஒரு மாத்திரை விலை ரூ.2.76-ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

## போபால் பிரகடனம்

- இரண்டு நாள் திங்க்20 மீட் (டி20) போபாலில் நடைபெறுகிறது, இது போபால் அறிவிப்பு வெளியீட்டுடன் முடிவடைகிறது.
- போபால் பிரகடனத்தின் பரிந்துரைகள்: "உலகளாவிய தெற்கு மற்றும் உலகளாவிய ஆளுகைக்கான (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை) வாழ்க்கை" மற்றும் பொறுப்பான நுகர்வுக்கான மாற்றங்களை ஆதரிக்க வளர்ச்சி மாற்றத்திற்கான தேவை.

திங்க்20 சந்திப்பு பற்றி:

- ஜி20 உச்சிமாநாட்டிற்கான 'திங்க் டேங்க்' அல்லது 'ஐடியா பேங்க்' ஆகும்
- G20 தொடர்பான கொள்கை சிக்கல்களைப் பற்றி விவாதிக்க சிந்தனையாளர்களையும் உயர்மட்ட வல்லுனர்களையும் ஒன்றிணைக்கிறது.



## டாப்ளர் வானிலை ரேடார் நெட்வொர்க்

- மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், தீவிர வானிலை நிகழ்வுகளை மிகவும் துல்லியமாக கணிக்க, 2025 ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் டாப்ளர் வானிலை ராடார் நெட்வொர்க்கால் இணைக்கப்படும் என்று அறிவித்தார்.
- இது வானிலை கண்காணிப்பு திறன்களை மேம்படுத்தி, விவசாயிகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கும்.

ரேடார் பற்றி:

- ரேடார் (ரேடியோ கண்டறிதல் மற்றும் அலைவரிசை) என்பது நகரும் மற்றும் அசையாத பொருட்களின் இருப்பிடம் (வரம்பு & திசை), உயரம், தீவிரம் மற்றும் இயக்கத்தைக் கண்டறிய மைக்ரோவேவ் பகுதியில் உள்ள மின்காந்த அலைகளைப் பயன்படுத்தும் ஒரு சாதனமாகும்.

டாப்ளர் வானிலை ரேடார் பற்றி:

- டாப்ளர் கொள்கையின் அடிப்படையில், ரேடார் நீண்ட தூர வானிலை முன்னறிவிப்பு மற்றும் கண்காணிப்பில் துல்லியத்தை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.

## சன்சத் கேல் மகாகும்ப் எனும் நாடாளுமன்ற விளையாட்டு விழா

- சன்சத் கேல் மகாகும்ப் எனும் நாடாளுமன்ற விளையாட்டு விழாவின் 2ஆம் கட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி உத்தர பிரதேச மாநிலம் பஸ்தியில் காணொலி மூலம் தொடக்கிவைத்தார்.
- சுமார் 200 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளில் இதுபோன்ற விளையாட்டு விழாக்களுக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.
- இதில் சிறந்த 40 ஆயிரம் தடகள வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய விளையாட்டு ஆணையத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர். கடந்த ஆண்டை விட இது 3 மடங்கு அதிகமாகும்.

## பல்கிராம குடிநீர்த் திட்டம் தொடக்கம்

- கர்நாடக மாநிலம், யாதகிரி மாவட்டம், கொடேகல் கிராமத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.2050 கோடி மதிப்பிலான யாதகிரி மாவட்ட பல்கிராம குடிநீர்த் திட்டம், 117 எம்.எல்.டி. திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சூரத் சென்னை விரைவு சாலையில் ரூ.2 ஆயிரம் கோடி செலவில் 65.5 கி.மீ. தொலைவுக்கு அமைக்கவிருக்கும் 6 வழிசாலை திட்டத்துக்கு அடிக்கல் நாட்டியும், கலபுர்கி, யாதகிரி, விஜயபுரா மாவட்டங்கள் பயன்பெறும் நாராயணபூர் இடதுகரை கால்வாய்த் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மகாராஷ்டிர மாநிலம், மும்பையில் ரூ.38,000 கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டங்களின் தொடக்கம் மற்றும் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார்.
- எதிர்காலத்துக்கு ஏற்ப மும்பை நகரை உருமாற்ற வேண்டுமென்பது, மகாராஷ்டிர இரட்டை என்ஜின் ஆட்சியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.
- மும்பை மெட்ரோவில் புதிதாக கட்டமைக்கப்பட்ட 2ஏ மற்றும் 7 வழித்தடங்களை பிரதமர் மோடி திறந்து வைத்தார். இவை, அந்தேரி முதல் தஹிசார் வரை 35 கி.மீ. தொலைவை உள்ளடக்கியதாகும். மேலும், சிவசேனை நிறுவனர் பால் தாக்கரே பெயரிலான 20 சிறு மருத்துவமனைகளையும் பிரதமர் திறந்து வைத்தார்.

## இந்திய உதவியுடன் மாலத்தீவு விமான நிலையம் மறுகட்டமைப்பு

- மாலத்தீவுகளில் உள்ள ஹனிமாதூ விமான நிலையத்தை இந்திய நிதியுதவியுடன் மறுகட்டமைப்பு செய்வதற்கான திட்டத்தை வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தொடக்கிவைத்தார்.
- இந்தியாவின் அண்டை நாடுகளான மாலத்தீவுகள், இலங்கை ஆகியவற்றுக்கு 3 நாள் அரசுமுறைப் பயணமாக முதலில் மாலத்தீவுகளுக்குச் சென்ற அமைச்சர் ஜெய்சங்கர், ஹனிமாதூ விமான நிலைய மறுகட்டமைப்புத் திட்டத்தை அந்நாட்டு அதிபர் இப்ராஹிம் முகமது சோலியுடன் இணைந்து தொடக்கிவைத்தார்.
- **வீரருக்கு மரியாதை:** மாலத்தீவுகளில் போர்த்துக்கீசியர்களின் ஆதிக்கத்தை அழித்தொழித்து ஆட்சியைக் கைப்பற்றிய 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரர் சுல்தான் முகமது தாக்குருஃபானு நினைவிடத்தில் அமைச்சர் ஜெய்சங்கர் மரியாதை செலுத்தினார்.

## உள்நாட்டுப் பயணிகள் போக்குவரத்து 14% அதிகரிப்பு

- இந்தியாவில் உள்நாட்டு பயணிகள் போக்குவரத்து கடந்த டிசம்பர் மாதத்தில் 13.69 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.
- கடந்த 2022-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உள்நாட்டு பயணிகள் எண்ணிக்கை 1.27 கோடியாக இருந்தது.

- முந்தைய 2021-ஆம் ஆண்டின் இதே மாதத்தோடு ஒப்பிடுகையில் இது 13.69 சதவீதம் அதிகமாகும். அப்போது உள்நாட்டு போக்குவரத்து விமானங்களில் பயணித்த பயணிகளின் எண்ணிக்கை 1.12 கோடியாக பதிவாகியிருந்தது.

## ரயில்வே வருவாய் 28 சதவீதம் அதிகரிப்பு

- நடப்பு நிதியாண்டின் ஜனவரி 18 வரையிலான கணக்கீட்டின்படி பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தின் மூலமாக ரயில்வே ரூ.1.9 லட்சம் கோடி வருவாய் ஈட்டியுள்ளது. கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் ரயில்வே ஈட்டிய வருவாய் ரூ.1.3 லட்சம் கோடியாக மட்டுமே இருந்தது. ஆக, நடப்பு நிதியாண்டில் ரயில்வேயின் வருவாய் 28 சதவீதம் அதிகரித்துள்ளது.
- நடப்பு நிதியாண்டில் ரயில்வே மூலமாக ரூ.2.3 லட்சம் கோடி வருவாய் ஈட்ட பட்ஜெட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதில் 81 சதவீதம் தற்போதே எட்டப்பட்டுவிட்டது. நடப்பு நிதியாண்டில் கணக்கீட்டு கால நிலவரப்படி பயணிகள் மூலம் ரூ.52,000 கோடி வருவாயாக ரயில்வேக்கு கிடைத்துள்ளது. இது, 2018-19-ல் ஈட்டிய ரூ.51,000 கோடியுடன் ஒப்பிடுகையில் அதிகம் என்பதுடன் வரலாற்று உச்சமாகும்.

## சீன எல்லையில் பிரம்மாண்ட போர் பயிற்சி

- இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில், சீன எல்லைக்கு அருகே இன்னும் சில நாட்களில் மிகப்பெரிய அளவில் போர் பயிற்சி மேற்கொள்ள இந்திய விமானப்படை திட்டமிட்டுள்ளது.
- இந்தியா-சீனா இடையே கடந்த சில ஆண்டுகளாக எல்லைப் பிரச்சினை அடிக்கடி தலைதூக்குகிறது. 2017-ல் சீன எல்லையான டோகலாம் பகுதியில் சாலை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டது. இதை இந்திய வீரர்கள் தடுத்தபோது, இருதரப்பு ராணுவத்தினர் இடையே மோதல் ஏற்பட்டது. உயர்நிலை அதிகாரிகள் பேச்சு வார்த்தைக்குப் பின்னர் இருதரப்பு ராணுவத்தினர் தங்கள் படைகளை டோகலாம் பகுதியிலிருந்து விலக்கிக் கொண்டனர்.
- வடகிழக்குப் பகுதியில் சீன எல்லை அருகே இன்னும் சில நாட்களில் மிகப் பெரிய போர் பயிற்சியில் ஈடுபட இந்திய விமானப்படை திட்டமிட்டுள்ளது. இதற்கு "ப்ராலே" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- சில மாதங்களுக்கு முன்பு ரஷ்யா வழங்கிய எஸ்-400 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை, வடகிழக்கு எல்லை அருகே இந்திய விமானப்படை தயார் நிலையில் வைத்துள்ளது. இந்த ஏவுகணை 400 கி.மீ. தொலைவுக்குள் வரும் எதிரி நாட்டின் போர் விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை நடு வானிலேயே சுட்டு வீழ்த்தும் திறன் வாய்ந்தவை.

## IREDA மற்றும் MNRE இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் (IREDA) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்துடன் (MNRE) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது.
- **நோக்கம்:** 2022 – 2023க்கான வருடாந்திர செயல்திறன் இலக்கை அமைக்க

இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் (IREDA) பற்றி

- IREDA என்பது 1987 இல் வங்கி அல்லாத நிதி நிறுவனமாக நிறுவப்பட்ட ஒரு பொது வரையறுக்கப்பட்ட அரசு நிறுவனமாகும்.
- இது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் (MNRE) கீழ் உள்ள இந்திய அரசாங்கத்தின் ஒரு மினி ரத்னா (வகை – I) ஆகும்.
- பொன்மொழி – "என்றென்றும் ஆற்றல்"
- **குறிக்கோள்:** ஆற்றல் மற்றும் ஆற்றல் திறன்/ பாதுகாப்புக்கான புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்கள் தொடர்பான திட்டங்களை அமைப்பதற்கான நிதி உதவியை மேம்படுத்துதல், மற்றும் விரிவாக்குதல்.

## 74-வது குடியரசு தின விழாவில் எகிப்து அதிபர் படாக் அல்-சிசி சிறப்பு விருந்தினராக பங்கேற்பு

- இந்தியாவின் 74-வது குடியரசு தின விழாவில் சிறப்பு தலைமை விருந்தினராக பங்கேற்க எகிப்து அதிபர் படாக் அல்-சிசிக்கு, பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். இதனை ஏற்றுக்கொண்ட அல் சிசி குடியரசு தின விழாவில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார். எகிப்து அரபுக் குடியரசின் தலைவர் ஒருவர் இந்திய குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.



## பிராந்திய மொழிகளில் தீர்ப்புகள்

- உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் பிராந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூடின் கருத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

## இந்திய சர்வதேச அறிவியல் விழா (IISF)

- இந்திய சர்வதேச அறிவியல் விழாவின் (IISF) 8வது பதிப்பு போபாலில் உள்ள மௌலானா ஆசாத் தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் (MANIT) தொடங்கப்பட்டது.
- இது மத்தியப் பிரதேச அரசுடன் இணைந்து மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் வருடாந்திர முதன்மைத் திட்டமாகும்.
- **மையக்கருத்து:** "அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமையுடன் அம்ரித் கால்-ஐ நோக்கி அணிவகுத்துச் செல்வது"
- நோக்கம்: பொது மக்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் மற்றும் அறிவியலை ஒரு திருவிழாவாக கொண்டாடுதல்.

## ஆஸ்கர்: இறுதிப் பட்டியலில் "நாட்டு நாட்டு" பாடல்

- ஆஸ்கர் விருதுக்கான இறுதி பரிந்துரைப் பட்டியலில் ஆர்ஆர்ஆர் படத்தின் 'நாட்டு நாட்டு' பாடல் தேர்வாகியுள்ளது.
- 95-ஆவது ஆஸ்கர் விழா மார்ச் 12-ஆம் தேதி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் நடைபெறவுள்ளது. 23 பிரிவுகளில் விருது வழங்கப்படவுள்ளது. இந்நிலையில், ஆஸ்கர் விருதுக்கான இறுதி பரிந்துரைப் பட்டியல் வெளியிடப்பட்டது. RRR திரைப்படத்தில் இடம்பெற்ற 'நாட்டு நாட்டு பாடலானது சிறந்த பாடலுக்கான பரிந்துரைப் பட்டியலில் இடம் பிடித்துள்ளது. 4 பாடல்களுடன் அப்பாடல் போட்டியிடவுள்ளது.
- சிறந்த ஆவணப் படத்துக்கான இறுதி பரிந்துரைப் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 'ஆல் தட் பிரீத்ஸ்' இடம்பெற்றுள்ளது. அந்த ஆவணப்படமும் 4 ஆவணப்படங்களுடன் போட்டியிடவுள்ளது. தமிழில் எடுக்கப்பட்ட 'தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்' குறும்படமானது,சிறந்த ஆவண குறும்படத்துக்கான பரிந்துரைப் பட்டியலில் தேர்வாகியுள்ளது.
- 11 பிரிவுகளில் பரிந்துரை: அறிவியல் புனைவுக் கதையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படமான 'எவரிதிங் எவரிவேர் ஆல் அட்ஒன்ஸ்', ஆஸ்கர் விருதுக்கான 11 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- **சிறந்த திரைப்படம்:** சிறந்த திரைப்படத்துக்கான பரிந்துரைப் பட்டியலில் 'அவதார்: திவே ஆஃப் வாட்டர்', 'எவரிதிங் எவரிவேர் ஆல் அட் ஒன்ஸ்', 'எல்விஸ்', 'டாப் கன்: மேவரிக்' உள்ளிட்ட 10 படங்கள் இடம்பெற்றுள்ளன.
- 'நாட்டு நாட்டு பாடல் அண்மையில் கோல்டன் குளோப் விருது பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. தெலுங்கு, தமிழ், ஹிந்தி மொழிகளில் வெளியான இந்தப் படத்தை இயக்குநர் எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கியுள்ளார்.

## ஃபாஸ்டேக் மூலம் ரூ.50,855 கோடி வசூல்

- வாகனங்களில் 'ஃபாஸ்டேக்' வசதி வாயிலான சுங்கக் கட்டண வசூல் கடந்த ஆண்டில் 46 சதவீதம் அதிகரித்து ரூ.50,855 கோடியை எட்டியுள்ளதாக இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (என்ஹெச்ஏஐ) தெரிவித்துள்ளது.
- ஃபாஸ்டேக் வாயிலான வருவாய் ரூ.50,855 கோடியாக உள்ளது. கடந்த 2021-ஆம் ஆண்டில் அந்த வருவாய் ரூ.34,778 கோடியாக இருந்தது. கடந்த ஆண்டில் அது 46 சதவீதம் அதிகரித்துள்ளது.
- ஃபாஸ்டேக் வாயிலான பணப் பரிவர்த்தனை எண்ணிக்கை 2021-ஆம் ஆண்டில் 219 கோடியாக இருந்த நிலையில், கடந்த ஆண்டில் 324 கோடியாக அதிகரித்துள்ளது. தற்போது வரை ஒட்டுமொத்தமாக 6.4 கோடி ஃபாஸ்டேக் வில்லைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஃபாஸ்டேக் வசதியுடன் செயல்படும் சுங்கச் சாவடிகளின் எண்ணிக்கை கடந்த 2021-ஆம் ஆண்டில் 922-ஆக இருந்த நிலையில், கடந்த ஆண்டில் 1,181-ஆக அதிகரித்துள்ளது. அவற்றில் 323 சுங்கச் சாவடிகள் மாநில நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2021-ஆம் ஆண்டு பிப்ரவரி 16-ஆம் தேதியில் இருந்து ஃபாஸ்டேக் வாயிலாக சுங்கக் கட்டணம் செலுத்தும் நடைமுறையை மத்திய அரசு கட்டாயமாக்கியது.

## 100 நாள்கள் வேலைவாய்ப்புத் திட்டம் செயலாக்கம்

- ஒடிசாவின் கஞ்சாம் மாவட்டம், 100 நாள்கள் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் நாட்டிலேயே முதலிடம் பிடித்துள்ளது. தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டம் மூன்றாமிடம் பிடித்துள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டம், நிகழ் நிதியாண்டில் கஞ்சாம் மாவட்டத்தில் 63,449 வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2.26 கோடி பணி நாள்கள் உருவாக்கப்பட்டு நாட்டில் முதல் மாவட்டமாக திகழ்கிறது.
- 100 நாள்கள் வேலைவாய்ப்புத் திட்டம் பெண்கள் பங்களிப்பிலும் அந்த மாவட்டம் ஒடிசா மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுள்ளது.
- கஞ்சாமை தொடர்ந்து ராஜஸ்தானின் பார்மிரா 2.18 கோடி பணி நாள்களை உருவாக்கி இரண்டாம் இடத்திலும், தமிழ்நாடடின் திருவண்ணாமலை 2.13 கோடி பணி நாள்களை உருவாக்கி மூன்றாம் இடத்திலும் உள்ளன.

## இந்தியாவின் முதல் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி

- இந்திய சீரம் இன்ஸ்டிடியூட் (SII) கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசியான CERVAVAC ஐ அறிமுகப்படுத்தியது.
- இது இந்தியாவின் முதலாவது உள்நாட்டில் உருவாக்கப்பட்ட குவாட்ரைவலன்ட் மனித பாப்பிலோமா வைரஸ் (qHPV) தடுப்பூசி ஆகும்.
- இது இந்தியாவின் தேசிய பெண் குழந்தைகள் தினம் (ஜனவரி 24) மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தின் போது மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவால் தொடங்கப்பட்டது.

### உள்கட்டமைப்புக் குழு

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்கரி தலைமையில், உள்கட்டமைப்புக் குழுவின் 10வது கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.
- கூட்டத்தின் நோக்கம்: பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பாக தற்போதுள்ள அமைச்சகங்களுக்கு இடையேயான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை முன்னிலைப்படுத்த:
- PM கதி சக்தி திட்டத்தின் முன்னேற்றத்தை விரைவுபடுத்த ஒரு செயல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

### PM கதி சக்தி திட்டம் பற்றி

- 2021 இல் தொடங்கப்பட்டது
- இது பல மாதிரி இணைப்புத் திட்டத்திற்கான தேசிய மாஸ்டர் பிளான் ஆகும்
- **குறிக்கோள்:** தளவாடச் செலவுகளைக் குறைக்க ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்துதல்
- கதி சக்தி என்பது ஒரு டிஜிட்டல் தளமாகும், இது 16 அமைச்சகங்களை ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் உள்கட்டமைப்பு இணைப்புத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது.

## பாரத் டைனமிக்ஸ் உடன் MSDE பார்ட்னர்கள்

- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் (MSDE) பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் உடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- **குறிக்கோள்:** மத்திய பொதுத்துறை நிறுவனம் மற்றும் தொழில்களில் திறமையான மற்றும் எதிர்காலத்திற்கு தயாராக உள்ள பணியாளர்களின் தேவையை நிவர்த்தி செய்ய ஒரு தொழிற்பயிற்சி கட்டமைப்பை உருவாக்குதல்

### பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் பற்றி

- 16 ஜூலை, 1970 இல் இணைக்கப்பட்டது.
- இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.
- இது இந்திய ஆயுதப் படைகளுக்கான வழிகாட்டப்பட்ட ஏவுகணை அமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களுக்கான உற்பத்தித் தளமாகும்.

## கோதுமை விலையைக் குறைக்க மத்திய அரசு நடவடிக்கை

- கோதுமை, கோதுமை மாவு விலையைக் குறைக்கும் முயற்சியாக கையிருப்பில் உள்ள 30 லட்சம் டன் கோதுமையை பொதுச் சந்தையில் விற்பனை செய்ய மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.
- கோதுமை மாவு விலை தேசிய அளவில் சராசரியாக ஒரு கிலோ ரூ.38–ஆக அதிகரித்துள்ளது. இது சாமானிய மக்களுக்கு பெரும் சுமையாக உருவாகியுள்ளது.



- ரஷியா–உக்ரைன் போரால் சர்வதேச கோதுமை விநியோகம் ஏற்கெனவே பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவும் ஏற்றுமதிக்கு தடை விதித்தால் சர்வதேச அளவில் அதன் விலை மேலும் உயரும் என்பதே இதற்கு காரணமாகும்.

## கோவிஷீல்ட் பூஸ்டர் தடுப்பூசியால் சிறந்த நோய் எதிர்ப்பாற்றல்

- கோவேக்ஸின் அல்லது கோவிஷீல்டை முதன்மை தடுப்பூசியாக செலுத்திக் கொண்ட பிறகு, கோவிஷீல்ட் தடுப்பூசியை பூஸ்டர் தடுப்பூசியாக செலுத்திக் கொள்வது சிறந்த நோய் எதிர்ப்பு ஆற்றலை வழங்குவது இந்தியாவில் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டறியப்படுள்ளதாக 'தி லான்செட்' மருத்துவ இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கோவிஷீல்டை முதன்மை தடுப்பூசியாக செலுத்திக் கொண்ட 200 பேருக்கும் பூஸ்டர் தடுப்பூசியை செலுத்தி 28 நாள்களுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட சோதனையில், நோய் எதிர்ப்பாற்றலுக்கான ஆன்டிபாடிகள் அதே கோவிஷீல்டை எடுத்துக்கொண்டவர்களில் 99 சதவீதம், அதற்கு பதிலாக கோவேக்ஸினை எடுத்துக் கொண்டவர்களில் 99 சதவீதமும் கண்டறியப்பட்டன.
- அதே வேளையில், கோவேக்ஸினை முதன்மை தடுப்பூசியாக செலுத்திக் கொண்ட 204 பேருக்கும் பூஸ்டர் தடுப்பூசி செலுத்திய பிறகு மேற்கொள்ளப்பட்ட சோதனையில், கோவேக்ஸினை செலுத்திக் கொண்டவர்களில் 99 சதவீதமும், மாறாக கோவிஷீல்டை செலுத்திக்கொண்டவர்களில் 100 சதவீதம் ஆன்டிபாடிகள் கண்டறியப்பட்டன.

## குடியரசு தினம்

- நாட்டின் 74–ஆவது குடியரசு தினம் தில்லியில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.
- புதுப்பிக்கப்பட்ட 'கடமைப் பாதை'யில் ராணுவ வலிமையை வெளிப்படுத்தும் வகையில் முப்படை வீரர்கள் அணிவகுத்தனர். போர் விமானங்கள் நிகழ்த்திய சாகசங்களும், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் அலங்கார ஊர்திகளும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன.
- நாட்டில் 1950–ஆம் ஆண்டில் அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த ஜனவரி 26–ஆம் தேதியானது ஆண்டுதோறும் குடியரசு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- **உள்நாட்டு துப்பாக்கிகள்:** தேசியக் கொடி ஏற்றப்படும்போது 21 குண்டுகள் முழங்கப்பட்டது. வழக்கமாக "25 பவுண்டர்" என்ற பிரிட்டிஷ் காலத்தைச் சேர்ந்த துப்பாக்கிகளே அதற்கு பயன்படுத்தப்படும்.
- முதல் முறையாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 105 மி.மீ. துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டன.
- பிரதமர் நரேந்திர மோடி, சிறப்பு விருந்தினரான எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தா எல்–சிசி உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.
- அணிவகுப்பில் முதல் முறையாக எகிப்து ஆயுதப் படையினரும் கலந்துகொண்டனர். அப்படையைச் சேர்ந்த 144 எகிப்து வீரர்கள் கடமைப் பாதையில் அணிவகுத்தது சிறப்புமிக்கதாக இருந்தது.
- இந்தியாவுக்கும் எகிப்துக்கும் இடையேயான நல்லுறவை வெளிப்படுத்தும் வகையில் அந்த அணிவகுப்பு அமைந்தது.
- **உள்நாட்டுத் தளவாடங்கள்:** முக்கிய ராணுவத் தளவாடங்களும் அணிவகுப்பின்போது காட்சிப்படுத்தப்பட்டன. அர்ஜுன் தாக்குதல் பீரங்கி, 'நாக்' ஏவுகணைகள், கே9 வஜ்ரா பீரங்கி உள்ளிட்டவை அணிவகுப்பில் இடம்பெற்றன.
- **பெண் சக்தி:** குடியரசு தினக் கொண்டாட்டங்கள் 'பெண் சக்தி' என்ற கருப்பொருளை மையப்படுத்தியிருந்த நிலையில், ஆகாஷ் ஏவுகணைகளின் அணிவகுப்பை லெப்டினென்ட் சேதனா சர்மா முன்னின்று வழிநடத்தினார். எல்லைப் பாதுகாப்புப் படை சார்பில் நடைபெற்ற ஒட்டகப் பிரிவின் அணிவகுப்பை முதல் முறையாகப் பெண்கள் வழிநடத்தினர்.
- 144 இளம் வீரர்களைக் கொண்ட இந்திய கடற்படையின் அணிவகுப்பை லெப்டினென்ட் கமாண்டர் திஷா அம்ரித் வழிநடத்தினார். விமானப்படையின் அணி வகுப்பை ஸ்குவாட்ரான் லீடர் சிந்து ரெட்டி வழிநடத்தினார்.
- அலங்கார ஊர்திகள்: தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்கம், உத்தர பிரதேசம், குஜராத் உள்ளிட்ட 17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் பங்கேற்றன.
- மத்திய அமைச்சகங்கள், துறைகள் சார்பிலும் 6 அலங்கார ஊர்திகள் அணிவகுத்தன.
- **விமானங்கள் சாகசம்:** அணிவகுப்பின் இறுதியாக இந்திய விமானப் படையைச் சேர்ந்த 45 போர் விமானங்கள் நிகழ்த்திய பல்வேறு சாகசங்களைப் பார்வையாளர்கள் உற்சாகத்துடன் கண்டுகளித்தனர். திரிசூலம், மூவர்ணம் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் அந்த விமானங்கள் பறந்தன.

- மிக்–29, சுகோய்–30 எம்கேஐ, ரஃபேல், சி–130 சூப்பர் ஹெர் குலிஸ் உள்ளிட்ட போர் விமானங்கள் சாகசத்தில் பங்கேற்றன. அவை மட்டுமின்றி இந்திய ராணுவத்தைச் சேர்ந்த 4 ஹெலிகாப்டர்களும் இந்திய கடற்படையைச் சேர்ந்த ஐஎல்–38 போர் விமானமும் சாகசத்தில் ஈடுபட்டன.

## உலகின் முதல் மூக்குவழி கரோனா தடுப்பு மருந்து 'இன்கோவாக்' அறிமுகம்

- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, உலகின் முதல் மூக்குவழி கரோனா தடுப்பு மருந்து 'இன்கோவாக், குடியரசு தினத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.
- பாரத் பயோடெக் நிறுவனம் மற்றும் மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறையின்கீழ் செயல்படும் பொதுத் துறை நிறுவனமான உயிரிதொழில்நுட்ப தொழிலக ஆராய்ச்சி உதவி கவுன்சிலின் கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்ட இந்த மருந்தை, தில்லியில் மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா அறிமுகப்படுத்தினார்.
- குறைந்த விலையில், தரமான மருந்து என்ற அடிப்படையில், இந்தியாவின் தடுப்பூசி உருவாக்கமும் புத்தாக்கமும் உலகளாவிய பாராட்டை பெற்றிருக்கிறது. உலக அளவில் சுமார் 65 சதவீத தடுப்பூசிகள், இந்தியாவில் இருந்து விநியோகிக்கப்படுகின்றன. தடுப்பூசி, மருந்து உருவாக்கத்தில் இந்தியா முன்னிலைக்கு வந்துள்ளது.
- கரோனா தடுப்பூசி உருவாக்கத்துக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'கோவிட் சுரக்ஷா' திட்டத்தை, பிரதமர் மோடி தனிப்பட்ட முறையில் கண்காணித்து வருகிறார்.
- மத்திய, மாநில அரசுகளின் பெருமளவிலான கொள்முதலுக்கு குப்பி ஒன்று ரூ.325 என்ற விலையிலும், தனியார் சந்தையில் குப்பி ஒன்று ரூ.800 என்ற விலையிலும் விற்கப்படும் என பாரத் பயோடெக் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- கோவின் வலைதளத்தில் இம்மருந்து இடம்பெற்றுள்ளதாகவும், மருந்தை வாங்க ஏற்கெனவே விருப்பம் தெரிவித்திருந்த தனியார் மருத்துவமனைகளில் முதல் கட்டமாக கிடைக்கப் பெறும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## உலகப் பொருளாதாரத்தின் நம்பிக்கை ஒளியாக இந்தியா

- உலகப் பொருளாதாரத்தின் நம்பிக்கை ஒளியாக இந்தியா தற்போது உள்ளது; வலுவான அடித்தளத்தை கொண்டுள்ள இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அடுத்த ஆண்டில் 6.7 சதவீதமாக இருக்கும் என்று ஐ.நா.வின் உயர்நிலை பொருளாதார நிபுணர்களில் ஒருவரான ஹமீத் ரஷீத் தெரிவித்துள்ளார்.
- ஐ.நா.வின் 'உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் – 2023' அறிக்கை, நியூயார்க்கில் வெளியிடப்பட்டது.
- உயர் வட்டி விகிதங்கள், உலகப் பொருளாதார சுணக்கம் ஆகியவை முதலீடு மற்றும் ஏற்றுமதியில் தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக, 2023–இல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.8 சதவீதம் என்ற நடுத்தரமான அளவில் இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது.
- அதேசமயம், அடுத்த ஆண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி உத்வேகம் பெற்று, 6.7 சதவீதமாக இருக்கும். ஜி–20 கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள இதர நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி விகிதம் மிக அதிகமாகும்.
- உலகப் பொருளாதார வளர்ச்சிக் கணிப்பு: கரோனா பெருந்தொற்று பரவல், உக்ரைன்–ரஷியா போர் ஆகியவற்றின் தாக்கங்களால், உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 2022–இல் மதிப்பிடப்பட்ட 3 சதவீதத்தில் இருந்து இந்த ஆண்டு 1.9 சதவீதமாக குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 2024–இல் 2.7 சதவீதமாக மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பெண் சக்தியைப் பறைசாற்றிய தமிழக அலங்கார ஊர்தி!

- தமிழகத்தின் அலங்கார ஊர்தியானது சங்ககாலம் முதல் தற்காலம் வரையிலான பெண்களின் வலிமையை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.
- ஊர்தியின் முன்பக்கத்தில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் உள்ளிட்டவற்றை இயற்றிய சங்ககாலப் புலவர் ஔவையாரின் சிலை பெரிய அளவில் அமைக்கப்பட்டிருந்தது. முன்பக்க ஊர்தியின் பக்கவாட்டில் சிவகங்கையை ஆண்ட வீரமங்கை வேலுநாச்சியார் குதிரையில் பயணிப்பது போன்று வடிவமைக்கப்பட்டிருந்தது.



- கர்நாடக இசைப் பாடகர் எம்.எஸ்.சுப்புலட்சுமி, பரதநாட்டியக் கலைஞர் தஞ்சாவூர் பாலசரஸ்வதி, இந்தியாவின் முதல்பெண் மருத்துவரும் சமூக சீர்திருத்தவாதியுமான முத்துலட்சுமி ரெட்டி, சமூக சீர்திருத்தவாதியும் திராவிட இயக்க ஆர்வலருமானமூவலூர் ராமாமிர்தம் அம்மையார், இயற்கை வேளாண்மை ஆர்வலர் பாப்பம்மாள் ஆகியோரின் முழு உருவச் சிலைகள் ஊர்தியின் மத்திய பகுதியில் அமைக்கப்பட்டிருந்தன.
- அலங்கார ஊர்தியின் பின்பகுதியில் ராஜராஜசோழனால் கட்டப்பட்ட தஞ்சை பெருவுடையார் கோயில் கோபுரத்தின் மாதிரி வடிவமைக்கப்பட்டிருந்தது.
- அலங்கார ஊர்தி அணிவகுத்த போது பெண் கலைஞர்கள் கரகாட்டம் ஆடிக்கொண்டு சென்றனர். பாரம்பரிய வாத்தியங்களான நாதஸ்வரம், தவில் உள்ளிட்டவற்றையும் பெண் கலைஞர்கள் இசைத்தனர்.
- கேரளம், மகாராஷ்டிரம், திரிபுரா உள்ளிட்ட சில மாநிலங்களும் பெண் சக்தியை மையப்படுத்தி அலங்கார ஊர்திகளை வடிவமைத்திருந்தன.

## NITI ஆயோக்கின் AIM, CBSE மற்றும் இன்டெல் இந்தியா ஆகியவற்றின் ஒத்துழைப்பு

- அடல் புத்தாக்க திட்டம் (AIM) – NITI ஆயோக் , மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) மற்றும் இன்டெல் இந்தியா இடையே முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- **குறிக்கோள்:** செயற்கை நுண்ணறிவு மற்றும் முறையான பாடத்திட்டத்தில் டிங்கரிங்(Tinkering) போன்ற எதிர்கால திறன்களை நுழைப்பதன் மூலம் கல்வித்துறையில் மாற்றத்தை கொண்டு வருதல்.
- **நோக்கம்:** தேசிய கல்விக் கொள்கை 2020 இன் வழிகாட்டுதலின் மூலம் இந்தியாவை AI க்கு ஆயத்தமாக்குதல்,
  - இளைஞர்களுக்கான தொழில்நுட்ப ஒருங்கிணைப்பின் வேகத்தை அதிகரித்தல்
  - நாட்டில் எதிர்கால திறன் இடைவெளியைக் குறைத்தல்
  - தற்போதைய உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

**அடல் புத்தாக்க திட்டம் (AIM) பற்றி:**

- இது 2016 ல் அமைக்கப்பட்டது.
- இது நாட்டில் புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவோர் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான இந்திய அரசின் முதன்மையான முயற்சியாகும்.

**AIM இன் நோக்கங்கள்:**

- பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் புதுமைகளை வளர்ப்பதற்கான புதிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குதல்.
- வெவ்வேறு பங்குதாரர்களுக்கு தள மற்றும் ஒத்துழைப்பு வாய்ப்புகளை வழங்குதல்.
- நாட்டின்புத்தாக்கசூழலமைப்பைமேற்பார்வையிட ஒரே குடையின் கீழ் அமைப்பை உருவாக்குதல்.

## இந்தியாவின் சிவிங்கி புலிகள் (Chee–tah) திட்டம்– தென்னாப்பிரிக்கா

- இந்தியாவும் தென்னாப்பிரிக்காவும் 12 சிவிங்கி புலிகளை இந்தியாவுக்கு இடமாற்றம் செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பிப்ரவரி இறுதிக்குள் சிவிங்கி புலிகள் இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டு மத்திய பிரதேசத்திலுள்ள குனோ தேசிய பூங்காவில் அறிமுகப்படுத்தப்படும்.

**குறிப்பு:**

- இதேபோன்ற ஒப்பந்தத்தின் கீழ், கடந்த ஆண்டு செப்டம்பரில் நமீபியாவிலிருந்து எட்டு சிவிங்கி புலிகள் கொண்டுவரப்பட்டு குனோ தேசிய பூங்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## அம்ரித் உத்யன்

- ராஷ்டிரபதி பவன் தோட்டங்கள், முகலாய தோட்டங்கள் என்று பிரபலமாக அறியப்பட்டு, தற்போது அம்ரித் உதயன் என மறுபெயரிடப்பட்டது.

**முகலாய தோட்டம் பற்றி**

- எட்வின் லுட்யென்ஸால் வடிவமைக்கப்பட்டது.
- தோட்டம் 15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது மற்றும் முகலாய மற்றும் ஆங்கில பாணிகளை உள்ளடக்கியது.
- பிரதான தோட்டத்தில் செங்கோணத்தில் வெட்டும் இரண்டு வழித்தடங்கள் தோட்டத்தை சதுரங்களாக பிரிக்கின்றன அதாவது, ஒரு சார்பாக் (நான்கு மூலை தோட்டம்).
- தோட்டத்தில் கிட்டத்தட்ட 2,500 வகையான டஹ்லியாக்கள் மற்றும் 120 வகையான ரோஜாக்கள் உள்ளன.

## உயர் கல்விக்கான அகில இந்திய ஆய்வு (AISHE), 2020-21

- மத்திய கல்வி அமைச்சகம் 2020-21 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வி குறித்த அகில இந்திய ஆய்வில் (AISHE) இருந்து தரவுகளை வெளியிட்டது.

சிறப்பம்சங்கள்:

- 2019-20 புள்ளி விவரங்களிலிருந்து நாடு முழுவதும் மாணவர் சேர்க்கையில் 7.5% அதிகரிப்பு, மொத்தம் 4.13 கோடியை எட்டியது.
- 2020-21ல், கோவிட்-19 தொற்றுநோய் தொடங்கியபோது, தொலைதூர கல்வி சேர்க்கையில் 7% உயர்வு இருந்தது.
- STEM சேர்க்கைக்கான ஒட்டுமொத்த புள்ளிவிவரங்கள் (உயர்கல்வியின் அனைத்து நிலைகளிலும்) பெண்கள் ஆண்களை காட்டிலும் பின்தங்கியிருப்பதைக் காட்டுகிறது.

## காதி விழா – 23

- இது காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையத்தின் (KVIC) தலைவர் திரு. மனோஜ் குமார் அவர்களால் மும்பையில் திறந்து வைக்கப்பட்டது.
- குறிக்கோள்: காதி நிறுவனங்கள், PMEGP மற்றும் SFURTI ஆகியவற்றுக்கு கைவினைஞர்களின் தயாரிப்புகளை நேரடியாக வாடிக்கையாளர்களின் கைகளுக்கு கொண்டு செல்லும் வகையில் ஒரு தளத்தை வழங்குதல் .

KVIC பற்றி:

- தொடக்கம் – 1957 .
- இது காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையச் சட்டம் 1956 இன் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது திட்டமிடல், பதவி உயர்வு, அமைப்பு மற்றும் கிராமப்புறங்களில் காதி மற்றும் பிற கிராமத் தொழில்களின் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கு பொறுப்பாகும்

பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) பற்றி

- 2008 இல் அறிமுகப்படுத்தப்பட்டது
- இது புதிய நிறுவனங்களை அமைப்பதற்கு நிதி உதவி வழங்கும் திட்டமாகும்
- ஒருங்கிணைப்பு அமைப்பு – KVIC

பாரம்பரிய தொழில்களின் மீளுருவாக்கம் (SFURTI) நிதி திட்டம் பற்றி

- MSME அமைச்சகத்தால் 2005 இல் அறிமுகப்படுத்தப்பட்டது
- இது பாரம்பரிய தொழில்களின் மறுசீரமைப்புக்கான நிதித் திட்டமாகும்
- ஒருங்கிணைப்பு அமைப்பு – KVIC

## இந்தியாவின் முதல் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி

- இந்தியாவின் சீரம் இன்ஸ்டிடியூட் (SII) கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசியான CERVAVAC ஐ அறிமுகப்படுத்தியது.
- இது இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குவாட்ரைவலன்ட் மனித பாப்பிலோமா வைரஸ் (qHPV) தடுப்பூசி ஆகும்.
- இந்தியாவின் தேசிய பெண் குழந்தைகள் தினம் (ஜனவரி 24) மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவால் தொடங்கிவைக்கப்பட்டது.

கர்ப்பப்பைவாய் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் பற்றி:

- ஜனவரி மாதம் கர்ப்பப்பைவாய் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக அனுசரிக்கப்படுகிறது.
- குறிக்கோள்: கர்ப்பப்பைவாய் புற்றுநோய் மற்றும் HPV தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- 2023 கருப்பொருள்: "சில தலைமுறைகளுக்குள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவருதல்"

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பற்றி:

- இது பெண்ணின் கருப்பைவாயில் உருவாகிறது, அதாவது யோனியில் இருந்து கருப்பையின் நுழைவாயிலில் உருவாகிறது.
- ஏறக்குறைய 99% கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் அதிக ஆபத்துள்ள மனித பாப்பிலோமா வைரஸுடன் (HPV) தொடர்புடையவை.

## தொழுநோய்க்கான தேசிய மூலோபாயத் திட்டம் மற்றும் வரைபடம் 2023-2027

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் பாரதி பிரவின் பவார் அவர்களால் தொடங்கப்பட்டது



தேசிய தொழுநோய் எதிர்ப்பு தினம்

- திட்டத்தின் நோக்கம்: 2027க்குள் நாட்டில் தொழுநோயை ஒழிப்பது

குறிப்பு:

- தொழுநோய் எதிர்ப்பு தினத்தன்று தொழுநோய்க்கான நுண்ணுயிர் எதிர்ப்பிற்கான கண்காணிப்புக்கான தேசிய வழிகாட்டுதல்களும் தொடங்கப்பட்டது.

## நிகாத் ஜரீன் – NMDC லிமிடெட்டின் பிராண்ட் தூதர்

- தேசிய கனிம வளர்ச்சிக் கழகம் (NMDC) நிகத் ஜரீனுடன் ஒரு ஒப்பந்தத்தில் (MoA) கையெழுத்திட்டுள்ளது.
- தேசிய கனிம வளர்ச்சிக் கழகத்தின் பிராண்ட் தூதராக பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- இவர் NMDCயின் பிராண்டு மட்டுமல்லாமல் வலிமை, தைரியம், சுறுசுறுப்பு மற்றும் தேசிய பெருமையை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

நிகத் ஜரீன் பற்றி

- இவர் காமன்வெல்த் உலக குத்துச்சண்டை சாம்பியன் ஆவர் மற்றும் பர்மிங்காம் 2022 விளையாட்டுகளில் தங்கப் பதக்கம் வென்றவர்

NMDC பற்றி

- 1958 இல் தொடங்கப்பட்டது.
- இது எஃகு அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய அரசின் பொது நிறுவனமாகும்.
- NMDC ஒரு தேசிய சுரங்க உற்பத்தியாளர் மற்றும் இந்தியாவின் மிகப்பெரிய இரும்பு தாது உற்பத்தியாளர்.

# 7 சர்வதேச நிகழ்வு



## மியான்மர் சுதந்திர தினம்

- பிரிட்டனிலிருந்து மியான்மர் விடுதலை பெற்றதன் 75–ஆவது ஆண்டுவிழாவையொட்டி, 7,012 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுவதாக அந்த நாட்டின் ராணுவ ஆட்சியாளர் மின் ஆங் லியாங் அறிவித்தார்.
- மியான்மரில் கடந்த 2020–ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. எனினும், அந்தத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி அவரது ஆட்சியை ராணுவம் கடந்த ஆண்டு பிப்ரவரி 1–ஆம் தேதி கலைத்தது.

## 12 நாள்களில் 5.4 செ.மீ. புதைந்த ஜோஷிமட்: இஸ்ரோ

- உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள ஜோஷிமட் நகரம், 12 நாள்களில் 5.4 செ.மீ. அளவுக்கு பூமிக்குள் புதைந்திருப்பது செயற்கைக்கோள் படங்கள் மூலம் தெரியவந்துள்ளதாக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- உத்தரகண்டில் பத்ரிநாத், ஹேம்குண்ட் சாஹிப் ஆகிய முக்கிய வழிபாட்டுத் தலங்களுக்கும் அவுலி பனிச்சறுக்கு சுற்றுலா தலத்துக்கும் வாயிலாக விளங்கும் ஜோஷிமட் நகரின் நிலப்பகுதி தாழ்ந்து வருவதால், வீடுகள், கட்டடங்கள் மற்றும் சாலைகளில் பெரிய அளவிலான விரிசல்கள் ஏற்பட்டுள்ளன.
- கார்டோசாட்–2 எஸ் செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட படங்களின் மூலம் இஸ்ரோவின் தேசிய தொலையுணர்வு மையம் (என்ஆர்எஸ்சி) முதல்கட்ட ஆய்வு மேற்கொண்டு, அறிக்கை வெளியிட்டுள்ளது.
- ஜோஷிமட்டில் 2022, ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலகட்டத்தில், நிலப்பகுதி 8.9 செ.மீ. அளவுக்கு புதைந்தது. ஆனால், 2022, டிசம்பர் 27 முதல் 2023, ஜனவரி 8 வரை 5.4 செ.மீ. அளவுக்கு புதைந்துள்ளது.
- ஜோஷிமட்டில் உள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 6 மாதங்களுக்கு மின்சாரம், குடிநீர் கட்டணங்களை தள்ளுபடி செய்ய முதல்வர் புஷ்கர் சிங் தாமி தலைமையிலான மாநில அமைச்சரவை முடிவுசெய்தது.
- வங்கிக் கடன் தவணைகளை செலுத்த ஓராண்டுக்கு விலக்கு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜோஷிமட் போல இதர மலை நகரங்களிலும் தாங்கு திறன் ஆய்வை மேற்கொள்ளவும் முடிவெடுக்கப்பட்டதாக மாநில அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'அமெரிக்க மக்கள்தொகையில் 1% உள்ள இந்திய அமெரிக்கர்கள் 6% வரி பங்களிப்பு'

- அமெரிக்க மக்கள்தொகையில் 1 சதவீதம் உள்ள இந்திய அமெரிக்கர்கள் அந்நாட்டின் மொத்த வரியில் 6 சதவீதம் அளவுக்கு பங்களித்து வருகின்றனர் என்று அமெரிக்க பிரதிநிதிகள் அவை எம்.பி. ரிச்சர்ட் மெக்கார்மிக் தெரிவித்தார்.

## பாகிஸ்தானுக்கான முக்கிய கூட்டு நாடு அந்தஸ்தை ரத்து செய்ய அமெரிக்க நாடாளுமன்றத்தில் மசோதா

- 'நேட்டோ' கூட்டமைப்பில் இடம்பெறாத முக்கிய கூட்டு நாடு என்ற பாகிஸ்தானுக்கான அந்தஸ்தை ரத்து செய்ய வலியுறுத்தி அமெரிக்க நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் அரிசோனா மாகாணத்தைச் சேர்ந்த உறுப்பினரான ஆண்டி பிக்ஸ் அறிமுகம் செய்த 'ஹெச்.ஆர்.80' என்ற இந்த மசோதாவுக்கு, பிரதிநிதிகள் சபையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர், செனட் சபையிலும் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அதன் பிறகு, அதில் அமெரிக்க அதிபர் கையொப்பமிட்டபின்னர், சட்டமாக மாறும். அவ்வாறு சட்டமாக மாறிய பின்னர், அதனடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக நாடாளுமன்ற வெளியுறவு விவகாரக் குழுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## விரிவான ஆய்வுகளுக்குப் பிறகே குஜராத் கலவர ஆவணப்படம் உருவாக்கம்: பிபிசி நிறுவனம் விளக்கம்

- குஜராத் கலவரம் தொடர்பான ஆவணப்படம் விரிவான ஆய்வுகளுக்குப் பிறகே உருவாக்கப்பட்டதாக பிபிசி நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.
- குஜராத்தின் கோத்ரா நகரில் 2002–ஆம் ஆண்டு கலவரம் ஏற்பட்டது. அதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அப்போது மாநில முதல்வராக நரேந்திர மோடி இருந்தார். குஜராத் கலவரம் தொடர்பாக பிபிசி நிறுவனம் ஆவணப்படம் எடுத்தது. அதன் முதல் பாகம் அண்மையில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

## உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு ரோபோ வழக்கறிஞர்

- உலகின் முதல் ரோபோ வழக்கறிஞர், அமெரிக்க நீதிமன்றத்தில் அடுத்த மாதம் ஆஜராகி வாதாட உள்ளது.
- இங்கிலாந்து தலைநகர் லண்டனை சேர்ந்தவர் ஜோஸ்வா பிரவுடர் (26). இவர் டூநாட்பே (DoNotPay) என்ற சட்ட ஆலோசனை வழங்கும் நிறுவனத்தை நடத்தி வருகிறார். அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் செயல்படும் இந்த நிறுவனம், உலகில் முதல்முறையாக செயற்கை நுண்ணறிவு மூலம் செயல்படும் ரோபோ வழக்கறிஞரை உருவாக்கி உள்ளது.

## ஆசியாவில் STEM கல்வித் திட்டம்

- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) மற்றும் பெல்ஜியம் நிறுவனமான சோல்வே இணைந்து அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) கல்வித் திட்டத்தை தொடங்குவதாக அறிவித்தது.
- குறிக்கோள்: இந்தியா, இந்தோனேசியா மற்றும் தென் கொரியாவில் உள்ள மாணவர்களுக்கு STEM இல் சுற்றுச்சூழலை பாதுகாக்க உதவும் கல்வித் திட்டங்களை உருவாக்குதல்.
- கருப்பொருள்: "ஒரு கிரகத்திற்கான நிலையான வாழ்க்கை"

**யுனெஸ்கோ பற்றி**

- நவம்பர் 16, 1945 இல் உருவாக்கப்பட்டது
- பணி: அமைதி கலாச்சாரத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பது, வறுமை ஒழிப்பு, நிலையான நீடித்த வளர்ச்சி, கல்வி, அறிவியல், கலாச்சாரம், தகவல் தொடர்பு மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையேயான அறிவுசார் உரையாடல்களை ஊக்குவித்தல்.
- தலைமையகம்: பாரிஸ், பிரான்ஸ்
- இயக்குநர் ஜெனரல்: திருமதி ஆட்ரி அசோலே.

## AnGR இல் FAO இன் ITWGயின் துணைத் தலைவராக இந்தியா தேர்வு

- அரசுகளுக்கிடையேயான தொழில்நுட்பப் பணிகள் குழுவின்(ITWG) விலங்கு மரபணு வளங்களின் (AnGR) 12வது அமர்விற்கு இந்தியா துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்தாலியில் ரோம் நகரில் நடைபெற்றது
- இது ஆசியா & பசிபிக் பிராந்தியத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.

ITWG பற்றி

- மே 1997 ல் உருவாக்கப்பட்டது.
- இது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) உணவு மற்றும் விவசாயத்திற்கான மரபணு வளங்களுக்கான ஆணையத்தால்((CGRFA) உருவாக்கப்பட்டது.
- செயல்பாடுகள்: இது தொழில்நுட்ப சிக்கல்களை மதிப்பாய்வு செய்கிறது, உலக அளவில் AnGR தொடர்பான ஆணையத்தின் திட்டத்தில் ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை வழங்குகிறது மற்றும் ஆணையத்தின் திட்டங்களை செயல்படுத்துகிறது.

FAO பற்றி

- 1945 இல் நிறுவப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும், இது பசியைத் தோற்கடிப்பதற்கான சர்வதேச முயற்சிகளை வழிநடத்துகிறது.
- இலக்கு: அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை வழங்குவது மற்றும் மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை வாழ தரமான உணவு போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்வது.

## ஸ்டார்ட்அப்–20 ன் இரண்டு நாள் தொடக்க கூட்டம்

- இது இந்தியாவால் ஹைதராபாத்தில் தொடங்கப்பட்ட G20 இன் புதிய குழுவாகும்.

ஸ்டார்ட்அப்–20 பணிக்குழு பற்றி

- வளர்ச்சி சவால்கள் மற்றும் பிற தடைகளை எதிர்கொள்ள G20 தலைவர்களுக்கு நடவடிக்கைகளை பரிந்துரைக்கிறது.

நோக்கங்கள்:

- ஒருமித்த அடிப்படையிலான வரையறைகள் மூலம் உலகளாவிய ஸ்டார்ட்–அப் சுற்றுச்சூழல் அமைப்பை ஒத்திசைக்க.
- வாய்ப்புகளை ஆராய்வதற்காக ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்புகளிடையே உலகளாவிய அறிவுப் பகிர்வுக்கான சமூகத்தை மேம்படுத்துதல்.

# 8 தமிழ்நாடு



## மேலும் மூன்று கோவில்களில் முழு நாள் அன்னதான திட்டம்

- தமிழக அரசு மேலும் மூன்று கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானத்தை தொடங்கியது.
  - ராமேஸ்வரத்தில் உள்ள ராமநாதசுவாமி கோவில்.
  - திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில்.
  - மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில்.
- இதன் மூலம் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை அன்னதானம் வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் உள்ள எட்டு கோவில்களை உள்ளடக்கியது.
- மாநிலத்தில் உள்ள மொத்தம் 754 கோயில்களில் ஒரு நாளைக்கு மதியம் 82,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

## 51,000 கோடி கடன் வாங்க திட்டமிடல்

- Q4 இல் 2022 – 2023 நிதியாண்டின் நான்காவது காலாண்டில் (ஜனவரி மார்ச்) ஸ்டேட் டெவலப்மென்ட் லோன்ஸ் எனப்படும் பத்திரங்களை ஏலம் விடுவதன் மூலம், இந்திய ரிசர்வ் வங்கியின் கடன் காலண்டரின் படி, தமிழ்நாடு ₹51,000 கோடி திரட்ட திட்டமிட்டுள்ளது.
- இது 2022 நிதியாண்டின் நான்காவது காலாண்டில் (Q4) மாநிலம் வாங்கிய ₹35,000 கோடியை விட 45.7% அதிகம்.
- ஏப்ரல்–டிசம்பர் 2022 முதல், மாநிலம் ₹49,000 கோடி கடனாகப் பெற்றுள்ளது, இது 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் வாங்கிய ₹52,000 கோடியை விடக் குறைவு.

குறிப்பு

- மாநில வளர்ச்சிக் கடன்கள், மாநிலங்கள் தங்கள் நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்குக் கடன் பெறுவதற்கான முக்கிய ஆதாரமாகும், இது மொத்த செலவினம் மொத்த வருவாயை விட அதிகமாக இருக்கும்போது எழுகிறது.
- இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் தமிழகம் வருவாய் ஈட்டாமல் இருக்க திட்டமிட்டுள்ளது.

## மத்திய ரிசர்வ் போலீஸ் படை ஆண்டு விழா

- ஆவடி மத்திய ரிசர்வ் போலீஸ் படை ஆண்டு விழாவில், பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர் பங்கேற்று பரிசுகளை வழங்கினார்.
- ஆவடியில் உள்ள மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் (சி.ஆர்.பி.எப்.) 55–ஆவது ஆண்டு தொடக்க விழா கொண்டாடப்பட்டது.

## ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு

- ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளை மேம்படுத்த, புதிய கட்டடங்கள் அமைக்க ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் தெரிவித்தார்.
- தமிழகம் முழுவதும் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளி வளாகங்களில் புதிய கட்டடங்கள் கட்டவும், கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தவும், மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இந்தத் துறையின் கீழ் செயல்படும் அனைத்து விடுதிகளும் சீரமைக்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் நலத் துறை பள்ளிகளில் 192 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## ராணி வேலுநாச்சியாரின் பிறந்த தினம்

- வீரமங்கை ராணி வேலுநாச்சியாரின் வீரம் தமிழர் மனதில் சுடர் விட்டடும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். வேலுநாச்சியார்

பிறந்த தினத்தை ஒட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் துணிவு, மதிநுட்பம், பன்மொழித்திறன், போர்த்திறன், மன உறுதி என அனைத்தையும் ஒருங்கேபெற்றவர், சிவகங்கைச் சீமையின் வீரமங்கை வேலுநாச்சியார். அவரது வீரமும், கிழக்கிந்திய கம்பெனிப் படையை எதிர்த்துப் பெற்ற வெற்றியும் என்றென்றும் தமிழர் நெஞ்சில் அணையாச் சுடராய் ஒளிவீசும் எனத் தெரிவித்துள்ளார்.

## சிறப்பு அஞ்சல் உறை வெளியீடு

- சென்னை கணித அறிவியல் நிறுவனத்தின் 60–ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது.
- 1962–ஆம் ஆண்டு ஆலடி ராமகிருஷ்ணன் என்பவரால் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. தரமணியில் உள்ள அந்த நிறுவனத்தில் இந்த சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது.

## முதல் முறையாக 1,000 அரங்குகளுடன் சென்னை புத்தகக் காட்சி

- பபாசி சார்பில் முதல் முறையாக ஆயிரம் அரங்குகளுடன் நடைபெறும் 46–ஆவது சென்னை புத்தகக் காட்சியை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்கவுள்ளார்.
- நிகழாண்டுக்கான 46–ஆவது சென்னை சர்வதேச புத்தகக் காட்சி நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் ஜனவரி 22–ம் தேதி வரை நடைபெற உள்ளது.
- தினமும் காலை 11 முதல் இரவு 8.30 மணி வரை கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிடலாம். இதற்கு ரூ.10 நுழைவு கட்டணமாக வசூலிக்கப்படும்.
- **பொற்கிழிவிருதுகள்:** தொடக்க விழாவில் தேவி பாரதி (நாவல்), சந்திரா தங்கராஜ் (சிறுகதை), தேவதேவன் (கவிதை), சி.மோகன் (மொழிபெயர்ப்பு), பிரளயன் (நாடகம்), பா.ரா. சுப்பிரமணியன் (உரைநடை) ஆகிய 6 பேருக்கு கலைஞர் மு. கருணாநிதி பெயரில் பொற்கிழி விருதுடன், தலா ரூ.1 லட்சமும் வழங்கப்படும்.
- **பபாசி விருது பெறுவோர்:** இதைத் தொடர்ந்து பபாசி விருதுகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கவுள்ளார். சிறந்த பெண் எழுத்தாளருக்கான முதல் பெண் பதிப்பாளர் அம்சவேணி பெரியண்ணன் விருது– எழுத்தாளர் இந்துமதி, பதிப்பகச் செம்மல் க.கணபதி விருது– வசந்தா பதிப்பகத்தைச் சேர்ந்த மோ.பாட்டழகன், சிறந்த நூலகருக்கான க.ரத்தினசபாபதி, சிறந்த புத்தக விற்பனையாளருக்கான பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் விருது– தீபக் மதியழகன், சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான அழ.வள்ளியப்பா விருது– எழுத்தாளர் தேவி நாச்சியப்பன், சிறந்த தமிழறிஞருக்கான பாரி செல்லப்பனார் விருது– ச.திருஞான சம்பந்தம், சிறந்த சிறுவர் அறிவியல் நூலுக்கான நெல்லை சு.முத்து விருது– எழுத்தாளர் ஆயிஷா நடராஜன், ஆலந்தூர் கோ.மோகனரங்கன் கவிதை இலக்கிய விருது– பாடலாசிரியர் விவேக், சிறந்த தன்னம்பிக்கை நூலுக்கான கவிதாசன் விருது– எழுத்தாளர் மெர்வின் என 9 பேருக்கு இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

## திருக்கோயில்கள் தொடர்பான குறைகளை தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண்

- முழுவதும் உள்ள திருக்கோயில்கள் தொடர்பான ஆலோசனைகள்–குறைகளை தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண், 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையம் ஆகியவற்றை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தொடக்கி வைத்தார்.
- பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் திருக்கோயில்கள் தொடர்பான குறைகளை இணைய வழியாக பதிவு செய்திட ஏதுவாக இந்து சமய அறநிலையத்துறையின் இணையதளத்தில் குறைகளை பதிவிடுக எனும் வசதியும், 044 – 28339999 என்ற எண்ணில் தொலைபேசி வாயிலாகவும் தெரிவிக்கும் வகையில் குறை கேட்பு மையம் 25.06.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இம்மையத்திற்கு வரப்பெற்ற புகார்கள் உடனுக்குடன் தீர்த்து வைக்கப்படுகின்றன.
- அதன் தொடர்ச்சியாக, நிறை குறைகளை பக்தர்கள் தெரிவிக்கும் வகையிலும் 1800 425 1757 என்ற கட்டணமில்லா தொலைபேசி சேவையும், 24 மணி நேர உதவி மையத்தின் சேவையும் தற்போது தொடங்கப்பட்டுள்ளது.
- தற்சமயம் பக்தர்களிடமிருந்து வரப்பெறும் ஆலோசனைகள் மற்றும் புகார்களை ஏற்று ஒரே நேரத்தில் அழைப்புகள் வந்தாலும் பதிலளிப்பதற்கு 5 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். திருக்கோயில்களில் வழங்கப்படும் அர்ச்சனை, அபிஷேகம், சிறப்பு தரிசனம் போன்ற சேவைகளுக்கான கட்டண ரசீதுகளில் கட்டணமில்லா தொலைபேசி எண் குறிப்பிடப்பட்டுள்ளது.



## தேசிய போட்டிகளில் வென்ற ஏகலைவா பள்ளி மாணவர்கள்

- ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு இடையே நடந்த தேசியப் போட்டிகளில் வென்ற தமிழக மாணவ, மாணவிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்தார்.
- மத்திய அரசின் தேசிய பழங்குடியினர் நல கல்விச் சங்கத்தின் கீழ் பழங்குடியினருக்காக 392 ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட பள்ளிகள் இந்தியா முழுவதும் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் இயங்கி வரும் 8 பள்ளிகளில் 2 ஆயிரத்து 606 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்தியா முழுவதும் உள்ள ஏகலைவா பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு இடையே தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதில், 177 மாணவ, மாணவிகள் பங்கு பெற்றனர்.
- இந்தப் போட்டிகளில் இதுவரை காணாத வகையில், 67 பதக்கங்களை வென்று, தமிழ்நாடு 5–ஆவது இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது.
- **முந்திரி சேகரம்:** அரியலூர் மாவட்டத்தில் வாழும் இருளர் இனத்தவர், தங்களது வாழ்வாதாரத்தைப் பெருக்கிடும் வகையில், முந்திரி சேகரம் செய்வதற்கான உரிமை வழங்கப்பட்டது. 966.65 ஏக்கர் அளவிலான பரப்பு ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டது.

## தமிழக மொத்த வாக்காளர்கள் 6.20 கோடி

- தமிழகத்தில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6.20 கோடியாக உயர்ந்துள்ளது. இதில், ஆண்களைவிட பெண் வாக்காளர்களின் எண்ணிக்கையே அதிகம் என தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.
- கடந்த 2022, நவம்பரில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டபோது, 6.18 கோடி வாக்காளர்கள் இருந்தனர்.
- **அதிகம், குறைவு:** தமிழ்நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக சோழிங்கநல்லூர் உள்ளது. இந்தத் தொகுதியில் 6 லட்சத்து 66 ஆயிரத்து 295 வாக்காளர்கள் உள்ளனர்.
- குறைந்தபட்ச வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக சென்னை மாவட்டத்தில் உள்ள துறைமுகம் உள்ளது. இந்தத் தொகுதியில் ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 125 வாக்காளர்கள் உள்ளனர்.
- வெளிநாடுகளில்வசித்து,தமிழ்நாட்டில்வாக்குரிமை வைத்திருப்போரின் எண்ணிக்கை 3,310 ஆகும். மொத்த வாக்காளர்களில் மாற்றுத்திறன் படைத்தவர்களாக அறியப்பட்டவர்கள் 4 லட்சத்து 48 ஆயிரத்து 138 பெயர் சேர்க்கப்பட்டு விடும்.
- **ஆதார் எண்:** தமிழகத்தில் இதுவரை 3.82 கோடி வாக்காளர்களின் ஆதார் எண் விவரங்கள் பெறப்பட்டுள்ளன.
- **இணைய வழியில் விண்ணப்பிக்க** வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா, இல்லையா என்பதை தேர்தல் துறையின் இணையதளம் (www.elections.tn.gov.in) வழியாகப் பார்க்கலாம். மேலும், பெயர் சேர்ப்பு, நீக்கல் போன்ற பணிகளுக்கு இணையதளம் வழியாகவும் (www.nvsp.in), Voter Helpline App என்ற கைப்பேசி செயலி மூலமாகவும் விண்ணப்பம் செய்யலாம்.

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 6,20,41,179 |
| ஆண்கள் | 3,04,89,866 |
| பெண்கள் | 3,15,43,286 |
| மூன்றாம் பாலினத்தவர் | 8,027 |

## மதவாதத்துக்கே எதிரிகள்: மதத்துக்கு இல்லை

- தமிழ்நாட்டில் உள்ள 1,250 கிராமப்புற கோயில்கள், ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் 1,250 கோயில்கள் என மொத்தம் 2,500 கோயில்களுக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் ரூ.50 கோடி வழங்கும் விழா, சென்னை வில்லிவாக்கத்தில் நடைபெற்றது.
- தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலைத் துறையின் கீழ் 43,000 கோயில்கள் இருக்கின்றன.
- ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 கோயில்களைப் பழைமை மாறாமல் சீர்செய்ய ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- கோயில்களுக்குச் சொந்தமான குளங்களைச் சீரமைக்கும்வகையில்சென்னை,கோவை,திருச்சி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 4 ஆலோசகர்களும், பழைமையான மூலிகை ஓவியங்களைப் பாதுகாக்கும் வகையிலான வழிமுறைகளை வழங்குவதற்குத் தனி ஆலோசகரும் நியமிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடந்து வருகின்றன.

## கசடு, கழிவுகளை அப்புறப்படுத்தும் பணி விதிகளை மீறினால் ரூ.25,000 அபராதம்

- மலக்கசடு உள்ளிட்ட கழிவுகளை அப்புறப்படுத்தும் போது, விதிகளை மீறினால் ரூ.25,000 வரை அபராதம் விதிக்கப்படும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- மலக்கசடு, கசடு கழிவு மேலாண்மைக்கான தேசியக் கொள்கையின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் முழு அளவிலான சுகாதாரத்தை வழங்குவதற்காக, கழிவுநீர் தொட்டிகள் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டுகின்றன.
- மலக்கசடு மற்றும் கழிவுநீரை வாகனங்கள் மூலம் அகற்றி, வெளியேற்றும் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்கான விரிவான திட்டம் தமிழக அரசால் வகுக்கப்பட்டுள்ளது.
- இந்த நோக்கங்களுக்காக, பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவற்றுக்கென சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தச் சட்டங்களைத் திருத்தி, புதிய விதிகள் கடந்த 1-ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.
- மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகன உரிமையாளர்களுக்கு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் இரண்டு ஆண்டுகள் செல்லத்தக்க வாகன உரிமமானது, விண்ணப்பித்த 30 நாள்களுக்குள் அளிக்கப்படும். இதற்கான கட்டணம் ரூ.2,000 ஆகும். உரிமம் பெற்றவர் தவிர்த்து வேறெந்த நபரும் கட்டடத்தில் இருந்து மலக்கசடு மற்றும் கழிவுகளை கொண்டு செல்வது போன்ற பணிகளில் ஈடுபடக்கூடாது.
- உரிமம் பெற்ற வாகனங்கள் கசடுகளை அப்புறப்படுத்தும் வசதியை ஒருமுறை பயன்படுத்த 6,000 லிட்டர் வரை ரூ.200-ம், அதற்கு மேற்பட்ட வகைகளுக்கு ரூ.300-ம் கட்டணமாக வரையறுக்கப்பட்டுள்ளது.
- விதிமீறல்கள் ஏதும் கண்டறியப்பட்டால், முதல் முறையாகச் செய்யும் தவறுக்கு ரூ.25,000 வரை அபராதமும், இரண்டாவது மற்றும் தொடர் குற்றங்களுக்கு ரூ.50,000 வரையிலும் அபராதம் விதிக்கலாம்.

## சங்க இலக்கியப் பாடல்களைக் கொண்டு மாத நாள்காட்டி

- சங்க இலக்கியப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள மாத நாள்காட்டியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். சென்னை புத்தகக்காட்சியை வெளியிட்டார்.
- சங்க இலக்கியப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு, சங்க இலக்கிய மாத நாள்காட்டி, தமிழ்வளர்ச்சித் துறையின் தமிழ்ப் பரப்புரைக் கழகத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. இதில், தமிழரின் கொடை, வீரம், வாழ்வியல் நெறிமுறை, காதல், அன்பு, அறிவியல், இயற்கையுடன் இயைந்த வாழ்வு, வணிகம் என பல்வேறு பிரிவுகளின் அடிப்படையில் 12 சங்க இலக்கியப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

## ஜப்பான் தொழில்நுட்பக் கருவிகள் மூலம் கல்வி முறை சென்னையில் அறிமுகம்

- சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் ஜப்பான் எண்ம (டிஜிட்டல்) தொழில்நுட்ப கருவிகள் மூலம் மாணவர்கள் எளிதாக கற்கும் முறையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட 18 சென்னைப் பள்ளிகளில் ஒருவகுப்பறைக்கு ரூ.3லட்சம் மதிப்பீட்டில் காட்சிப்படுத்தும் சாதனம் மற்றும் வரைப்பட்டிகை ஆகிய ஜப்பான் எண்ம (டிஜிட்டல்) தொழில்நுட்பச் சாதனங்கள் ரியான் டெக்நிறுவனத்தின் சார்பில் விலையில்லாமல் வழங்கப்படவுள்ளது.
- முதல்கட்டமாக, சிந்தாதிரிப்பேட்டை சென்னை உயர்நிலைப்பள்ளி, கொய்யாத்தோப்பு சென்னை தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, இருசப்பா தெரு சென்னை உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை சென்னை நடுநிலைப்பள்ளி என 5 பள்ளிகளில் இந்த தொழில் நுட்பச் சாதனங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

## '121 பசு மடங்களில் கன்றுகளை பராமரிக்க பாதுகாப்புப் பெட்டகம்'

- தமிழ்நாட்டில் உள்ள 121 பசு மடங்களில் உள்ள கன்றுகளை பராமரிக்க பாதுகாப்புப் பெட்டகம் வழங்கும்திட்டம்முழுமையாகச்செயல்படுத்தப்படும் என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் இந்து சமய அறநிலையத் துறை கோயில்களின் கட்டுப்பாட்டிலுள்ள 121 பசு மடங்களில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க பழனி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், ராமேசுவரம் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த பசுமடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை காப்பதற்காக ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## இரு பல்கலை.களுக்கு புதிய துணைவேந்தர்கள்

- சென்னை சைதாப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம், கொடைக்கானல் தெரசா பல்கலைக்கழகம் ஆகிய 2 பல்கலைக்கழகங்களுக்கும் துணைவேந்தர்களை நியமித்து ஆளுநர் ஆர். என்.ரவி உத்தரவு பிறப்பித்தார்.
- தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத் துணைவேந்தராக எஸ்.ஆறுமுகம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறை உயர் அழுத்த ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியராகவும், இயக்குநராகவும் பணியாற்றி வந்தார். 25 ஆண்டுகளுக்கு மேலாக கற்பித்தல் பணி அனுபவமும், 15 ஆண்டுகள் நிர்வாக அனுபவமும் கொண்டவர்.
- 3 கட்டுரைகளையும், 19 சர்வதேச மற்றும் தேசிய கல்வி நிகழ்வுகளையும் நடத்தியுள்ளார். 220 சர்வதேச மற்றும் தேசிய ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். சென்னை அறிவியல் அகாதெமி இயற்பியல் அறிவியலுக்கான மூத்த விஞ்ஞானி விருது, அபதுல் கலாம் வாழ்நாள் சாதனை விருது, தமிழ்நாடு மாநில கவுன்சிலின் இயற்பியல் அறிவியலுக்கான தமிழ்நாடு விஞ்ஞானி விருது உள்பட பல்வேறு விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.
- மேலும், கல்வி, ஆராய்ச்சி நோக்கத்துக்காக 17 வெளிநாடுகளுக்கும் சென்றிருக்கிறார்.
- அன்னை தெரசா பல்கலை: கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கலா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 34 ஆண்டுகளுக்கும் மேலாக கற்பித்தல் அனுபவமும், 8 ஆண்டுகளுக்கு மேலாக நிர்வாக அனுபவமும் கொண்டவர். 2 புத்தகங்களை எழுதியிருப்பதோடு, 4 சர்வதேச கல்வி நிகழ்வுகளை நடத்தியுள்ளார்.
- இவர் திருச்சி மண்டல இணை இயக்குநர், நாமக்கல் என்.கே.ஆர். அரசு மகளிர் கல்லூரி முதல்வர், கரூர் அரசு கலைக் கல்லூரி முதல்வர் உள்பட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

## சங்க இலக்கியப் பாடல்களைக் கொண்டு மாத நாள்காட்டி

- சங்க இலக்கியப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள மாத நாள்காட்டியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். சென்னை புத்தகக் காட்சியை வெளியிட்டார்.
- சங்க இலக்கியப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு, சங்க இலக்கிய மாத நாள்காட்டி, தமிழ் வளர்ச்சித் துறையின் தமிழ்ப் பரப்பரைக் கழகத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. இதில், தமிழரின் கொடை, வீரம், வாழ்வியல் நெறிமுறை, காதல், அன்பு, அறிவியல், இயற்கையுடன் இயைந்த வாழ்வு, வணிகம் என பல்வேறு பிரிவுகளின் அடிப்படையில் 12 சங்க இலக்கியப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

## பசுமை இயக்கத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு மரக்கடன்

- பசுமைத் திட்டத்தின் ஒரு பகுதியாக மரக்கடன் வழங்க வங்கிகளை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது.
- செப்டம்பர் 24, 2022 அன்று தொடங்கப்பட்ட பசுமைத்தமிழ்நாடு இயக்கம்,மாநிலத்தின் பசுமைப் பரப்பை (காடுகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள மரங்கள் உட்பட) 23.71% இல் இருந்து 33% ஆக அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், உணவுப் பயிர்கள் பயிரிடுவதைத் தவிர, மர உற்பத்தி மற்றும் அவர்களின் வருவாயைப் பெருக்க விவசாயிகளை அவர்களது விவசாய நிலங்களில் மரம் வளர்ப்பதை ஊக்குவிக்க அரசு திட்டமிட்டுள்ளது.
- காடு மற்றும் பசுமைப் பரப்பு இலக்கை அடைவதில் வேளாண் வனவியல் முக்கிய பங்கு வகிக்கிறது, மேலும் வேளாண் காடு வளர்ப்பு மரங்களை நடுவதற்கு நிதியுதவி செய்ய வங்கிகளை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.
- சிவப்பு சந்தனம் மற்றும் சந்தனம் போன்ற நீண்ட சுழற்சி பயிர்களை பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்க அரசு திட்டமிட்டுள்ளது.
- அத்தகைய மரங்களை 5 – 10 ஆண்டுகள் போன்ற குறுகிய காலத்தில் விற்க முடியாது, ஆனால் 20– 25 ஆண்டுகளுக்குப் பிறகு. இதன் மூலம் மாநிலத்தில் பசுமைப் போர்வை பராமரிக்கப்படுவதை உறுதி செய்யும்.
- மரக்கடன்கள் விவசாயிகளுக்கு நாற்றுகள், இடுபொருட்கள் மற்றும் 7-8 ஆண்டுகளுக்கு மரங்களை பராமரிக்க உதவும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

## 2022-23 இல் தமிழ்நாட்டில் பயிர்களின் அறிக்கை வெளியீடு

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- கடந்த ஆண்டை விட இந்த முறை தமிழகத்தில் பணப்பயிர்களின் பரப்பளவு அதிகமாக உள்ளது, அதே நேரத்தில் உணவுப் பயிர்களின் கவரேஜ் கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது.
- சேதத்திற்காக, கிட்டத்தட்ட 48,600 விவசாயிகளுக்கு சுமார் ₹50.88 கோடியை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

**பயிர் பரவல்**

- 2021-2022 தரவுகளுடன் 2022-23 இல் தமிழ்நாட்டில் பல்வேறு பயிர்களின் ஒப்பீடு
- சம்பா/தாளடி/பிஷாணம் பருவத்தில் நெல் சாகுபடி (லட்சம் ஹெக்டேரில்)
- *ஜனவரி 2, 2023 நிலவரப்படி

| பிராந்தியம் | இயல்பான பகுதி (5 வருட சராசரி) | இலக்கு | ஒப்பீட்டு மதிப்பு | |
|---|---|---|---|---|
| | | | 2022-23 | 2021-22 |
| காவிரி டெல்டா | 3.609 | 5.046 | 5.476 | 5.389 |
| டெல்டா அல்லாதது | 8.792 | 8.848 | 9.174 | 9.4 |
| மொத்தம் | 12.401 | 13.894 | 14.65 | 14.789 |

- குறிப்பு: டெல்டா தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களையும், கரூர், திருச்சி, கடலூர், புதுக்கோட்டை மற்றும் அரியலூர் பகுதிகளையும் உள்ளடக்கியது.
- 2022-2023ல் முக்கிய பயிர்களின் ஒட்டுமொத்த பாதுகாப்பு (லட்சம் ஹெக்டேரில்)

| பயிர் | 2022-23க்கான வருடாந்திர இலக்கு | ஒப்பீட்டு மதிப்பு | | உயர்வு (+) அல்லது குறைப்பு (-) |
|---|---|---|---|---|
| | | 2022-23 | 2021-22 | |
| நெல் | 19.7 | 19.593 | 19.836 | (-) 0.243 |
| தினை | 9.67 | 9.086 | 9.242 | (-) 0.156 |
| பருப்பு வகைகள் | 9.48 | 5.518 | 5.335 | (+) 0.183 |
| மொத்த உணவு தானியங்கள் | 38.85 | 34.197 | 34.413 | (-) 0.216 |
| பருத்தி | 1.74 | 1.275 | 1.051 | (+) 0.224 |
| கரும்பு | 1.71 | 1.467 | 1.295 | (+) 0.172 |
| எண்ணெய் வித்துக்கள் | 5.5 | 3.462 | 3.382 | (+) 0.080 |
| மொத்த விவசாய பயிர்கள் | 47.8 | 40.401 | 40.141 | (+) 0.260 |

- **ஜனவரி 2, 2023 நிலவரப்படி
- **ஆதாரம்:** மாநில விவசாயத் துறை



## பொள்ளாச்சி சாலைக்கு அருட்செல்வர் மகாலிங்கம் பெயர்

- பொள்ளாச்சியில் உள்ள புதிய திட்டச் சாலைக்கு, அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் எனப் பெயர் சூட்டப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- நா.மகாலிங்கத்தின் நூற்றாண்டு விழாவுக்கு சிறப்பு சேர்க்கக் கூடிய வகையில், பொள்ளாச்சியில் உள்ள கோவை சாலை 'அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் சாலை' எனப் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தார்.

## சென்னை மாராத்தான்

- சென்னையில் நடைபெற்ற 11-ஆவது ஃப்ரெஷ்வொர்க்ஸ் சென்னை மாராத்தான் போட்டியில் கோவை வீரர் வினோத்குமார் ஸ்ரீனிவாசன், கென்யா வீராங்கனை பிரிகித் ஜெரெண்ட் கிமித்வாய் ஆகியோர் சாம்பியன் பட்டம் வென்றனர்.
- 42 கி.மீ. தூர பந்தய இலக்கை ஆடவர் பிரிவில் வினோத்குமார் 2 மணி 37.28 நிமிஷங்களிலும், மகளிர் பிரிவில் பிரிகித் 3 மணி 31.36 நிமிஷங்களிலும் அடைந்து முதலிடம் பிடித்தனர். அவர்களுக்கான பரிசை தமிழக காவல் தறை டிஜிபி சைலேந்திர பாபு வழங்கினார்.
- இப்போட்டியில், 20 மைல், அரை மாராத்தான், 10 மைல் என மேலும் 3 பிரிவுகளிலும் பந்தயங்கள் நடத்தப்பட்டன. மொத்தமாக இந்தப் பந்தயங்களில் 20,000-க்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

## தச்சன்குறிச்சியில் தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு

- புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அருகேயுள்ள தச்சன்குறிச்சி கிராமத்தில் தமிழகத்தின் நிகழாண்டின் முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெற்றது.

**16 காளைகளை பிடித்த வீரர்**

- **16 காளைகள் அடக்கி முதலிடம் பிடித்த புதுகை வீரருக்கு இருசக்கர வாகனம் பரிசு:** ஜல்லிக்கட்டுப் போட்டியில் 16 காளைகளைப் பிடித்து முதலிடம் பிடித்த புதுக்கோட்டை மாவட்டம், தென்னலூர் கிராமத்தைச் சேர்ந்த யோகேஸ்வரன் (30) என்ற வீரருக்கு ரூ.1 லட்சம் மதிப்பிலான இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது.
- மேலும், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீதல் என்ற வீரர் 14 காளைகளைப் பிடித்து 2ஆம் பிடித்தார். அவருக்கு ரூ.6 ஆயிரம் மதிப்புள்ள மிதிவண்டி பரிசாக வழங்கப்பட்டது.

## மாநில நூலகக் குழு அமைப்பு

- மாநில நூலகக் குழு அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டது. இத்துடன் சென்னை மாநகர நூலக ஆணைக் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தக் குழு 2004-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன்பிறகு, மாற்றியமைக்கப்படவில்லை. இத்துடன் சென்னை மாவட்ட நூலகங்களை நிர்வகிக்க, மாநகர நூலக ஆணைக் குழு அமைப்பு 2010-இல் ஏற்படுத்தப்பட்டது.
- சென்னை மாநகர நூலகக் குழுவின் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் தங்களது பொறுப்புகளில் இருந்து விலகிக் கொண்டதையடுத்து, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்பட வேண்டிய இந்தக் குழு 2011-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்படுத்தப்படவே இல்லை.

## தமிழக சட்ட பேரவையிலிருந்து வெளியேறினார் ஆளுநர்

- முதல்வர் மு.க.ஸ்டாலின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக சட்டப்பேரவையிலிருந்து திடீரென ஆளுநர் ரவி வெளியேறினார்.
- தமிழக சட்டப்பேரவை வரலாற்றில் தனது உரையின் போது ஆளுநர் ஒருவர் வெளியேறுவது இதுவே முதன்முறையாகும்.

**பேரவை விதி 17**

- சட்டப்பேரவைக் கூட்டத்தில் ஆளுநர் ஆர்.என். ரவி உரையாற்றிய பிறகு, பேரவை விதி 17-ஐ தளர்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.
- அரசமைப்புச் சட்டத்தின் 175 அல்லது 176-ஆவது பிரிவின்படி, அவை கூடியிருக்கும்போது ஆளுநர் உரை நிகழ்த்துகையிலோ, நிகழ்த்துவதற்கு முன்னரோ, பின்னரோ உறுப்பினர் எவரும் தமது பேச்சாலோ, ஒழுங்கு பிரச்சனையாலோ, வேறு எவ்வகையிலோ தடுக்கவோ, குறுக்கீடு செய்யவோ கூடாது.
- அவ்வாறு தடங்கலோ, குறுக்கீடோ செய்வது பேரவையின் ஒழுங்குக்குப் பெரும் ஊறு விளைவிப்பதாகக் கருதப்படும். அடுத்து நிகழும் கூட்டத்தில் பேரவைத் தலைவரால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விதி 17-இல் கூறப்பட்டுள்ளது.

- இந்த விதியைத் தளர்த்தி, முதல்வர் மு.க.ஸ்டாலினால் சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

## மெரீனாவில் சூரிய ஒளியில் இயங்கும் புறக்காவல் நிலையம்

- சென்னை மெரீனாவில் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சூரிய ஒளி சக்தியில் இயங்கும் புறக்காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
- மெரீனா கடற்கரையில் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையிலும், பொது மக்களுக்கு உதவி செய்யும் வகையிலும் குறிப்பாக இரவு நேரங்களில், எளிதில் அடையாளம் காணும் வகையிலும் சென்னை காவல்துறையின் சார்பில் சூரிய ஒளியின் மூலம் இயங்கும் புறக்காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

## முத்ரா கடனுதவி பெற்றதில் தமிழகம் முதலிடம்

- முத்ரா கடன் உதவி பெற்ற மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக தகவல் ஒலிபரப்பு, மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்தார்.
- சுயதொழில் தொடங்கி முன்னேறுவதற்கு முத்ரா வங்கிக் கடன் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் நாட்டிலேயெ அதிக கடன் பெற்றுள்ள முதல் மாநிலமாக தமிழகம் உள்ளது. இத்திட்டத்தில் பெண்கள் தான் அதிக எண்ணிக்கையில் கடன் பெற்றுள்ளனர்.

## 2 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.318 கோடி காப்பீட்டுத் தொகை தமிழக அரசு

- இயற்கை இடர்ப்பாடுகளால் பாதிக்கப்பட்ட 2.21 லட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.318 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்கும் பணியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- கடந்த 2016-17-ஆம் நிதியாண்டில் இருந்து பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020-21-ஆம் ஆண்டில் இருந்து திட்டத்துக்கான காப்பீட்டு கட்டண மானியத்தில் மானாவாரி மாவட்டங்களுக்கு 30 சதவீதமும், பாசன வசதியுள்ள மாவட்டங்களுக்கு 25 சதவீதமும் மத்திய அரசு பங்கைச் செலுத்துகிறது.
- மாநில அரசு 60% முதல் 65% பங்களிப்பை அளிக்கிறது. இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் சார்பில் ரூ.152 கோடியும், இப்கோ-டோக்கியோ பொது காப்பீட்டு நிறுவனம் தரப்பில் ரூ.132 கோடியும் என மொத்தம் ரூ.284 கோடி இப்போது இழப்பீட்டுத் தொகையாக அளிக்கப்படவுள்ளது. இந்தத் தொகையை 2.02 லட்சம் விவசாயிகளுக்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## காவல் கரங்கள்" முயற்சி

- 'காவல் கரங்கள்' திட்டத்தின் கீழ் வட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 160 ஆதரவற்றோர் மீட்கப்பட்டனர்.

குறிப்பு

- ஏப்ரல் 2021 இல் சென்னை நகர காவல்துறையால் தொடங்கப்பட்டது.
- கருப்பொருள் : "மனிதனை மதிக்கவும்" மற்றும் "மனிதகுலத்திற்கு சேவை செய்"
- பணி: கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் கைவிடப்பட்ட/கவனிக்கப்படாத குடிமக்களை அணுகுதல்.
- இந்த முயற்சியானது 2022 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சரின் சிறந்த பயிற்சியாளர் விருதை வென்றது.

## 50 ஆயிரமாவது விவசாயிக்கு இலவச மின் இணைப்பு : முதல்வர் மு.க.ஸ்டாலின்

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் நிகழாண்டில் இலவச மின்சாரம் வழங்கப்பட்ட 50 ஆயிரம் விவசாய பயனாளர்களில் 50 ஆயிரமாவது பயனாளி உள்பட 5 நபர்களுக்கு மின் இணைப்பு ஆணைகளை முதல்வர் வழங்கினார்.
- 2022-2023-ஆம் ஆண்டு எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில், நிகழ் நிதியாண்டில் 50,000 விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, கடந்த நவம்பர் 11-இல் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் நடைபெற்ற விழாவில் முதல்வரால், 50,000 விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு அன்றைய தினமே 20,000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான ஆணைகளும் வழங்கப்பட்டது. மேலும், இத்திட்டம் 100 நாள்களுக்குள் முடிக்கப்படும் என்று அன்றைய தினம் அறிவிக்கப்பட்டது.



## மூன்று புதிய கூட்டுறவு அமைப்புகளுக்கு அமைச்சரவை ஒப்புதல்

- பல மாநில கூட்டுறவு சங்கங்கள் (MSCS) சட்டம், 2002 இன் கீழ் மூன்று புதிய கூட்டுறவு அமைப்புகளை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- அவை,
  - தேசிய பல மாநில கூட்டுறவு ஏற்றுமதி சங்கம்
  - தேசிய பல மாநில கூட்டுறவு கரிமபொருள் சங்கம்
  - தேசிய பல மாநில கூட்டுறவு விதை சங்கம்
- கரிம பொருட்கள், விதைகள் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்துவதே அவர்களின் நோக்கம்
- இந்தச் சங்கங்கள் சான்றளிக்கப்பட்ட மற்றும் உண்மையான கரிமப் பொருட்களை வழங்குவதன் மூலம் கரிமத் துறை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை நிர்வகிக்கும்.
- உச்ச அமைப்பு: விதை கூட்டுறவு சங்கம்

**பல மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 2002 பற்றி**

- குறிக்கோள்: கூட்டுறவுகளின் தன்னார்வ உருவாக்கம் மற்றும் ஜனநாயக செயல்பாடுகளை மக்கள் நிறுவனங்களாக எளிதாக்குவது அவர்களின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கும் செயல்பாட்டு சுயாட்சியை வழங்குவதற்கும்.

## சேது சமுத்திர திட்டம்: பேரவையில் தீர்மானம்

- சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- இந்தத் தீர்மானத்தை பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்தார்.
- கடந்த 1860-ஆம் ஆண்டில் ரூ.50 லட்சம் செலவில் உருவாக்கப்பட்ட மகத்தான திட்டம்தான் சேது சமுத்திர கால்வாய் திட்டம். அதன்பிறகு 1955-இல் தமிழ்நாட்டின் சிறந்த நிபுணர் டாக்டர் ஏ.ராமசாமி முதலியார் குழு, 1963-இல் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டம், 1964-இல் அமைக்கப்பட்ட அரசு அதிகாரி நாகேந்திரசிங் தலைமையிலான உயர்நிலைக் குழு உள்ளிட்ட பல்வேறு பொறியியல் வல்லுநர்களால் பல ஆண்டு காலம் ஆராய்ந்து வடிவமைக்கப்பட்டதுதான் சேது கால்வாய் திட்டமாகும். இதன் வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் பணிகளை மேற்கொள்ள திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- 1998-ஆம் ஆண்டு தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின்போது, திட்டத்துக்கான சாத்தியக்கூறு அறிக்கைக்கு அப்போதைய பிரதமர் வாஜ்பாய் அனுமதி அளித்தார். அப்போதுதான் சேது சமுத்திர திட்டத்தின் வழித்தடம் எது என்பதும் இறுதி செய்யப்பட்டது.
- 2004-ஆம் ஆண்டில் ரூ.2,427 கோடி மதிப்பீட்டில் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதன் பின், 2005-ஆம் ஆண்டு ஜூலை 2-ஆம் தேதி திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது.
- முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு தலைமையில் கடந்த 1963-ஆம் ஆண்டு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேது சமுத்திர திட்டம் இடம்பெற்றது. 1972-ஆம் ஆண்டு தூத்துக்குடி துறைமுக நுழைவு வாயிலில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் சிலையைத் திறந்து வைக்க பிரதமர் இந்திரா காந்தி வந்தார். அப்போது, சேது சமுத்திர திட்டத்தை முன்னாள் முதல்வர் கருணாநிதி வலியுறுத்தினார்.
- சேது சமுத்திர கால்வாய் திட்டம் நிறைவேற்றப்பட்டால் தமிழ்நாட்டில் தொழில் வணிகம் பெருகும். கப்பல்களின் பயண தொலைவு, நேரம் பெருமளவு குறையும். தமிழ்நாடு மற்றும் அண்டை மாநில துறைமுகங்களில் சரக்குகளைக் கையாளும் திறன் அதிகரிக்கும். சிறு சிறு துறைமுகங்களை உருவாக்க முடியும். சேது கால்வாய் திட்டத்தின் கீழ், மீன்பிடித் துறைமுகங்கள் மேம்படுத்தப்படுவதால், கடல்சார் பொருள் வர்த்தகம் பெருகி, அதன் காரணமாக மீனவர்களின் பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் உயரும்".

## உணவுப் பகுப்பாய்வுக்கு நடமாடும் வாகனங்கள்

- உணவுப் பாதுகாப்பு ஆய்வுகளை மேற்கொள்ள நடமாடும் பகுப்பாய்வு வாகனங்களை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைத்தார்.
- உணவு பொருள்களில் கலப்படத்தை தவிர்ப்பதற்கும், உணவின் தரத்தை தொடர்ந்து கண்காணிப்பதற்கும், சென்னை, சேலம், கோவை, மதுரை, பாளையங்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய ஆறு இடங்களில் உணவு பகுப்பாய்வு கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- இந்த ஆய்வகங்களில் கடந்த 2021 முதல் 2022 வரை, 34,980 உணவு மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, தரமற்ற 9,671 உணவு கண்டறியப்பட்டது. அதன் அடிப்படையில் 6,542 வழக்குகள் தொடரப்பட்டன.
- அந்த வழக்குகளின் கீழ் உரிமையியல் நீதிமன்றத்தின் வாயிலாக ரூ.6.17 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
- மேலும், குற்றவியல் நீதிமன்றத்தில் 1,264 வழக்குகள் தொடரப்பட்டு, ரூ.2.18 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.
- தற்போது, கோவை, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் பயன்பாட்டுக்காக ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் நான்கு நடமாடும் உணவு பகுப்பாய்வக வாகனங்கள் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

## அரசுப் பணிகளுக்கு தமிழ் கட்டாயம் பேரவையில் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றம்

- தமிழகத்தில் அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கும் போதே தமிழ் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, பேரவையில் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது.
- சட்டப்பேரவையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டத் திருத்த மசோதா 2023–ஐ கொண்டு வந்தார்.
- 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தில் திருத்தம் செய்யும் இந்த மசோதாவின் 21–ஆவது பிரிவின்படி, எவரும் மாநிலத்தின் அலுவல் மொழி அதாவது, தமிழ் குறித்த போதிய அறிவு பெற்றிருந்தாலன்றி, அவர் நேரடி ஆள்சேர்ப்பு மூலம் பணி எதிலும் நியமனம் செய்யத்தகுதி உடையவர் இல்லை.
- மாநிலத்தில் உள்ள அனைத்து மாநில அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் தமிழ் இளைஞர்களை நூறு சதவீதம் அளவுக்கு ஆள்சேர்ப்பு செய்வதை உறுதி செய்யும் வகையில், திருத்த மசோதாவின் 21–ஏ பிரிவின்படி, ஆள்சேர்ப்பு முகமைகள் நடத்தும் நேரடி ஆள்சேர்ப்புக்கான அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தாள் அறிமுகப்படுத்தப்பட்டு 40 சதவீத மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற வேண்டும். அதற்கு இணங்க 2021, டிசம்பர் 1 தேதியிட்ட அரசாணைகள் மனிதவள மேலாண்மைத் துறை மூலம் வெளியிடப்பட்டன. அந்த ஆணைக்கு சட்டபூர்வ பயனை அளிக்கும் வகையில் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## கொசு ஒழிப்பு பணியில் 6 ட்ரோன் இயந்திரங்கள்

- சென்னை மாநகராட்சிக்குள்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்புப் பணிக்காக 200 கைத்தெளிப்பான்கள் மற்றும் 6 ட்ரோன் இயந்திரங்களை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.

## தமிழகத்தில் சிறந்த காவல் நிலையமாக திருப்பூர் வடக்கு காவல் நிலையம் தேர்வு

- திருப்பூர் வடக்கு காவல் நிலையம், தமிழ்நாட்டின் சிறந்த காவல் நிலையமாக தேர்வு செய்யப்பட்டது.
- தமிழ்நாடு காவல்துறையில் கீழ் செயல்படும் காவல் நிலையங்களில், சிறப்பாக செயல்படும் காவல்நிலையங்கள் கண்டறியப்பட்டு, அவற்றுக்கு சென்னையில் ஜனவரி 26–ஆம் தேதி அரசு சார்பில் குடியரசுத் தின விழாவில் தமிழக முதல்வர் விருது வழங்கப்படுவது வழக்கமாகும்.
- இதற்காக சிறந்த காவல் நிலையங்களை கண்டறிவதற்கு ஒரு ஐஜி அல்லது ஏடிஜிபி தலைமையில் தேர்வுக்குழு அமைக்கப்படும்.
- இந்த தேர்வு குழு, மாநிலம் முழுவதும் மாநகரம் மற்றும் மாவட்ட காவல்துறைகளால் சிறந்த காவல் நிலையங்களாக பரிந்துரை செய்யப்படும், காவல் நிலையங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்வார்கள்.

## தமிழக பாஜக தலைவர் அண்ணாமலைக்கு "இஸட்" பிரிவு பாதுகாப்பு

- தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலையின் பாதுகாப்பை, 'எக்ஸ்' பிரிவில் இருந்து 'இஸட்' பிரிவுக்கு மத்திய அரசு மேம்படுத்தியுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.
- 'இஸட்' பிரிவு பாதுகாப்பின் கீழ், அவருக்கு 24 மணிநேரமும் சுழற்சி அடிப்படையில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் (சிஆர்பிஎஃப்) 30 கமாண்டோக்கள் பாதுகாப்பு அளிப்பார்கள்; இந்தியா முழுவதும் அவர் எங்கு சென்றாலும் பாதுகாப்பு வாகனமும் உடன் செல்லும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
- மிக முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பணியின் கீழ், மத்திய ரிசர்வ் போலீஸ் படை சுமார் 100 பேருக்கு பாதுகாப்பு வழங்கி வருகிறது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் இந்தப் பாதுகாப்பில் உள்ளனர்.



## தமிழகத்தில் முதன்முறையாக திருநங்கைக்கு கிராம உதவியாளர் பணி

- தமிழகத்திலேயே முதன்முறையாக தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை, கிராம உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், கிராம உதவியாளர் பணிக்கான தேர்வு அண்மையில் நடைபெற்றது. இந்தத் தேர்வில் தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் பகுதியைச் சேர்ந்த திருநங்கை ஸ்ருதி தேர்வு செய்யப்பட்டார்.

## அடுத்த ஆண்டில் அமெரிக்காவில் 5–ஆவது உலகத் திருக்குறள் மாநாடு

- ஐந்தாவது உலகத் திருக்குறள் மாநாடு 2024–ஆம் ஆண்டின் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.
- 5–ஆவது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு 2024–ஆம் ஆண்டு முற்பகுதியில் அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடைபெறவுள்ளது. இதற்கு முன்னர் கன்னியாகுமரி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தில்லியில் 4 மாநாடுகள் நடைபெற்றன.
- தற்போது நடைபெறவுள்ள 5–ஆவது மாநாட்டை சென்னையிலுள்ள ஆசியவியல் நிறுவனமும், சிகாகோ தமிழ்ச் சங்கமும், அமெரிக்கா உலகத் தமிழ் மாமன்றமும் இணைந்து நடத்துகின்றன.
- அடுத்து வரும் 6–ஆவது மாநாடு, ஆசியாவில் ஏதாவது ஒருநாட்டிலும், 7–ஆவது மாநாடு பிரான்ஸிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கை

- பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு அண்மையில் மாநிலங்களினுடைய வளர்ச்சிநிலை குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ள சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கையில் 63.3 புள்ளிகளைப் பெற்று, இந்தியாவின் பெரிய மாநிலங்களில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில், தமிழகத்தின் பங்கு 9.22 சதவீதம்; இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பு 8.4 சதவீதம்; ஜவுளித் துறை ஏற்றுமதியில் 19.4 சதவீதம்; கார்கள் ஏற்றுமதியில் 32.5 சதவீதம்; தோல் பொருள்கள் ஏற்றுமதியில் 33 சதவீதம்.

## 2024–இல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு: முதல்வர் அறிவிப்பு

- தமிழக அரசின் சார்பில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் 2024, ஜனவரியில் 2 நாள்கள் நடைபெறும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேரவையில் அறிவித்தார்.
- சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் ஜனவரி 9–இல் தொடங்கியது. ஆளுநர் உரை மீதான விவாதத்தில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இரண்டு நாள்கள் பேசினர். அவற்றுக்குப் பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேரவையில் 50 நிமிஷங்கள் உரையாற்றினார்.
- முதல்வரின் கிராமப்புற சாலைத் திட்டம்: கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் முக்கிய ஊராட்சி ஒன்றியச் சாலைகளை வலுப்படுத்தவும், தரம் உயர்த்தவும், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்தும்.
- முதல் கட்டமாக 2 ஆண்டுகளில் 10,000 கி.மீ. ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.
- பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இரண்டாவது பெரிய மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.
- முதலீடுகளைப் பெருமளவில் ஈர்த்து, லட்சக்கணக்கான தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும், மாநிலப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் 2030–ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இலக்கை நிர்ணயித்தேன்.

## தேசிய துப்பாக்கி சுடும் போட்டி: தமிழக காவல் துறை முதலிடம்

- சென்னை அருகே ஒத்திவாக்கத்தில் நடைபெற்ற மாநில காவல் துறைகளுக்கு இடையிலான

துப்பாக்கி சுடும் போட்டியில் முதலிடம் வென்ற தமிழ்நாடு காவல் துறை அணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதக்கம் வழங்கினார்.

- இப்போட்டியில் 8 மத்திய காவல் அமைப்புகள், 24 மாநில காவல் துறைகள் ஆகியவற்றின் சார்பில் 32 அணிகளில் இருந்து 673 வீரர்கள் பங்கேற்றனர். 30 வகையான துப்பாக்கி சுடும் போட்டியில் மொத்தம் 8,356 முறை வீரர்கள் சுட்டனர்.
- தனிநபர் பிரிவில் தமிழக காவல் துறையின் சார்பில் பங்கேற்ற பழனி ஆயுதப் படை காவலர் ரா.சதி சிவனேஷ் 207 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்தார். மத்திய காவல் அமைப்பு இல்லாத மாநில காவல் துறையைச் சேர்ந்த ஒரு காவலர் முதலிடத்தைப் பிடிப்பது இதுவே முதல் முறையாகும். இவருக்கு அடுத்தபடியாக எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ரஞ்சித் ஹண்டிக் 206 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தை பிடித்தார்.
- ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை அசாம் ரைபிள்ஸ் அணியும், இரண்டாமிடத்தை தமிழ்நாடு காவல் துறை அணியும், மூன்றாமிடத்தை சிஆர்பிஎஃப் அணியும் பெற்றன. ஒட்டுமொத்த பிரிவில் தமிழ்நாடு காவல் துறை இரண்டாமிடம் பிடிப்பது இதுவே முதல் முறையாகும்.
- மத்திய பாதுகாப்புப் பிரிவு அணிகள் அல்லாமல் மாநில காவல் துறைகளுக்கு இடையேயான போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை தமிழககாவல் துறைபெற்றது. இரண்டாமிடத்தை ராஜஸ்தானும், மூன்றாமிடத்தை ஒடிஸாவும் பெற்றன

## காவல், சீருடைப் பணியாளர்கள் 3,184 பேருக்கு முதல்வரின் பதக்கம்

- காவல் துறை மற்றும் பிற சீருடைப் பணியாளர்கள் 3,184 பேருக்கு முதல்வரின் பதக்கங்கள் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.
- தமிழகத்தில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தமது பணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற செயல்பாட்டை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் திருநாளன்று தமிழக முதல்வரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.
- நிகழாண்டு காவல் துறையில் (ஆண்/பெண்) காவலர் நிலை–2, காவலர் நிலை–1, தலைமைக் காவலர், ஹவில்தார் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைகளில் 3,000 பணியாளர்களுக்கு தமிழக முதல்வரின் காவல் பதக்கங்கள் வழங்க முதல்வர் ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.
- மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் முன்னணி தீயணைப்போர் (சிறப்பு நிலைய அலுவலர்), ஓட்டுநர்–மெக்கானிக் (சிறப்பு நிலைய அலுவலர் (போக்குவரத்து) மற்றும் தீயணைப்போர் (தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர்) ஆகிய நிலைகளில் 118 அலுவலர்களுக்கும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் முதல் நிலை வார்டர்கள் (ஆண்) மற்றும் இரண்டாம் நிலை வார்டர்கள் (ஆண்/பெண்) நிலைகளில் 60 பேருக்கும் தமிழக முதல்வரின் சிறப்புப் பணி பதக்கங்கள் வழங்க முதல்வர் ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.
- மேற்படி பதக்கங்கள் பெறுபவர்களுக்கு நிலை வேறுபாடின்றி மாதாந்திர பதக்க படி ரூ. 400, 2023 பிப்ரவரி 1–ஆம் தேதி முதல் வழங்கப்படும்.
- காவல் வானொலி பிரிவு, மோப்ப நாய் படைப்பிரிவு மற்றும் காவல் புகைப்படக் கலைஞர்கள் பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் என ஒவ்வொரு பிரிவிலும் 2 நபர்கள் என மொத்தம் 6 அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு தமிழக முதல்வரின் காவல் தொழில்நுட்ப சிறப்புப் பணி பதக்கம் வழங்கப்படும்.

## போகிப் பண்டிகையின்போது மிதமான காற்று மாசு: அமைச்சர் மெய்யநாதன்

- போகிப் பண்டிகையன்று சென்னையில் காற்று மாசு 14 மண்டலங்களில் மிதமான அளவிலும், ஒரு மண்டலத்தில் மோசமான அளவிலும் பதிவாகி உள்ளதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.
- இந்த ஆண்டு போகிப்பண்டிகையின் போது ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு குறித்து, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொண்டது. போகிப் பண்டிகையின் போது சென்னையின் சுற்றுச்சூழல், காற்றின் தரத்தினை கண்காணிப்பு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய ஆய்வகத்தின் மூலம் 15 இடங்களில் 24 மணி நேரமும் காற்று மாதிரி சேகரிப்பு செய்து ஆய்வு செய்யப்பட்டது.
- சுற்றுச்சூழல் காற்று தரத்தினை அளவீடு செய்ததில், காற்றில் கலந்துள்ள கந்தக–டை–ஆக்ஸைடு, மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு ஆகிய வாயுக்களின் அளவு அனைத்து 15 மண்டலங்களிலும் அனுமதிக்கப்பட்ட (24 மணி நேர சராசரி) தர அளவான 80 மைக்ரோகிராம் / கனமீட்டருக்குட்பட்டு இருந்தது.
- காற்று மாசு குறைந்தபட்சமாக அண்ணாநகரில் 135 மைக்ரோகிராமாகவும் (மிதமான அளவு) அதிகபட்சமாக வளசரவாக்கத்தில் 277 மைக்ரோகிராமாகவும் (மோசமான அளவு) இருந்ததாகப் பதிவாகியுள்ளது.

## உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு: அமைச்சர் கா.ராமசந்திரன்

- உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்தார்.
- கடந்த ஆண்டு மட்டும் 12 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், 11 கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயிணிகளும் தமிழ்நாட்டுக்கு வந்து சென்றுள்ளனர். உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

## தமிழகத்தில் முதல் முறையாக சர்வதேச புத்தகக் காட்சி

- தமிழகத்தில் முதல் முறையாக சர்வதேச புத்தகக்காட்சி சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் ஜனவரி 16 முதல் ஜனவரி 18–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.
- பள்ளிக் கல்வித் துறையின் பொது நூலக இயக்ககம், தமிழ்நாடு பாடநூல், கல்வியியல் பணிகள் கழகம் ஆகியவை இணைந்து இந்த புத்தகக் காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன.
- உலகில் நவீன புத்தகக் காட்சி முதல் முறையாக ஜெர்மனியில் (ஃப்ராங்க்பர்ட் புத்தகக் காட்சி) கடந்த 1949–ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. தற்போது இதுதான் உலகின் பெரிய புத்தகக்காட்சியாக விளங்குகிறது.
- இந்தப் புத்தகக் காட்சியில் இந்தோனேஷியா, தான்சானியா, உகாண்டா, மலேசியா, துருக்கி, சிங்கப்பூர், வங்கதேசம், இத்தாலி உள்ளிட்ட 30–க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கவுள்ளன. தினமும் காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறும். மொத்தம் 66 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு அரங்கிலும் அந்த நாட்டின் நினைவுச் சின்னம், சிறந்த புத்தகங்கள் இடம்பெற்றிருக்கும். சர்வதேச புத்தகக் காட்சியை பார்வையிட பொதுமக்களுக்கு மாலை 4 மணி முதல் 7 மணி வரை அனுமதி வழங்கப்படவுள்ளது.

## ஆதரவற்ற விலங்குகளுக்காக வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டம்

- ஆதரவற்ற விலங்குகள் பராமரிப்புக்காக வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டத்தை கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தொடக்கி வைத்தார்.
- ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் காயமடைந்து தெருவில் சுற்றித் திரியும் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளை பராமரிக்கும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், பிராணிகள் துயர்துடைப்பு சங்கங்கள், பிராணிகள் சேவை நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டமாகும்.
- வள்ளலாரின் 200–ஆவது பிறந்த ஆண்டை முன்னிட்டு இந்தப் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பிராணிகள் துயர் துடைப்பு சங்கம், பிராணிகள் நலன் தொடர்பான அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் விலங்குகள் நல அமைப்புகள் என 5 அமைப்புகளுக்கு தலா ரூ.88 லட்சத்து 5 ஆயிரம் நிதியுதவியை முதல்வர் வழங்கினார். மொத்தம் ரூ.2 கோடியே 14 லட்சம் வழங்க நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

## சென்னையில் சர்வதேச புத்தகக் காட்சி

- சென்னையில் சர்வதேச புத்தகக் காட்சியை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடக்கி வைத்தார்.
- பள்ளிக்கல்வித்துறையின் பொது நூலக இயக்ககம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் தமிழகத்தில் முறையாக சர்வதேச புத்தகக் காட்சி சென்னையில் தொடங்கியுள்ளது.
- ரூ. 1.5 கோடி நிதி ஒதுக்கீடு: தமிழ் இலக்கியங்களை உலகளவில் எடுத்துச் செல்லவும், மற்ற நாடுகளில் உள்ள புத்தகங்களை இங்கே கொண்டு வரவும் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட வேண்டும். இதற்காக ரூ.1.5 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் ஏராளமான புத்தகங்கள் இருந்தாலும், இதுவரை 100 புத்தகங்கள் மட்டுமே மொழிபெயர்க்கப்பட்டு வெளிநாடுகளுக்கு சென்றடைந்துள்ளன. இதைக் கருத்தில் கொண்டு முதல் கட்டமாக 30 முதல் 50 தமிழ்ப் புத்தகங்களை வெளிநாட்டு மொழிகளுக்கு மொழிபெயர்க்கத் திட்டமிட்டுள்ளோம்.

**106 மொழிகளில் பிரம்மாண்ட திருக்குறள் புத்தகம்!**

- சர்வதேச புத்தகக் காட்சியில் மொத்தம் 66 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.
- அதில் அமெரிக்கா, மலேசியா, துருக்கி, இந்தோனேசியா, தான்சானியா உட்பட 30 வெளிநாடுகளின் அரங்குகளும் அடங்கும். அவற்றில் அந்தந்த நாடுகளின் புகழ்பெற்ற நூல்கள் இடம்பெற்றுள்ளன.
- இதுதவிர 'தமிழ் முற்றம்' என்ற பெயரில் அரங்குகளில் தமிழகத்தின் பிரபலமான புத்தகங்கள், எழுத்தாளர்களின் படைப்புகள் வைக்கப்பட்டுள்ளன.
- அதேபோல், கண்காட்சியில் பிரம்மாண்ட திருக்குறள் புத்தகம் நுழைவுவாயில் அருகே இடம்பெற்றுள்ளது. அதில் 106 திருக்குறள்கள் மற்றும் அதன் விளக்கங்கள் தமிழ் மற்றும் பிற மொழிகளில் (106 மொழிகள்) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## சர்வதேச தரத்தில் புதுப்பொலிவு பெறும் சென்னை ஏரிகள்

- சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (சிஎம்டிஏ) சார்பில் சென்னையில் உள்ள ஏரிகள் சர்வதேச தரத்தில் புதுப்பொலிவு பெற உள்ளன.
- முதல்கட்டமாக ரூ.100 கோடி மதிப்பில் சென்னையில் உள்ள முக்கியமான 10 ஏரிகளை மேம்படுத்தும் பணியில் சிஎம்டிஏ ஈடுபட்டுள்ளது.
- இந்தியாவின் 3–ஆவது பெரிய நகரமான சென்னை மாநகராட்சி 426 சதுர கி.மீ. பரப்பளவில் 1 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்டுள்ளது. தற்போது விடுமுறை நாள்களை கழிக்கும் வகையில் சென்னை மெரீனா, பெசன்ட் நகர் கடற்கரைகள் உள்ளன. மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுமக்கள் தினமும் பயன்படுத்தும் வகையில் 525 பூங்காக்கள் உள்ளன. மேலும், 100 புதிய பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளதாக மாநகராட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளன.

## வீட்டுமனை உட்பிரிவுகளுக்கு மென்பொருள்

- வீட்டுமனைகளுக்கான உட்பிரிவுகளை ஒட்டுமொத்தமாக உருவாக்கி, பட்டா மாறுதல் செய்யும் வகையில் உருவாக்கப்பட்ட புதிய மென்பொருளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைப் பிரிவில் பொது மக்கள் மனைகளை கிரயம் பெறும் போது, ஒவ்வொரு மனுதாரருக்கும் உட்பிரிவு செய்ய, தனித்தனியாக மனுக்கள் பெறப்படுகின்றன. ஒரேமனைப் பிரிவில் உள்ள வீட்டு மனைகளை நிலஅளவை செய்து உட்பிரிவு செய்வதற்காக நில அளவர் பல்வேறு தினங்களில் தனித்தனியாக செல்ல வேண்டிய சூழல் உள்ளது.
- **நில ஆவணங்கள்:** வருவாய் கிராமங்கள் நகர மயமாதலுக்குப் பிறகு நகர்ப்புறத் தன்மையை அடைகின்றன. இதனால், புதிய நகர நில அளவை எண்கள் உருவாக்கப்படுகின்றன. இந்தப் பணிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் 15 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்பு பணிகள்

- சென்னையில் சுமார் 5 ஏக்கர் பரப்பில் கடந்த 1975–76–ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வள்ளுவர் கோட்ட வளாகத்தில் திருக்குறள் ஆய்வரங்கம், நூலகம், திருக்குறள் மணிமாடம், கல்சிற்ப தேர் ஆகியன அமைந்துள்ளன.
- மேற்கூரை மற்றும் பழுதடைந்த கான்கிரீட் தூண்கள் புனரமைப்பது, குறள்மணி மாடம் புதுப்பிப்பது, 1,490 பேர் அமரக் கூடிய வகையில் நவீன உள்ளரங்கம் அமைப்பது, நவீன வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட திருக்குறள் ஆய்வு மையம் மற்றும் நூலகம் அமைத்தல், நவீன உணவுக் கூடம் என பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

## மறுபதிப்பு செய்யப்பட்ட 108 அரிய பக்தி நூல்கள்

- சென்னை நுங்கம்பாக்கத்தில்ள உள்ள அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் பதிப்பகப் பிரிவு புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பதிப்பகப் பிரிவின் மூலம் முதல் கட்டமாக, தமிழ் மொழி வல்லுநர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு, மறுபதிப்பு செய்து புதுப்பொலிவுடன் நூலாக்கம் செய்யப்பட்டுள்ள இந்துசமயம் சார்ந்த தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருப்பாவை, திருவெம்பாவை, அபிராமி அந்தாதி, நாலாயிரதிவ்யபிரபந்தம், தமிழகக் கலைகள், சைவமும் தமிழும், இந்தியக் கட்டடக் கலை வரலாறு, பதினெண் புராணங்கள் உள்ளிட்ட 108 அரிய நூல்கள் வெளியீட்டு விழா சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.



## கைப்பேசிக்கான இயங்குதளம்: சென்னை ஐஐடி கண்டுபிடிப்பு

- 'ஆண்ட்ராய்டு– ஐஓஎஸ்' உள்ளிட்ட வெளிநாட்டு இயங்குதளங்களுக்கு நிகராக உள் நாட்டிலேயே கைப்பேசிக்கென பிரத்யேக இயங்குதளத்தை (BharOS service) சென்னை ஐஐடி ஆராய்ச்சிக் குழுவினர் கண்டறிந்துள்ளனர்.
- ஐஐடி சார்பில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த இயங்குதளத்தின் சேவை தற்போது கடுமையான தனியுரிமை, பாதுகாப்புத் தேவைகளைக் கொண்ட நிறுவனங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.
- இதன் பயனர்கள் கைப்பேசிகளில் வரையறுக்கப்பட்ட செயலிகளில் ரகசியத் தகவல் தொடர்புகள் தேவைப்படும் போது அவற்றைக் கையாள இதனைப் பயன்படுத்துகின்றனர்.
- இதைத் தொடர்ந்து விரைவில் இந்த இயங்குதளம் 100 கோடி மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

## உலகப் பொருளாதார மன்ற கூட்டத்தில் தமிழ்நாடு பங்கேற்பு

- அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு, உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அரசுத் துறை உயரதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.
- சுவிட்சர்லாந்தில் உள்ள டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டம் கடந்த 16–ஆம் தொடங்கியது. வரும் 20–ஆம் தேதி வரை கூட்டம் நடைபெற உள்ளது.
- தமிழ்நாடு அரசின் சார்பில், சர்வதேச முதலீட்டாளர் மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

## தமிழகத்தில் காவலர்களின் வாரிசுகளுக்கு 10% இடஒதுக்கீடு

- தமிழக காவல்துறை பணிகளில் காவலர்களின் வாரிசுகளுக்கு 10 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கிய மாநில அரசின் ஆணையை உச்சநீதிமன்றம் உறுதி செய்து உத்தரவிட்டது.
- தமிழக காவல் துறையில் காவலர்களின் மன உறுதியை அதிகரிக்கவும், நேர்மையை ஊக்கப்படுத்தவும் அவர்களின் வாரிசுகளுக்கு காவலர் பணியில் 10 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் முறை தமிழகத்தில் கடந்த 2001–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

## அடிப்படைக் கணிதத்தில் திணறும் தமிழக மாணவர்கள் ஆய்வில் தகவல்

- தமிழக கிராமப்புறங்களில் 5, 8–ஆம் வகுப்புகளில் பயிலும் பெரும்பாலான மாணவர்களால் வகுத்தல் கணக்குகளை சரியாகச் செய்யும் திறன் பெறவில்லை; ஆங்கில வாசிப்பிலும் தமிழக மாணவர்கள் பின்தங்கியுள்ளனர் என ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 'பிரதம்' எனும் கல்வி அமைப்பு 2006–ஆம் ஆண்டு முதல் தேசிய அளவில் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கல்வித் திறனை ஆய்வு செய்து ஆண்டுதோறும் அறிக்கை வெளியிட்டு வருகிறது.
- இந்த 'கல்வி நிலை குறித்த ஆண்டறிக்கை' (ஏஸர்) என்று அழைக்கப்படுகிறது. அதன்படி, 2022–ஆம் ஆண்டுக்கான 'ஏஸர்' கல்வி அறிக்கை சென்னையில் வெளியிடப்பட்டது.

**முக்கிய அம்சங்கள்**

- நாடு முழுவதும் உள்ள 616 கிராமப்புற மாவட்டங்களில் 6.9 லட்சம் மாணவர்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழகத்தில் மட்டும் 30,737 குழந்தைகளிடம் ஆய்வு நடத்தப்பட்டது.
- அதன்படி, கரோனா தொற்றுக்குப் பின்னும் தமிழகத்தில் பள்ளி மாணவர் சேர்க்கை 99.8 சதவீதமாக உள்ளது. குறிப்பாக, அரசுப் பள்ளி சேர்க்கை 75.7 சதவீதமாக உள்ளது.
- இது 2018–ஆம் ஆண்டைவிட 8.3 சதவீதம் அதிகம். அதேபோல, 2010–ஆம் ஆண்டில் 9.6 சதவீதமாக இருந்த பள்ளி செல்லா பெண் குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது ஒரு சதவீதமாகக் குறைந்துள்ளது.
- தமிழக கிராமப்புறங்களில் 8–ஆம் வகுப்பில் 37 சதவீதமும், 5–ஆம் வகுப்பில் 75 சதவீதமும், 3–ஆம் வகுப்பில் 95 சதவீதமும் மாணவர்கள் 2–ஆம் வகுப்பு புத்தகங்களை படிக்க இயலாதவர்களாக உள்ளனர்.
- அடிப்படை கணிதத்தைப் பொருத்தவரை 5–ஆம் வகுப்பில் 85 சதவீதம் பேரும், 8–ஆம் வகுப்பில் 55 சதவீதம் மாணவர்களாலும் வகுத்தல் கணக்குகளை சரியாக செய்ய முடியவில்லை. ஆங்கில வாசிப்புத் திறனிலும் தமிழக மாணவர்கள் பின்தங்கியுள்ளனர்.
- இதுதவிர 2018–இல் 91.1 சதவீதமாக இருந்த பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது 88.8 சதவீதமாக குறைந்துவிட்டது.
- தமிழகத்தில் மதிய உணவுத் திட்டம் 99.6 சதவீதம் மாணவர்களுக்கு சென்றடைகிறது. 9.2 சதவீதம் பேருக்கு குடிநீர் வசதியும், 1.2 சதவீதம் பேருக்கு கழிப்பறை வசதியும் இல்லை.

- கழிப்பறை இருந்தும் பயன்படுத்த முடியாத நிலையில் 16 சதவீத கழிப்பறைகள் உள்ளன. மேலும், 20 சதவீத பள்ளிகளில் நூலக வசதி இல்லாததும், 56 சதவீத கிராமப்புற மாணவர்களுக்கு கணினி வசதி பள்ளிகளில் இல்லாததும் அந்த கல்வி அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

## கடல்கீழ் பூம்புகார் நகரத்தின் வயது 15,000 ஆண்டுகள்!

- பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பூம்புகார் ஆய்வுத்திட்ட முடிவுகளை வெளியிட்டு இந்தியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் மிகச் சிறந்த துறைமுக நகராக விளங்கிய பூம்புகார் நகரம், கிழக்கே தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனும், மேற்கே எகிப்து வரையிலும் கடல்சார் வாணிபத் தொடர்புகளை கொண்டிருந்தது. பூம்புகார் நகர் சோழ மன்னர்களால் சுமார் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டு, 1,000 ஆண்டுகளுக்கு முன்பு திடீரென மாயமானதாகக் கூறப்படுகிறது. பூம்புகார் பற்றிய பல விஷயங்கள் புதிராகவே உள்ளன.
- மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை ஒதுக்கிய ரூ.8.9 கோடியில், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தலைமையில் 12 நிறுவனங்கள் ஒன்றிணைந்து கடந்த 2019 முதல் பூம்புகார் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.
- இதில், காவிரி பகுதிகள் இந்திய செயற்கைக்கோள் படங்கள் மூலமும், கடல்கீழ் பகுதிகள் ஜெஇபிசிஓ (பல்துறை சார் கடல்கீழ் தரைமட்ட அளவு), எம்பிஇஎஸ் (ஒலிசார்கடல்கீழ் தரைமட்ட அளவீடு) மூலமும் ஆராயப்படுகிறது.

## 5 கோயில்களில் அரசு சார்பில் மகா சிவராத்திரி விழா

- ஐந்து கோயில்களில் அரசு சார்பில் மகா சிவராத்திரி விழா நடைபெற உள்ளது என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.
- 1,000 ஆண்டுகள் கடந்த புராதன கோயில்களைப் பாதுகாக்கும் வகையில் 2022-23 சட்டப் பேரவை அறிவிப்பின்படி ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 104 திருக்கோயில்களில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- மருதமலை கோயில் ரோப் கார் திட்டத்துக்கான ஒப்பந்தம் கடந்த 5 -ஆம் தேதி கோரப்பட்டது. அதில் 3 ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர். இன்னும் ஒரு மாதத்துக்குள் ஒப்பந்தம் இறுதியாகி பணியாணை வழங்கப்படும்.

## காவல் துறையின் காவல் கரங்கள் திட்டத்துக்கு விருது

- சென்னை காவல்துறையின் காவல் கரங்கள் திட்டத்துக்கு ஸ்காட்ச் விருது கிடைத்துள்ளது.
- ஸ்காட்ச் குழும நிறுவனம் கடந்த 2022-ஆம் ஆண்டுக்கான ஸ்காட்ச் விருதுக்காக அறிவிப்பு செய்திருந்தது. இந்த விருதுக்கு, சென்னை பெருநகர காவல் துறையில் ஆதரவற்றோரை மீட்கும் வகையில் அமல்படுத்தப்படும் காவல் கரங்கள் திட்டம், சிறாரை நல்வழிப்படுத்தும் சிற்பி திட்டம், மகிழ்ச்சித் திட்டம் உள்ளிட்ட 5 திட்டங்கள் முன்மொழியப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.
- இந்த ஸ்காட்ச் விருது ஆரம்ப நிலை, அரை இறுதி நிலை, இறுதி நிலை என கட்டமாக நடத்தப்பட்டது. இதற்காக நியமிக்கப்பட்டிருந்த நிபுணர்கள் குழுக்கள் அனைத்து செயல்திட்டங்களையும் மதிப்பீடு செய்தனர்.
- அவர்களுக்காக அனைத்து செயல் திட்டங்களும் சென்னை பெருநகர காவல்துறை சார்பாக விரிவாக விளக்கப்பட்டிருந்தது. மேலும் பொதுமக்கள் சார்பாக இணையவழி முறையில் வாக்களிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் பொதுமக்களும் வாக்களித்தனர்.

## சென்னையில் ஆமைகள் பாதுகாப்பு, மறுவாழ்வு மையம்: தமிழக அரசு

- சென்னையில் ஆமைகளைப் பாதுகாப்பதற்கான தனித்துவமான மையத்தை ஏற்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- நீளமான கடற்கரைப் பகுதியைக் கொண்ட தமிழ்நாட்டில் 5 வகையான ஆமை இனங்கள் உயிர் வாழ்கின்றன. இவற்றில் ஆலிவ்ரிட்லி வகை ஆமைகள் குறிப்பிடத்தக்கவை. இந்த வகை ஆமைகளைக் காக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, கடந்த 1974-ஆம் ஆண்டுகளிலேயே ஆமைகளுக்கான குஞ்சு பொறிப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- மையத்தின் செயல்பாடுகள்: ஆமைகளைக் காப்பதற்கான பல்வேறு நோக்கங்களைக் கொண்டு செயல்படுத்தப்படும். அதன்படி, காயம் ஏற்படக் கூடிய ஆமைகளை உடனடியாக மீட்டு அவற்றுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படும். நல்ல முறையில் குணமடைந்த ஆமைகள் திரும்பவும் கடலுக்குள் விடப்படும். ஆமைகளை சட்ட விரோதமாகக் கடத்துவதுடன், அதனை வணிக நோக்கில் விற்பவர்கள் குறித்த விவரங்களைப் பெற சிறப்பான புலனாய்வு அமைப்பு ஏற்படுத்தப்படும். இந்தப் பணியானது, தமிழ்நாடு வனம் மற்றும் வனவிலங்கு குற்றத் தடுப்பு முகமையின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும்.
- தமிழ்நாட்டில் கடலோரப் பகுதிகளில் ஆமைகள் முட்டையிடும் இடங்கள், அவை நகரக்கூடிய பாரம்பரிய பகுதிகள் ஆகியன கண்டறியப்படும். கடலில் இருக்கக் கூடிய ஆமைகளின் பெருக்கம் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.
- இந்தக் கண்காணிப்புப் பணியில் கடலில் மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்களும் ஈடுபடுத்தப்படுவர்.

## 'நீலக்கொடி' தகுதியைப் பெறுகிறது சென்னை கடற்கரை!

- சென்னையில் சுற்றுலாவை மேம்படுத்தும் பொருட்டு, மெரீனா முதல் கோவளம் வரையான கடற்கரைப் பகுதி "நீலக்கொடி" தகுதியைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- டென்மார்க் நாட்டின் சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை, உலகம் முழுவதும் கடற்கரைகளை ஆய்வு செய்து அதற்கு நீலக்கொடி கடற்கரை தகுதியை வழங்கி வருகிறது. நீலக்கொடி கடற்கரைகள் திட்டத்தின்படி, கடற்கரை சுற்றியுள்ள பகுதிகள் பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையில் பாதுகாப்புடனும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையிலும் அமைக்கப்படும்.
- தற்போது இந்தியாவில் 10 நீலக்கொடி கடற்கரைகள் உள்ளன. தமிழகத்தின் கோவளம் கடற்கரை இந்த நீல கொடித் தகுதியை ஏற்கெனவே பெற்றுள்ளது.
- இந்தியாவில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் கடற்கரையின் சுற்றுச்சூழல் மற்றும் அழகியல் மேலாண்மை சேவைகள் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இது நீலக் கொடி என்ற சர்வதேச சுற்றுச்சூழல் தகுதியை பெறுவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.
- முதல் கட்டமாக சென்னை மெரீனா முதல் கோவளம் கடற்கரை வரையில் 20 கடற்கரைகள் 31 கி.மீ. தொலைவில் மேம்படுத்தப்படவுள்ளன.
- இந்தக் கடற்கரைகளை ஒன்றிணைக்கும் வகையில் சிஎம்டிஏ சார்பில் ரூ.100 கோடி மதிப்பில் திட்டம் தயாரிக்கப்பட்டு கடந்த ஆண்டு ஜூலை 25-இல் தேதி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டது.

## குட்கா, பான் மசாலா தடை ரத்து: சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

- உணவுப் பாதுகாப்பு, தரச் சட்டத்தின் கீழ் குட்கா, பான் மசாலா உள்ளிட்ட புகையிலைப் பொருள்களுக்கு தடை விதித்து உணவுப் பாதுகாப்பு ஆணையர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.
- கடந்த 2006-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச்சட்டத்தின் கீழ், தமிழகத்தில் குட்கா, பான் மசாலா, சுவையூட்டப்பட்ட புகையிலைப் பொருள்களுக்குத் தடைவிதித்து உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையர் உத்தரவு பிறப்பித்தார். ஆண்டுதோறும் இதுதொடர்பான அறிவிப்பாணைகளும் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

## ரயில்வே, அஞ்சல் துறை இணைந்து புதிய பார்சல் சேவை

- தமிழகத்தில் முதன்முறையாக ரயில்வே, அஞ்சல் துறை இணைந்து புதிய பார்சல் சேவையை, கோவையில் இருந்து தொடங்கியது.
- 'ஜாய்ண்ட் பார்சல் ப்ராடக்ட்' எனப்படும் புதிய பார்சல் சேவையில் வீடுகளில் இருந்து ரயில் நிலையத்துக்கு பார்சல்களை கொண்டு வரும் பணிகள் மற்றும் ரயில் நிலையங்களில் இருந்து உரிய இடத்துக்கு பார்சல்களை கொண்டு சேர்க்கும் பணிகளை அஞ்சல் துறை மேற்கொள்ளும்.

## பௌலர்களை கண்டறியும் திட்டம்: அஸ்வின்

- தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் (டிஎன்சிஏ) சார்பில் திறமையான பௌலர்களை கண்டறியும் திட்டத்தை இந்திய அணியின் ஸ்பின்னர் அஸ்வின் ரவிச்சந்திரன் தொடக்கி வைத்தார்.
- தமிழகம் முழுவதும் இருந்து ஸ்பின்னர்கள், மீடியம் பேஸர்களை உருவாக்கும் வகையில் புதிய திட்டத்தை டிஎன்சிஏ அறிமுகம் செய்துள்ளது. இதன்படி திறன் மிக்கவர்களை கண்டறியவும், சிறந்த பௌலர்களை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.
- மீடியம் பேஸர்கள், ஸ்பின்னர்கள் சிறப்புத்தேர்வு 13 மாவட்ட மையங்களில் நடைபெறவுள்ளது. 14 மற்றும் 24 வயதுக்குள்பட்டவர்கள் இதில் பங்கேற்கலாம்.

- தேர்வில் பங்கேற்கும் வீரர்கள், 3 ஆண்டுகளில் எந்த வயதுப் பிரிவிலும், ஒருங்கிணைந்த மாவட்ட அணிக்காக ஆடியிருக்கக் கூடாது.

## மத நல்லிணக்கம் பேணுபவருக்கு பதக்கம்

- கார் வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து, கோவையில் மதநல்லிணக்கம் பேண தொடர்ந்து பணியாற்றி வரும் இஸ்லாமியருக்கு, மத நல்லிணக்கத்துக்கான 'கோட்டை அமீர் பதக்கத்தை குடியரசு தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
- கோவை கோட்டைமேடு பகுதியைச் சேர்ந்த எம்.ஏ.இனயத்துல்லாவுக்கு இந்த பதக்கத்தை அவர் அளித்தார்.
- மிகப்பெரிய அளவில் ஏற்படவிருந்த விபத்துகளை தடுத்து நிறுத்திய காரணத்தால், அரசு ஊழியர்கள் பிரிவின் கீழ், வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கத்தை இவ்விருவருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
- பொது மக்கள் பிரிவில் மூன்று பேருக்கு பதக்கம் வழங்கப்பட்டது. வெவ்வேறு சம்பவங்களில் ஆற்றில் அடித்துச் செல்லப்படவிருந்த உயிர்களைக் காப்பாற்றியதற்காக தூத்துக்குடி மாவட்டம் ஜெ.அந்தோணிசாமி, கன்னியாகுமரி மாவட்டம் நா.ஶ்ரீகிருஷ்ணன், தஞ்சாவூர் மாவட்டம் அ.செல்வம் ஆகியோருக்கு வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் அளிக்கப்பட்டது. இந்தப் பதக்கம் தலா ரூ. 1 லட்சத்துக்கான காசோலையும், ரூ.9 ஆயிரம் மதிப்பிலான தங்க முலாம் பூசப்பட்ட பதக்கமும், சான்றிதழும் அடங்கியது.
- **கோட்டை அமீர் பதக்கம்:** மதநல்லிணக்கத்தைப் பேணிக் காத்து வருவோருக்கு கோட்டை அமீர் மதநல்லிணக்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. இதன்படி, கோயம்புத்தூர் கோட்டைமேடு எஸ்.எஸ்.கோவில் தெருவைச் சேர்ந்த எம்.ஏ.இனயத்துல்லாவுக்கு இந்த பதக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்தார். கடந்த ஆண்டு கோவையில் நடந்த கார் வெடிப்பைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் மத நல்லிணக்கம் பேண நடவடிக்கைகளை எடுத்ததற்காக இவருக்கு கோட்டை அமீர் பதக்கம் வழங்கப்பட்டது.
- **காந்தியடிகள் காவலர் பதக்கம்:** கள்ளச்சாராயம் உள்பட போதைப் பொருள்களை கட்டுப்படுத்தும் பணியில் தீவிரம் காட்டும் காவல் அலுவலர்களுக்கு வழங்கப்படும் காந்தியடிகள் காவலர் பதக்கம் சென்னை மாவட்ட மத்திய நுண்ணறிவுப் பிரிவு தலைமையக காவல் ஆய்வாளர் த.அ.பிரியதர்ஷினி, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் ஆய்வாளர் கா.ஜெயமோகன், சேலம் மண்டலம் மத்திய நுண்ணறிவுப் பிரிவு உதவி ஆய்வாளர் ச.சகாதேவன், விழுப்புரம் மண்டலம் மத்திய நுண்ணறிவுப் பிரிவு உதவி ஆய்வாளர் பா.இனாயத் பாஷா, செங்கல்பட்டு மாவட்டம் பாலூர் காவல் நிலைய தலைமைக் காவலர் சு.சிவனேசன் ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்தார். இது தலா ரூ.40 ஆயிரத்துக்கான காசோலை, பதக்கம் அடங்கியது.
- **சிறந்த காவல் நிலையம்:** சிறந்த காவல் நிலையத்துக்கான முதலமைச்சரின் விருதுகளையும் முதல்வர் அளித்தார். முதல் இடத்துக்கான கோப்பை, திருப்பூர் வடக்கு காவல்நிலைய ஆய்வாளர் நா.உதயகுமாருக்கும், இரண்டாவது இடத்துக்கான கோப்பை, திருச்சி கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் தயாளனுக்கும், மூன்றாவது இடத்துக்கான கோப்பை, திண்டுக்கல் காவல் நிலைய ஆய்வாளர் சேது.பாலாண்டிக்கும் வழங்கப்பட்டது.

## தெற்கு ரயில்வேயின் 87% ரயில் பாதை மின்மயமாக்கம்

- தெற்கு ரயில்வேயின் 87 சதவீத ரயில் பாதைகள் மின் மயமாக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங் தெரிவித்தார்.
- தெற்கு ரயில்வே சார்பில் சென்னை பெரம்பூரில் உள்ள ரயில்வே மைதானத்தில்74–ஆவது குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. இதில் தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ரயில்வே பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அவர் பேசியதாவது:
- அனைத்து துறைகளிலும் தெற்கு ரயில்வே வளர்ச்சி அடைந்துள்ளது. ரயில் பாதைகளை மேம்படுத்தும் பணிகள் கடந்த நிதியாண்டை விட 2022–23–இல் 250 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2022–ஆம் ஆண்டில் மட்டும் 188 கி.மீ. ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளன. தெற்கு ரயில்வேயில் இதுவரை (டிசம்பர் 31) 87 சதவீதம் (4,393 கி.மீ) ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளன.
- நிகழ் நிதியாண்டில் (ஏப்ரல் முதல் டிசம்பர்) மொத்த வருவாயில் 47.46 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. இதே காலகட்டத்தில் சரக்கு ரயில் சேவை 28 சதவீதம் அதிகரித்துள்ளது.



- நேரம் தவறாமல் இருப்பதற்கான ரயில்வே வாரியத்தின் இலக்கான 92 சதவீதத்தைவிட இந்த நிதியாண்டு 93.2 சதவீதம் பதிவுசெய்துள்ளது. தெற்குரயில்வே சார்பில் 16 ரயில்களுக்கு பழைய ஐசிஎப் பெட்டிகளுக்கு பதிலாக நவீன எல்எச்பி பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.
- **பழைமையான நீராவி என்ஜின்:** குடியரசு தினத்தின் பாரம்பரியத்தைக் கொண்டாடும் வகையில் உலகின் பழைமையான நீராவி என்ஜின் இஐஆர்–21 சென்னை எழும்பூர் மற்றும் கோடம்பாக்கம் இடையே இயக்கப்பட்டன. சுமார் 167 ஆண்டுகள் பழைமையான இந்த என்ஜினை தெற்கு ரயில்வே மேலாளர் ஆர்.என் சிங் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

## அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு: காவல் துறை, 2 துறைகளுக்கு பரிசு

- குடியரசு தின விழாவில் அரசுத் துறைகளின் சாதனைகளை விளக்கி அணிவகுத்த அலங்கார ஊர்திகளில் காவல் துறை உள்பட 3 துறைகள் முதல் மூன்று இடங்களைப் பிடித்தன.
- அரசுத் துறைகளின் திட்டங்கள், சாதனைகளை பறைசாற்றும் வகையில் பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்த 22 அலங்கார ஊர்திகள் அணிவகுத்தன.
- கல்லூரி மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய், காலை உணவுத் திட்டம் போன்ற அரசின் திட்டங்களைத் தாங்கி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த ஊர்திக்கு மூன்றாம் இடம் வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை வித்து நிதி

- தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை வித்து நிதியை (TNESSF) தொடங்கி வைத்தார்.
- நிறுவனங்களின் இணக்கம் மற்றும் நிதி கண்காணிப்பு அமைப்பையும் அவர் தொடங்கி வைத்தார்.
- TNESSF இன் கீழ், E–சந்தை என்னும் பழங்கள் மற்றும் காய்கறிகள் விநியோகத்திற்கான வணிகத்திலிருந்து வணிக டிஜிட்டல் தளத்திற்கு ₹1 கோடி வழங்கப்பட்டது.

TNESSF பற்றி:

- இது செபியில் பதிவு செய்யப்பட்ட வகை I (வென்ச்சர் கேபிடல்) மாற்று முதலீட்டு நிதியாகும்.
- **குறிக்கோள்:** வளர்ந்து வரும் புதிய துறைகளான ஸ்டார்ட் அப்கள் மற்றும் நிறுவனங்களில் முதலீடு செய்வது.

## தமிழ்நாடு அரசு ஐந்து SC/ST ஸ்டார்ட்– அப்களுக்கு ₹7.5 கோடி பங்கு முதலீடுகளை அனுமதித்தது

- எஸ்சி/எஸ்டி ஸ்டார்ட் அப் நிதியின் கீழ் தமிழ்நாடு அரசு ₹7.5 கோடியை அனுமதித்துள்ளது.
- இந்த நிதி பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினரில் திட்டமிடப்பட்ட தொழில்முனைவோரால் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படும்ஐந்து தொடக்க நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு SC/ST தொடக்க நிதி பற்றி

- இது ஒரு பங்கு முதலீடு மற்றும் கடன் நிதியாகும்.
- 2022–23 பட்ஜெட்டில் StartupTN மூலம் அரசாங்கம் ₹30 கோடியை நிதியாக ஒதுக்கியது.

TANDIM/StartupTN பற்றி

- தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு தொடக்க மற்றும் புத்தொழில் கொள்கை 2018–2023 ஆனது StartupTN எனப்பெயர் மாற்றப்பட்டுள்ளது.
- தொலைநோக்கு: 2023க்குள் தமிழ்நாட்டை உலகளாவிய கண்டுபிடிப்பு மையமாகவும், ஸ்டார்ட்அப்களுக்கு மிகவும் விருப்பமான இடமாகவும் மாற்றுதல்
- **நோக்கம்:** தமிழ்நாட்டில் புதுமையான சுற்றுச்சூழல் மற்றும் வளர்ப்பு அமைப்பை ஸ்டார்ட்அப்களுக்கு வழங்குதல்.

## மாவட்ட வாரியாக முதல்வர் கள ஆய்வு

- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், 'மாவட்டம் வாரியாக முதல்வர் கள ஆய்வு' என்ற புதிய திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்.
- முதல் கட்டம் – வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்.

"மாவட்ட வாரியாக முதல்வர் கள ஆய்வு" பற்றி

- **குறிக்கோள்:** பல்வேறு துறைகளின் மறுஆய்வுக் கூட்டங்களின் போது களப் பார்வையின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துதல்.
- இத்திட்டத்தின் கீழ், முதலமைச்சர் முக்கிய அமைச்சர்கள் மற்றும் செயலாளர்களுடன் மாவட்டங்களுக்குச் செல்வார்.

- பல்வேறு துறைகள் , நிர்வாக மற்றும் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்வார்.

## MGNREGA வில் தமிழகம் 3வது இடம்

- தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டம் மனித நாட்களை உருவாக்குவதில் 3வது இடத்தில் உள்ளது மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் (MGNREGA) கீழ் கிராமப்புற வீடுகளுக்கு 100 நாட்களுக்கு வேலை வழங்குகிறது.
- ஒடிசாவில் உள்ள கங்கம் மாவட்டம் முதலிடத்திலும் ராஜஸ்தானில் உள்ள பார்மேரா மாவட்டம் இரண்டாவது இடத்திலும் உள்ளது.

MGNREGA பற்றி:

- ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 2005 ல் தொடங்கப்பட்டது
- **நோக்கம்:** கிராமப்புற மக்களின் வாங்கும் திறனை மேம்படுத்துதல், முதன்மையாக இந்தியாவின் கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களுக்கு அரை அல்லது திறமையற்ற வேலை வழங்குதல்.
- **குறிக்கோள்:** கிராமப்புற வீடுகளுக்கு ஒவ்வொரு நிதியாண்டிலும் 100 நாட்கள் வேலைவாய்ப்பை உத்தரவாதப்படுத்துதல்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII EDUCATIONAL INSTITUTIONS SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்